வெளியீடு 15-6-2005

Issued 15-6-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 4, 2005—தொகுதி 68—எண் 1

Friday the 4th February, 2005 —Volume 68—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

ve Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31 P05
P05.68.1.
226628

[Price Rs. 3.00

322/2005

**4-2-2005**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 5) | 1-43 |
| **2. மறைவுற்ற உறுப்பினர் திரு. கே. சுதர்சனம் குடும்பத்திற்கும் மற்றவர்க்கும் நிதியுதவி வழங்கியது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம்—** | 43-46 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 47 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 47 |
| (இ) மனுக்கள் குழு | 47 |

பக்கங்கள்


4. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி 48-178

திரு. கே.என். இலட்சுமணன் 56-59,60,61-62

திரு. ஜி. பழனிசாமி 49,63-70,72-83

திரு. கே.சி. கருணாகரன் 49, 55, 84-91,93-101

திரு. ஜி.கே. மணி 101-111, 114-121, 123-128

*திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் 128-157, 159-177

5. **தகவல் கோரல்**—

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு 48

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 178-179




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

தமிழ்நாட்டு ... 226628 சென்னை-600 018



10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்சசி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | - **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | - **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. | **Minister for Finance** | - **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. | **Minister for Law and Information Technology** | - **The Hon Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |
| 5. | **Minister for Food and Co-operation** | - **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**<br>Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P. C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |
| 7. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 8. **Minister for Health** | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Health, Medical Education and Family Welfare. |
| 9. **Minister for Rural Industries** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board. |
| 10. **Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 11. **Minister for Transport and Electricity** | .. | **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development. |
| 12. **Minister for Industries** | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:** Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru K. Pandurangan:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 14. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru Se. Ma. Velusamy:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 15. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P. V. Damodhiran:** Animal Husbandry. |
| 16. **Minister for Forests and Environment** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 17. **Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 18. **Minister for Education and Commercial Taxes** | .. | **The Hon. Thiru C. Ve. Shanmugam:** Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes. |
| 19. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |

**20. Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**
Handlooms and Textiles.

**21. Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

**22. Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.

**23. Minister for Labour** .. **The Hon. Thiru P. Annavi:**
Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

**24. Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**
Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply.

**25. Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**
Sports and Youth Welfare.

– – –



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள்#

திரு. ப. இராஜரெத்தினம்
திரு. அ. அன்வர் ராஜா
திருமதி சி. எம். சூரியகலா
திரு. லா. சந்தானம்
டாக்டர் தே. குமாரதாஸ்
முனைவர் செ. கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. செ. ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. வெ. சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ஊ. கு. சுப்பிரமணியன், எம்.ஏ. - குழு அலுவலர்

திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ஏ. எம். பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். - குழு அலுவலர்



திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். - குழு அலுவலர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கோ. தேவராஜன், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. - தலைமை நிருபர்

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. - பேரவைத் தலைவரின் தனிச் செயலர்

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. - சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். - தலைமை நிருபர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. - தலைமை நிருபர்

செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கே. எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. - சார்புச் செயலாளர்

திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. - சார்புச் செயலாளர்

திரு. த. ர. நாகராஜன், எம்.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. கோ. சுப்புராம், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. மு. கதிரேசன, எம்.ஏ. - தலைமை நிருபர்

# பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. - திருவாரூர் (செ.வ.)
2. அண்ணாதுரை, திரு. செ. - ஜெயங்கொண்டம்
3. அண்ணாமலை, திரு. கு. - தென்காசி
4. அண்ணாவி, திரு. ப. - தொட்டியம்
5. அப்பாவு, திரு. மு. - ராதாபுரம்
6. அய்யாறு வாண்டையார், திரு. கே. - திருவையாறு
7. அரசன், திரு. ப. - அறந்தாங்கி
8. அருணாசலம், திரு. அ. - வரகூர் (செ.வ.)
9. அருள், திரு. பி.எஸ். - புவனகிரி
10. அழகம்மாள், திருமதி வி. - தலைவாசல் (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. - திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. ஆ.கு.சி. - பெரணமல்லூர்
13. அன்பழகன், திரு. கு. - நிலக்கோட்டை (செ.வ.)
14. அன்பழகன், திரு. கே. பி. - பாலக்கோடு
15. அன்பழகன், திரு. ஜெ. - தியாகராய நகர்
16. அன்பழகன், பேராசிரியர் க. - துறைமுகம்
17. அன்பில் பெரியசாமி, திரு. - திருச்சிராப்பள்ளி-2
18. அன்வர் ராஜா, திரு. அ. - இராமநாதபுரம்
19. ஆண்டிவேல், திரு. ப. - வேடசந்தூர்

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே. ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி. கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே. பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி. ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே. என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா. தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. வி. - மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்

| | | |
|---|---|---|
| 67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. | - | அரூர் (செ.வ.) |
| 68. கிருஷ்ணன், திரு. ஆர். | - | அந்தியூர் (செ.வ.) |
| 69. குமாரதாஸ், டாக்டர் தே. | - | கிள்ளியூர் |
| 70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. | - | ஆண்டிமடம் |
| 71. கோதண்டராமன், திரு. ஜி. | - | முகையூர் |
| 72. கோபிநாத், திரு. கே. | - | ஓசூர் |
| 73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். | - | விருத்தாசலம் |
| 74. கோவிந்தராஜ், திரு. வெ. | - | கிருஷ்ணகிரி |
| 75. கோவை தங்கம், திரு. | - | வால்பாறை (செ.வ.) |
| 76. சக்திவேல் முருகன், திரு. எம். | - | அம்பாசமுத்திரம் |
| 77. சக்ரபாணி, திரு. ஆர். | - | ஒட்டன்சத்திரம் |
| 78. சசிகலா, திருமதி ஆர். | - | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. | - | ஸ்ரீவைகுண்டம் |
| 80. சண்முகம், திரு. சி. | - | பூந்தமல்லி |
| 81. சண்முகம், திரு. சி.வி. | - | திண்டிவனம் |
| 82. சண்முகவேலு, திரு. சி. | - | உடுமலைப்பேட்டை |
| 83. சந்தானம், திரு. லா. | - | உசிலம்பட்டி |
| 84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். | - | இராணிப்பேட்டை |
| 85. சந்திரமோகன், திரு. நா. | - | சீர்காழி (செ.வ.) |
| 86. சந்திரன், திரு. வீ. | - | சிவகங்கை |
| 87. சம்பத், திரு. எம்.சி. | - | நெல்லிக்குப்பம் |
| 88. சரவணன், திரு. துரை. கி. | - | சிதம்பரம் |
| 89. சரோஜா, திருமதி இரா. | - | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 90. சாமி, திரு. ஆர். | - | மேலூர் |



| | | |
|---|---|---|
| 91. சாமிநாதன், திரு. மு.பெ. | - | வெள்ளக்கோவில் |
| 92. சிதம்பரம், திரு. ப. | - | பவானிசாகர் |
| 93. சிவகாமி, திருமதி வி. | - | தாராபுரம் (செ.வ.) |
| 94. சிவசாமி, திரு. கே.கே. | - | அருப்புக்கோட்டை |
| 95. சிவசாமி, திரு. சி. | - | திருப்பூர் |
| 96. சிவசுப்பிரமணியன், திரு. டி. என். | - | கரூர் |
| 97. சிவபுண்ணியம், திரு. வை. | - | மன்னார்குடி |
| 98. சிவபெருமாள், திரு. அ. | - | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 99. சிவராஜ், திரு. சு. | - | ரிஷிவந்தியம் |
| 100. சின்னசாமி, திரு. மா. | - | பழனி (செ.வ.) |
| 101. சீனிவேல், திரு. எஸ்.எம். | - | திருப்பரங்குன்றம் |
| 102. சுதர்சனம், திரு. டி. | - | திருவள்ளூர் |
| 103. சுந்தரம், திரு. பி. ஆர். | - | ராசிபுரம் |
| 104. சுந்தராம்பாள், திருமதி செ. | - | மேட்டூர் |
| 105. சுப்பிரமணியன், திரு. வீ. | - | கண்டமங்கலம் (செ.வ.) |
| 106. சுப்பையா பாண்டியன், திரு. எம். | - | கடையநல்லூர் |
| 107. சூரியகலா, திருமதி சி.எம். | - | குடியாத்தம் |
| 108. செம்மலை, திரு. செ. | - | ஓமலூர் |
| 109. செல்லையா, திரு. வி.ஏ. | - | மருங்காபுரி |
| 110. செல்வம், திரு. எஸ்.கே. | - | வீரபாண்டி |
| 111. செல்வராஜ், திரு. ஏ.கே. | - | மேட்டுப்பாளையம் |
| 112. செல்வி முருகேசன், திருமதி | - | காங்கேயம் |
| 113. சேகரன், திரு. கே.என். | - | திருவெறும்பூர் |
| 114. சேகர்பாபு, திரு. பி.கே. | - | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |

| | | | |
|---|---|---|---|
| 115. | சோமசுந்தரம், திரு. வி. | - | உத்திரமேரூர் |
| 116. | ஞானசேகரன், திரு. சி. | - | வேலூர் |
| 117. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | - | திருநாவலூர் |
| 118. | தமிழரசன், முனைவர் செ.கு. | - | நன்னிலம் (செ.வ.) |
| 119. | தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | - | மேல்மலையனூர் |
| 120. | தம்பிதுரை, டாக்டர் மு. | - | பர்கூர் |
| 121. | தவமணி, திரு. க. | - | திருவிடைமருதூர் |
| 122. | தளவாய் சுந்தரம், திரு. ந. | - | கன்னியாகுமரி |
| 123. | தனபால், திரு. ப. | - | சங்கரி (செ.வ.) |
| 124. | தாமோதரன், திரு. எஸ். | - | விருதுநகர் |
| 125. | தாமோதரன், திரு. செ. | - | கிணத்துக்கடவு |
| 126. | தாமோதிரன், திரு. ப.வெ. | - | பொங்கலூர் |
| 127. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - | பேராவூரணி |
| 128. | துரைமுருகன், திரு. | - | காட்பாடி |
| 129. | துரைராஜ், திரு. சி. | - | சேடப்பட்டி |
| 130. | தென்னரசு, திரு. கே.எஸ். | - | ஈரோடு |
| 131. | நடராசன், திரு. வது. | - | இளையான்குடி |
| 132. | நடராஜன், திரு. அ. | - | குத்தாலம் |
| 133. | நடராஜன், திரு. எஸ். | - | நாட்ராம்பள்ளி |
| 134. | நடராஜன், திரு. பி.கே.டி. | - | ஆத்தூர் |
| 135. | நயினார் நாகேந்திரன், திரு. | - | திருநெல்வேலி |
| 136. | நரசிம்மன், திரு. பி.எம். | - | பள்ளிப்பட்டு |
| 137. | நளினி மனோகரன், திருமதி | - | போளூர் |



| | | | |
|---|---|---|---|
| 138. | நன்மாறன், திரு. என். | - | மதுரை கிழக்கு |
| 139. | நீலகண்டன், திரு. ப. | - | ஆற்காடு |
| 140. | நீலமேகவர்ணம், திரு. லெ. | - | சாத்தான்குளம் |
| 141. | நெப்போலியன், திரு. து. | - | வில்லிவாக்கம் |
| 142. | பச்சைமால், திரு. கே. டி. | - | குளச்சல் |
| 143. | பதினெட்டாம்படியான், திரு. க. | - | முதுகுளத்தூர் |
| 144. | பரணிகுமார், திரு. பா. | - | திருச்சிராப்பள்ளி-1 |
| 145. | பரிதி இளம்வழுதி, திரு. | - | எழும்பூர் (செ.வ.) |
| 146. | பவானி கருணாகரன், திருமதி கே. | - | அரக்கோணம் (செ.வ.) |
| 147. | பழனிசாமி, திரு. கே.எஸ். | - | பெருந்துறை |
| 148. | பழனிசாமி, திரு. ஜி. | - | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 149. | பழனியப்பன், திரு. பெ. | - | மொரப்பூர் |
| 150. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - | குறிஞ்சிப்பாடி |
| 151. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | - | பெரியகுளம் |
| 152. | பாண்டுரங்கன், திரு. கே. | - | அணைக்கட்டு |
| 153. | பாப்பாசுந்தரம், திரு. அ. | - | குளித்தலை |
| 154. | பாரமலை, திரு. க. | - | மானாமதுரை (செ.வ.) |
| 155. | பாரிமோகன், திரு. இ. | - | தருமபுரி |
| 156. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | - | கடலாடி |
| 157. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | - | தொண்டாமுத்தூர் |

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்

159. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்

160. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி

161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி

162. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

163. புகழேந்தி, திரு. இ. - கடலூர்

164. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)

165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)

166. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்

167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி

168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

169. பொன்னம்பலம், திரு. டி.பி. - சமயநல்லூர் (செ.வ.)

170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு

171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)

172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)

173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

174. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு

175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

176. மணி, திரு. டி. - விளவங்கோடு

177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்

178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை

179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி

180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. - கடலூர்

182. முரளிதரன், திரு. கே.வி. - தளி

183. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)

184. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்

185. முனுசாமி, திரு. கா.பு. - காவேரிப்பட்டினம்

186. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

187. மோகன், திரு. ப. - சின்னசேலம்

188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

189. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்

190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை

191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்

192. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்

193. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை

194. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி

195. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்

196. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்

197. ராஜகோபால், திரு. ஆ - சிவகாசி

198. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி

199. ராஜா, திரு. எச். - காரைக்குடி

200. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்

201. ராஜூ, திரு. எச்.எம். - உதகமண்டலம்

202. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்

203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

204. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
205. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
206. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
207. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
208. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
210. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
211. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
212. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
216. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
217. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
218. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I
219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
220. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
223. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி



227. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
230. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
231. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
233. (வெற்றிடம்) - காஞ்சிபுரம்
234. (வெற்றிடம்) - கும்மிடிப்பூண்டி
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - மாநில அரசுத் தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 22, தாரண-திருவள்ளுவர் ஆண்டு 2036
## 2005 பிப்ரவரி 4, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**
*"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"*

*நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.*

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிடாத வினாக்கள்
#### (பட்டியல் 5)*

1—

#### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 17792—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, விடையூர் கிராமத்திலுள்ள கோயில் நிலத்தில் சுமார் 30 ஆண்டுகளாக குடியிருந்து வரும் குடியிருப்புதாரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருவள்ளூர் வட்டம், விடையூர் கிராமத்தில் புல எண் 449/2ல் 0.10.5 ஏர்ஸ் நிலத்தில் 10 நபர்கள் கூரை மற்றும் ஓட்டு வீடுகள் மூலம் குடியுள்ளார்கள். மேற்படி நபர்கள் குடியுள்ள இடம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான பட்டா நிலம் ஆகும். மேற்படி நிலம் இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிலம் கோயில் பெயரில் பட்டா உள்ளதால் வரன்முறை செய்து பட்டா வழங்கிட வழிவகை இல்லை.

2—

## இலவச பட்டா வழங்குதல்

**வினா எண் 23801—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், மண்டலநாயனகுண்டா ஊராட்சியில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு சர்வே எண் 129, 130 ஆகிய இடங்களில் இலவச பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், மண்டலநாயனகுண்டா ஊராட்சியில் ஆதிதிராவிடர் இனத்தினைச் சேர்ந்தவர்களுக்கு புல எண் 129, 130 ஆகிய இடங்களில் நில எடுப்பு செய்து மனைப் பட்டா வழங்க கோரிய மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லாததால் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கில்லை.



3—

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 31256—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் உள்ள தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்காக முக்குன்றம் ஊராட்சி புல எண் 66—ல் உள்ள 2 எக்டேர் ஏர் 43 நிலத்தை வீட்டுமனைப் பட்டாவாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரம், முக்குன்றம் ஊராட்சியில் தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் வீட்டுமனைப் பட்டா கோரும் புல எண் 66/1-ல் உள்ள நிலத்தின் விஸ்தீரணம் 2.11.5 எக்டேர். இப்புலம் "ருத்ரமானி கசம்" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி புலத்தில் கட்டட தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதை ஆட்சேபித்து, திரு. என். சீனிவாசலு, திரு. தூர்வாசலு, திரு. பாலாஜி ஆகியோர் குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 584/2000, 580/2000, 561/2000 எண்களில் வழக்கு தொடுத்துள்ளனர். வழக்கு நிலுவையில் உள்ளது. தவிரவும் "கசம்" என்பது நீர்நிலைப் புறம்போக்கு வகையைச் சோந்த தடை செய்யப்பட்ட நிலமாகும். தடை செய்யப்பட்ட புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

4—

## கள்ளச்சாராய வழக்குகள்

**வினா எண் 33317—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் பகுதியில் கள்ளச்சாராயம் பெருகி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) இவ்வாண்டு இது தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ), (ஆ) மற்றும் (இ) காட்டுமன்னார்கோயில் பகுதியில் கடந்த 2003 ஆம் ஆண்டு 01—01—2003 முதல் 31—12—2003 வரை,* உள்ளூர் மற்றும் மதுவிலக்கு காவல் ஆகியோர் இணைந்து தீவிர மதுவிலக்கு வேட்டை நடத்தி கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | உள்ளூர் காவல் | மது விலக்கு காவல் | மொத்தம் |
|---|---|---|---|
| (i) கள்ளச்சாராயம் காய்ச்சியவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 16 | 22 | 38 |
| (ii) கள்ளச்சாராயம் விற்பனை செய்தவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 163 | 103 | 266 |
| (iii) கள்ளச்சாராயம் வைத்திருத்தல் மற்றும் கடத்தியவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 697 | 359 | 1056 |
| (iv) தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | 4 | 5 | 9 |
| (v) கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | | | |
| ஆண் | 577 | 397 | 974 |
| பெண் | 77 | 871 | 948 |
| மொத்தம் | 654 | 484 | 1138 |
| (vi) கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராயத்தின் கொள்ளளவு (லிட்டரில்) | 45814 | 24600 | 70414 |
| (vii) கைப்பற்றப்பட்ட ஊறலின் கொள்ளளவு (லிட்டரில்) | 8960 | 10300 | 19260 |
| (viii) கைப்பற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | 97 | 17 | 114 |



தொடர்ந்து காட்டுமன்னார்கோயில் பகுதியில் மதுவிலக்கு வேட்டைகள் நடத்தப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

5—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 33818—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், ஜமீன் எளம்பள்ளி கிராமத்தில் சாலையோரத்தில் குடியிருக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், எளம்பள்ளி கிராமத்தில் சஎண் 222, 223 மற்றும் 251 நெடுஞ்சாலைப் புறம்போக்கில் 17 குடும்பங்கள் வீடுகள் கட்டியும், கடைகள் வைத்தும் அனுபவம் செய்து வருகிறார்கள். இவர்களில் ஐந்து குடும்பங்கள் மட்டும் இலவச வீட்டுமனைப் பட்டா பெற தகுதியானவர்கள். மற்றவர்கள் அனைவருக்கும், சொந்தமாக வேறு இடத்தில் வீடும், பட்டா நிலமும் உள்ளன. மேற்படி சாலைப் புறம்போக்கில் அரசு பேருந்துகளும், தனியார் பேருந்துகளும், சரக்கு லாரிகளும் அடிக்கடி சென்று வரும் சாலை. இந்தச் சாலை பிற்காலத்தில் விஸ்தரிப்பு செய்ய வேண்டி வரும். மேற்படி சாலைப் புறம்போக்கில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. இலவச வீட்டுமனைப் பட்டா பெற தகுதியான ஐந்து நபர்களும் சம்மதித்தால் வேறு இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்யப்படும்.

**6—**

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

' **வினா எண் 34823—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த கே. பாப்பாரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மோட்டூர் கிராமத்தில் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி வசித்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கே. பாப்பாரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மோட்டூர் கிராம புல எண் 113/3 புஞ்சை தரிசு நில பாகத்தில் 73 நபர்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**7—**

### பொது மக்களுக்கு இலவச பட்டா வழங்குதல்

**வினா எண் 38707—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி, வார்டு எண் 18, காமராஜ் நகர் மற்றும் சீனிவாச நகர் பகுதியில் நீண்ட காலமாக குடியிருக்கும் பொது மக்களுக்கு இலவசமாக பட்டாக்கள் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) கோயம்புத்தூர் மாவட்டம், காமராஜ் நகர் பகுதி, பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி, வார்டு 18-ல் அமைந்துள்ளது. இதில் புல எண் 52/1, 0.265 (ஹெக்டேர்) பரப்புள்ள "குட்டை புறம்போக்கு" ஆகும். அரசாணை நிலை எண் 168, வருவாய்த் துறை, நாள் 27-3-2000-ன்படி வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் வசிக்கும் 99 நபர்களில் 18 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் 60 நபர்கள் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளவர்கள் என்பதால் நிலக்கிரயம்

செலுத்தி வீட்டுமனை பட்டா பெற அறிவுறுத்தப்பட்டது. ஆனால், அவர்கள் நிலக்கிரயம் செலுத்தாமையால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. இவர்கள் அரசு நிர்ணயம் செய்த வருமானத்திற்கு மேல் உள்ளதால் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ளனர் என கருதிடுவதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. ஏனைய 26 நபர்கள் வீட்டுமனைப் பட்டா பெற தகுதியுடைவர்கள் அல்ல என கருதி மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

(ஆ) சீனிவாச நகர் பகுதி, பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி கிராமத்தில் புல எண் 602/2 "பாறை" என வருவாய் ஆவணங்களில் 0.52.5 ஹெக்டேர் பரப்பு தாக்கல் ஆகியுள்ளது. இதில் வசிக்கும் 30 நபர்களில் 10 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. 20 நபர்கள் வசதியானவர்கள் என்பதால் நிலக்கிரயம் செலுத்தி வீட்டுமனைப் பட்டா பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டும் நிலக்கிரயம் செலுத்தாமையால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. ஆக, இவ்விரு நகர் பகுதிகளில் வாழும் 80 நபர்கள் வசதி படைத்தவர்கள் என்பதோடு, நிலக்கிரயம் செலுத்தவில்லை என்ற காரணத்தால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை.

**8—**

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 39477—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி நகரில் 29-வது வார்டில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் மற்றும் நகரம், 29-வது வார்டு, சத்தியமூர்த்தி ஆற்றுக்கு போகும் வழி மற்றும் நகராட்சிக்கு போகும் வழி முறையே வார்டு, ஏ, பிளாக் 61, ரி.ச.எண் 5/1-இல் 03800 சதுர மீட்டர், ரி.ச.எண் 11-இல் 5150 சதுர மீட்டர் மற்றும் 12-இல் 15000 சதுர மீட்டர் ஆகிய நிலங்கள் பாட்டையாக கிராமக் கணக்குகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி பாட்டையின் ஓரங்களில் சுமார் 200 குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் கூரை வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். மேற்படி "பாட்டை புறம்போக்கு" நிலத்தில் மனைப் பட்டா வழங்க ஆட்சேபனை உள்ளது. பண்ருட்டி நகர விஸ்தரிப்புக்காக எதிர்காலத்தில் அவ்விடங்கள் தேவைப்படும் என்பதால், மேற்படி இடங்களில் மனைப் பட்டா வழங்க இயலாது.

**9—**

### தூர்வாரும் பணிகள்

**வினா எண் 39655—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரம் பணங்காட்டுத் தெரு, வார்டு நெ. 2-ல் பெரப்பணி வாய்க்காலிலிருந்து ஊமைக்கண்ணி வரை தூர் எடுத்து ஆழப்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரம், பணங்காட்டுத் தெரு, வார்டு நெ. 2-ல் பெரப்பணி வாய்க்காலிலிருந்து ஊமைக்கண்ணி வரை தூர் எடுத்து ஆழப்படுத்தும் பணி 2002-2003 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ளதால் தற்போது தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள அவசியமில்லை.

10—

**புதிய குடியிருப்புகள் கட்டுதல்**

**வினா எண் 39796—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் ஆண்டுதோறும் பகுதி-2 திட்டத்தின் கீழும், பதினோராவது நிதிக் குழுவின் மானியத் தொகையில் இருந்தும் அவசர அவசிய நிலைக்கு ஏற்பவும், நிதி நிலைக்கு ஏற்பவும் கட்டப்பட்டு வருகின்றன.

11—

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 40201—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், மங்கலம் வடக்குப்பட்டு கிராமத்தில் சர்வே எண் 53, 54 கல்லாங்குத்து மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் வசிக்கும் 26 குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசிடம் நடவடிக்கை உள்ளதா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், மங்கலம் வடக்குப்பட்டு கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் புல எண் 53, புஞ்சை பட்டா நிலமாகும். புல எண் 54/1-ல் 1.48.0 எக்டேர் நிலம் அனாதீனம் நிலமாகவும், புல எண் 54/2-ல் 0.49.0 எக்டேர் தீர்வை ஏற்படாத தரிசு நிலமாகவும் உள்ளது. இப்புலங்களில் யாரும் தற்போது வீடு கட்டி வசித்து வரவில்லை. மேற்படி நிலம் மேடு பள்ளங்களாக உள்ளது. மேலும், வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. எனவே, 26 குடும்பங்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்யும் நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை.

12—

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 40358—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விருத்தாசலம் தொகுதி, அகரம் கிராமத்தில் சிலருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், மு. அகரம் கிராமத்தில் மொத்தம் 695 குடும்பங்கள் உள்ளன. இதில் 654 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா உள்ளன. மீதமுள்ள 41 குடும்பங்களில் இருளர் இன மக்கள் குடும்பம் 12, பிற இனத்தவர்கள் குடும்பம் 29, இவர்களுக்கு மட்டும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியுள்ளது. மேற்படி கிராமத்தில் காலி நத்தம் ஏதும் இல்லாததாலும், வேறு தகுதி வாய்ந்த

[2005 பிப்ரவரி 4

புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லாததாலும், தனியார் நிலத்தினை கையகப்படுத்தி மனைப் பட்டா வழங்க இயலும். மேற்படி 41 குடும்பங்களில் 12 பழங்குடி இனத்தவர் குடும்பங்களை விருத்தாசலம் தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) அலுவலக முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்து அதன்படி வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 29 பிற இனத்தவர் குடும்பங்களுக்கு நிதி ஒதுக்கீடு இல்லாததால் தற்போது மனைப் பட்டா வழங்க சாத்தியமில்லை.

**13—**

**விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 43405—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதி, முனிச்சாலை பகுதியில் இராஜா-இராணி ஆட்டம், கரக ஆட்டம் ஆடும் கலைஞர்கட்கும், மேளம், நாயனம் வாசிப்பவர்கட்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு தொகுதி, முனிச்சாலை பகுதியில் உள்ள இராஜா-இராணி ஆட்டம், கரக ஆட்டம் மற்றும் மேளம், நாயனம் வாசிக்கும் 57 கிராமியக் கலைஞர்களுக்கு மதுரை தெற்கு வட்டம், திருப்பரங்குன்றம், உள்வட்டம், புதுக்குளம் கிராமம் 3-வது பிட் புல எண் 17/1-ல் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.



2005 பிப்ரவரி 4]

**14—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 46239—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, எழுகணிவயல் கிராம மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் தாலுகா, எழுகணிவயல் கிராமத்தில் புல எண் 195-ல் 16 நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். இப்புலம் ஏரிப் புறம்போக்கு ஆகும். இது நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் அவ்விடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. இக்கிராமத்தில் நத்தம் புறம்போக்கில் காலியிடம் ஏதும் இல்லாததால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**15—**

**பில்கள் தீர்வு செய்வதில் காலதாமதம்**

**வினா எண் 32073—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கருவூலங்களில் அரசு பில்கள் தீர்வு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** சாதாரணமாக கருவூலங்களில் பெறப்படும் பட்டியல்கள் உடனுக்குடன் பரிசீலிக்கப்படுகின்றன. ஆயினும், பட்டியல்களின் தன்மையைப் பொறுத்து அவற்றைப் பரிசீலிப்பதற்கான கால அளவு வேறுபடுகின்றது. இருப்பினும், பொதுவாக பட்டியல்கள் மூன்று நாட்களுக்குள்

கருவூலங்களில் பரிசீலனை செய்யப்பட்டு விடுகின்றன. ஆயினும், நிலுவைப் பட்டியல்கள், ஓய்வூதியப் பட்டியல்கள், சில்லறைச் செலவினப் பட்டியல்கள் முதலியவற்றை பரிசீலிக்கும்போது அரசு விதிகள்/ஆணைகள், மாநிலக் கணக்காயரிடமிருந்து பெறப்படும் சிறப்பு அறிவுரைகள், அரசு நிர்ணயம் செய்துள்ள பணவரம்பு ஆகியவற்றை கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டியுள்ளதால் சிறிது காலதாமதம் ஏற்படுவது தவிர்க்க இயலாது. எனினும், ஏதேனும் பட்டியல்கள் காலதாமதமாகப் பரிசீலிப்பது குறித்து கருவூலத் துறைக்கு விவரம் தெரிவிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட கருவூலங்களுக்குக் காலதாமதத்தைத் தவிர்த்து உடனுக்குடன் பட்டியல்களைப் பரிசீலிக்க உரிய அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. கருவூலக் கணக்குத் துறையில் கணிப்பொறி கணக்குத் தொகுப்பிற்கு மட்டும்தான் தற்சமயம் பயன்பாட்டில் உள்ளது. பட்டியல்களைப் பரிசீலிக்க கருவூலங்களில் கணிப்பொறி பயன்பாடு இனி வருங்காலங்களில் படிப்படியாகப் புகுத்தப்பட உள்ளது. எனவே, அவ்வாறு கணிப்பொறி கருவூலங்களில் முழுப் பயன்பாட்டிற்கு வந்தவுடன் பட்டியல்கள் உடனுக்குடன் தீர்வு செய்யப்பட்டுவிடும்.

**16—**

## பொது விநியோகக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 15511—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, இயப்பாக்கம் பாதூர் ஊராட்சியில் பொது விநியோகக் கடைக்குக் கட்டடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பொது விநியோகக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியத்தில் ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு



வங்கியின் கட்டுப்பாட்டில் இயப்பாக்கம் முழுநேரக் கடை 120 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. அதே வங்கியின் கட்டுப்பாட்டில் பாதூர் முழுநேர நியாயவிலைக் கடை 491 குடும்ப அட்டைகளுடன் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்படுகிறது.

(ஆ) இயப்பாக்கம் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**17—**

## நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 18234—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் பஞ்சாயத்து, புதுமாவிலங்கை ஊராட்சிக்குட்பட்ட எண் 116 அகரம் கிராமத்திலுள்ள நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்திலுள்ள புதுமாவிலங்கை ஊராட்சிக்குட்பட்ட எண் 116 அகரம் கிராமத்தில் உள்ள முழுநேர நியாயவிலைக் கடை 340 குடும்ப அட்டைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த நியாயவிலைக் கடை புதுமாவிலங்கை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

18—

### நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம்

**வினா எண் 18258—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், குப்பங்கண்டிகை கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருவாலங்காடு, குப்பங்கண்டிகை கிராமத்திலுள்ள நியாயவிலைக் கடை 342 குடும்ப அட்டைகளைக் கொண்டு மணவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் தற்சமயம் தனியார் கட்டடத்தில் வாடகையில் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட தற்சமயம் அரசின் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

19—

### அடமானக் கடன் வழங்குதல்

**வினா எண் 37883—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகர கூட்டுறவு வங்கியில் 1996 முதல் 2001 வரை வருடவாரியாக எவ்வளவு நபர்களுக்கு அடமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் தொகை எவ்வளவு?

(இ) அடமானக் கடன் தொகை வசூலிக்க முடியாத நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கரூர் நகர வங்கியில் 1996 முதல் 2001 வரை வருட வாரியாக வழங்கப்பட்ட அடமானக் கடன்களின் எண்ணிக்கை மற்றும் தொகை பின்வருமாறு:—

| வருடம் | நபர்களின் எண்ணிக்கை | கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1996-97 | 195 | 93.90 |
| 1997-98 | 307 | 263.31 |
| 1998-99 | 344 | 446.16 |
| 1999-2000 | 315 | 750.75 |
| 2000-2001 | 204 | 146.41 |

(இ) 31-3-2003-ல் செயலற்ற ஆஸ்தியில் 407 கடன்கள் இருந்தன. தற்போது இதில் 209 கடன்கள் முழுமையாக வசூலிக்கப்பட்டுள்ளன. இதரக் கடன்கள் அனைத்தும் கூட்டுறவு சட்ட விதிகளின்படி சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

20—

### சொந்தக் கட்டடம்

**வினா எண் 38760—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, போத்தம்பட்டி தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கி தற்போது க. விலங்கு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, சொந்த அரசுக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** இல்லை. எஸ். போத்தம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு 1961 ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டது. தற்போது அந்தக் கட்டடம் பழுதடைந்தக் கட்டடம் வங்கியின் விவகார எல்லைக்குட்பட்ட செம்பட்டி கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. வங்கியின் நிதிநிலை வலுவாக இல்லாத நிலையில் பழுதடைந்த கட்டடத்தைப் புதுப்பிக்க இயலாத நிலை உள்ளது. வங்கி கடந்த 3 ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கி 2002-2003 ஆம் ஆண்டு முடிவில் அதன் நட்டம் ரூ. 64.78 இலட்சம் ஆக உள்ளது. மேலும், இவ்வங்கியில் ரூ. 47.88 இலட்சம் அளவிற்கு நிதி சமமின்மை (Imbalances) உள்ளது. வங்கியின் கட்டட நிதியிலும் சேமிப்பு ஏதுமில்லை. இந்நிலையில் ஏற்கெனவே பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடத்தைப் புதுப்பிக்க வேண்டும் அல்லது இந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும்.

தற்போது அரசு நிதியுதவியுடன் புதிய வங்கிக் கட்டடம் கட்டுவது ஏற்கெனவே உள்ள கட்டடங்களைப் புதுப்பித்துத் தருவது போன்ற திட்டங்கள் ஏதும் செயல்பாட்டில் இல்லை.

**21—**

### போக்குவரத்து வாகனங்களுக்கு கடன்

**வினா எண் 43581—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புறங்களில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குவதற்கு கடன் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், சேலம் மாநகரில் 2002—2003 ஆம் ஆண்டில் எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) ஆம்.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாநகரில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குவதற்கு 4 நபர்களுக்கு ரூ.8,81,100/- கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**22—**

### நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 46983—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புங்கனூர் ஊராட்சி, நெப்பத்தூர், நல்லவிநாயகபுரம் ஊராட்சி, பெரிய தெரு ஆகிய இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) (1) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் நெப்பத்தூர் முழுநேர நியாயவிலைக் கடை 601 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது.

(2) சீர்காழி ஒன்றியம், நல்லவிநாயகபுரம் ஊராட்சி, பெரிய தெரு கிராமத்தில் நியாயவிலைக் கடை ஏதும் செயல்படவில்லை. ஆச்சாள்புரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் 434 குடும்ப அட்டைகளுடன் நல்லவிநாயகபுரம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் நியாயவிலைக் கடையுடன் பெரிய தெரு குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

(3) வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**23—**

**விவசாயிகளுக்கு கடன் உதவி**

**வினா எண் 51283—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2004 ஆம் ஆண்டில் (ஆண்டுவாரியாக) ஏற்காடு தொகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலம் எத்தனை விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை கடனுதவி வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** ஏற்காடு தொகுதியில் 22 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும், 3 லேம்ப்ஸ் கூட்டுறவு சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கியின்மூலம் 2001 முதல் 2004 வரை விவசாயிகளுக்குப் பின்வருமாறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | குறுகிய காலக் கடன் | | மத்திய காலக் கடன் | | நகைக் கடன் | |
|---|---|---|---|---|---|---|
| | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை |
| | | ரூபாய் இலட்சத்தில் | | ரூபாய் இலட்சத்தில் | | ரூபாய் இலட்சத்தில் |
| 2001-02 | 7002 | 1319.93 | 1016 | 168.29 | 47918 | 2297.37 |
| 2002-03 | 5918 | 928.37 | 916 | 162.18 | 49785 | 2561.84 |
| 2003-04 | 1830 | 263.14 | 1195 | 164.96 | 48804 | 2575.45 |
| மொத்தம் | 14750 | 2511.44 | 3127 | 495.43 | 146507 | 7434.66 |



**24—**

**கணினிமயமாக்கல்**

**வினா எண் 53691—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பொதுமக்கள் நலன்கருதி கணினிமயமாக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** தமிழகத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 17 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் முழுமையாகவும், 42 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பணிகளில் சில பகுதிகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**25—**

**விவசாயிகளுக்கு வழங்கிய பயிர்க் கடன்**

**வினா எண் 54100—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் உள்ள தொடக்க வேளாண்மை வங்கி விவசாயிகளுக்கு வழங்கிய பயிர்க் கடன் வசூலாகாமல் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) எவ்வளவு கடன் நிலுவையில் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடந்த 3 ஆண்டுகளாக அதன் உறுப்பினர்களுக்கு வழங்கிய பயிர்க் கடன்கள் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | பயனாளிகள் | தொகை | ஆண்டு முடிவில் நிலுவை |
|---|---|---|---|
| | (ரூபாய்இலட்சத்தில்) | | |
| *2001-2002 (ஏப்ரல், மார்ச்)* | *526* | *95.57* | *136.10* |
| *2002-2003 (ஏப்ரல், மார்ச்)* | *466* | *82.10* | *157.65* |
| *2003-2004 (ஏப்ரல், மார்ச்)* | *310* | *63.82* | *163.89* |

*30-6-2004*-ல் ரூ. *163.89* இலட்சம் நிலுவையாகவும், தவணை கடந்த நிலுவையாக ரூ. *87.70* இலட்சம் உள்ளது. மேற்கண்ட தொகை வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கேட்புத் தொகை (Total outstanding) ரூ. *154.08* இலட்சம் ஆகும். தவணை கடந்த தொகை, கேட்புத் தொகை (Demand)-ல் *57%* ஆக உள்ளது. தற்போது மாநிலத்தில் தொடர்ந்து நிலவி வரும் கடும் வறட்சியின் காரணமாக கடன் வசூலில் தொய்வு ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் வறட்சி நிலை மாறி சுமுகமாக சூழ்நிலை உருவாகும்போது, கடனை வசூலிக்க செயல் திட்டம் வகுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**26—**

### வைப்புதாரர்கள் விவரம்

**வினா எண் 57499—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி நகர மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளையில் *2001-2002, 2002-2003, 2003-2004* ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டுள்ள வைப்புத் தொகை எவ்வளவு?

(ஆ) டெபாசிட்தாரர்கள் எத்தனை பேர்?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ)

| ஆண்டு | வைப்புத் தொகை |
|---|---|
| *2001-2002* | ரூ. *924.56* இலட்சம் |
| *2002-2003* | ரூ. *1137.08* இலட்சம் |
| *2003-2004* | ரூ. *947.11* இலட்சம் |

(ஆ)

| வைப்புத்தாரர்கள் விவரம் பின்வருமாறு | |
|---|---|
| *2001-2002* | *3274* |
| *2002-2003* | *3411* |
| *2003-2004* | *3568* |

**27—**

### நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 60448—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், *94*, கரியமாணிக்கம் கிராமம் மற்றும் திருப்பஞ்ஞினி ஊராட்சி, திருப்பஞ்ஞினி தெற்கு பகுதி ஆகிய இடங்களிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி

மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், 91, கரியமாணிக்கம் நியாயவிலைக் கடை, கரியமாணிக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 562 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாயவிலைக் கடையாக இலவசக் கட்டடத்தில் செயல்படுகிறது. இக்கட்டடம் 1997-98 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 139 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு 6-12-2000 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, இந்த நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, திருப்பஞ்ஞீனி ஊராட்சி, திருப்பஞ்ஞீனி தெற்கு பகுதி நேர நியாயவிலைக் கடை திருப்பஞ்ஞீனி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 740 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டுறவு நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு திட்டங்களின்கீழ் தற்போது வழிவகை செய்யப்படவில்லை.

**28—**

**பயனடைந்த விவசாயிகள்**

**வினா எண் 61404—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, தீயத்தூர் ஆவுடையார்கோயில், மீமிசல், பொன்பேத்தி, மாங்குடி ஆகிய வேளாண் கூட்டுறவு வங்கிகளில் 2001 ஆம் ஆண்டு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தின்கீழ் பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** வட்டி, அபராத வட்டித் தள்ளுபடி திட்டம், 2001-ன்கீழ் அறந்தாங்கி தொகுதியில் கீழ்க்கண்ட வங்கிகளில் பயனடைந்த விவசாயிகள் விவரம் பின்வருமாறு:—





| வரிசை எண் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பெயர் | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை | வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி செய்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | தீயத்தூர் | 310 | 4,35,698 |
| 2 | ஆவுடையார்கோவில் | 521 | 14,57,659 |
| 3 | மீமிசல் | 358 | 4,27,410 |
| 4 | பொன்பேத்தி | 363 | 23,86,188 |
| 5 | மாங்குடி | 106 | 1,28,797 |
| | **மொத்தம்** | **1658** | **48,35,752** |

அரசாணை எண் 230, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 21-6-2001 இல் விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணத் திட்டம், 2001 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 30-11-2001 வரை தமிழ்நாட்டில் 6,11,193 விவசாயிகளுக்கு ரூ.226.56 கோடி அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 32,143 விவசாயிகளுக்கு ரூ. 874.85 இலட்சம் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**29—**

**விவசாயிகள்**

**வினா எண் 61419—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 4

அறந்தாங்கி தொகுதி, விஜயபுரம், கொடிவயல், பத்தரசன்கோட்டை, அரசர்குளம், உலகளந்தான்வயல் ஆகிய தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் 2001 ஆம் ஆண்டு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தின்கீழ் பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** வட்டி, அபராத வட்டித் திட்டம், 2001-இன் கீழ் மேற்காண் வங்கிகளில் பயனடைந்த விவசாயிகளின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பெயர் | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை | வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி செய்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | விஜயபுரம் | 180 | 3,13,545 |
| 2 | கொடிவயல் | 166 | 2,92,585 |
| 3 | பத்தரசன்கோட்டை | 129 | 2,08,172 |
| 4 | அரசர்குளம் | 185 | 3,43,138 |
| 5 | உலகளந்தான்வயல் | 64 | 83,357 |
| | **மொத்தம்** | **724** | **12,40,797** |

அரசாணை எண் 230, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 21-6-2001-ல் விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி நிவாரணத் திட்டம், 2001 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 30-11-2001 வரை தமிழ்நாட்டில் 6,11,193 விவசாயிகளுக்கு ரூ. 226.56 கோடி அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.



2005 பிப்ரவரி 4]

புதுக்கோட்டை மாவட்டத்தில் 32,143 விவசாயிகளுக்கு ரூ. 874.85 இலட்சம் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**30—**

**பயனடைந்த விவசாயிகள்**

வினா எண் 61424—திரு. ப. அரசன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, காட்டுபிராமணவயல், அம்பலாவனேந்தல், காகத்திக்கோட்டை, விளானூர், அடம்பூர் ஆகிய வேளாண் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் 2001 ஆம் ஆண்டு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி திட்டத்தின்கீழ் பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** வட்டி, அபராத வட்டித் தள்ளுபடி திட்டம் 2001-இன் கீழ் அறந்தாங்கி தொகுதியில் உள்ள கீழ்க்கண்ட வங்கிகளில் பயனடைந்த விவசாயிகள் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் பெயர் | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை | வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்த தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | காட்டுபிராமணவயல் | 107 | 2,79,734 |
| 2 | அம்பலவானேந்தல் | 231 | 6,95,532 |
| 3 | காகத்திக்கோட்டை | 106 | 87,198 |
| 4 | விளானூர் | 229 | 3,86,072 |
| 5 | அடம்பூர் | 148 | 4,48,003 |
| | **மொத்தம்** | **821** | **18,76,539** |

இத்திட்டத்தின்கீழ் 30-11-2001 வரை தமிழ்நாட்டில் 61,198 விவசாயிகளுக்கு ரூ. 228.56 கோடி அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 32,143 விவசாயிகளுக்கு ரூ. 874.85 இலட்சம் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**31—**

**கோயில் திருப்பணிக்கு நிதி**

**வினா எண் 63353—திரு. டி. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை, சாமுண்டீஸ்வரி கோயில் திருப்பணிக்கு அரசு நிதி ஏதேனும் ஒதுக்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்போது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குழித்துறை, அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயில் சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் நிர்வாகத்திற்கு உட்பட்டதாகும். இத்திருக்கோயிலில் கீழ்க்கண்ட திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.



| வரிசை எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | பழுதடைந்த சாமுண்டியம்மன் திருக்கோயிலை மாற்றி திரும்பக் கட்டுதல் | ரூ. 85,000 |
| 2 | இசக்கியம்மன் கோயில் கட்டுதல் | ரூ. 60,000 |
| 3 | பகவதியம்மன் கோயில் கட்டுதல் | ரூ. 60,000 |
| 4 | திருக்கோயில் பழுதடைந்த மண்டபத்தினை மாற்றி புதியதாக முன்மண்டபம் கட்டுதல் | ரூ. 1,80,000 |

வரிசை எண் 1 முதல் 3 முடிய உபயதாரர்கள் பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. வரிசை எண் 4-ல் கண்டுள்ள பணி திருக்கோயில் நிதி மூலம் செய்ய நடவடிக்கையில் உள்ளது. திருக்கோயில்கள் கட்டும் பணிகள் முடிவடைந்ததும் முன்மண்டபம் கட்டும் பணி துவக்கப்படும். இத்திருக்கோயில் திருப்பணிக்கு அரசு நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. உபயதாரர்கள்மூலம் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**32—**

**காது கேளாதவர் மாணவ, மாணவியரின் பள்ளிகள்**

**வினா எண் 16614—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் காது கேளாதவர் மாணவ/மாணவியர்களுக்கு என்று தனியாக நடத்தப்படும் பள்ளிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அதில் எத்தனை மாணவர்கள் பயின்று வருகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அரசின் சார்பில் தர்மபுரி, தஞ்சாவூரில் மேல்நிலைப் பள்ளிகளும், காஞ்சிபுரம், சேலம், ஈரோடு, உதகமண்டலம், விருதுநகர், கடலூர், புதுக்கோட்டை மற்றும் தாம்பரம் ஆக மொத்தம் 10 காது கேளாதோருக்கான அரசுப் பள்ளிகள் இயங்குகின்றன என்றும்

[2005 பிப்ரவரி 4

மற்றும் அரசு மானியம் பெறும் அங்கீகாரம் பெற்ற தனியாரால் நடத்தப்படும் காது கேளாதோருக்கான பள்ளிகளின் எண்ணிக்கை 20 என்றும் அரசு மானியம் பெறாமல் அரசு அங்கீகாரத்துடன் நடத்தப்படும் காது கேளாதோருக்கான பள்ளிகளின் எண்ணிக்கை 37 என்றும் மேலும் அரசு மற்றும் தனியார் காது கேளாதோருக்கான பள்ளிகளில் மொத்தம் 1982 மாணவ மாணவியர்கள் சிறப்புக் கல்வி பயில்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**33—**

**சத்துணவுப் பணியாளர் நியமனம்**

**வினா எண் 20947—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றிய ஆரம்பப் பள்ளி புள்ளனேரியில் சத்துணவுப் பணியாளரை அரசு நியமனம் செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்-3-இல் உள்ள உபரிப் பணியாளர்களைக் கொண்டு உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த புள்ளனேரி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி சத்துணவுப் பணியாளர் காலிப் பணியிடம் நிரப்பப்பட்டுவிட்டது.

**34—**

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 61686—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 4]

சத்துணவு ஊழியர்கள் நியமனத்தில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சத்துணவு ஊழியர்கள் நியமனத்தில் இட ஒதுக்கீடு அரசுக் கடித எண் 6256/ச.தி. 1-2/97, நாள் 16-5-1997-ன்படி 100 புள்ளிகள் கொண்ட இன சுழற்சி முறையில் பின்பற்றப்படுகிறது. தற்சமயம் அரசால் புதிய நியமனங்கள் தடை செய்யப்பட்டுள்ளதால் மாவட்டங்களில் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்-3-லுள்ள உபரிப் பணியாளர்கள் பட்டியலிலிருந்து காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

**35—**

**சிறார் இல்லம் துவங்குதல்**

**வினா எண் 64119—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டத்தில் இளங்குற்றவாளிகளுக்கென சிறார் இல்லம் துவங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* 2000-வது ஆண்டின் இளைஞர் நீதி (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின்படி சட்ட நடைமுறைகளுக்கு முரணாகச் செயல்படும் சிறுவர்களை விசாரணைக் காலத்தில் நிறுத்தி வைக்க இச்சட்டத்தின் விதி 8(1) ன்படி ஒரு மாவட்டத்திலும் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களுக்கென ஒரு கூர்நோக்கு இல்லமும், விசாரணை முடிந்த பின்னர் தொடர்ந்து நிறுவனம் சார்ந்த பயிற்சிக்கென அனுப்பப்பட வேண்டிய சிறார்களுக்கென விதி 9(1)-ன்படி சிறப்பு இல்லங்களும் ஏற்படுத்த வேண்டும். இவ்வகையில் திருநெல்வேலி, மதுரை,

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் சென்னை ஆகிய 8 இடங்களில் கூர்நோக்கு இல்லங்களும், சிறுமியருக்கு ஒன்றும் சிறுவர்களுக்கு ஒன்றுமாக இரண்டு சிறப்பு இல்லங்கள் சென்னை மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூரில் செயல்பட்டு வரும் கூர்நோக்குஇல்லத்திற்கு தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தவறிழைத்த சிறுவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். எனவே, நாகப்பட்டினத்தில் தற்போது இல்லம் துவங்க அரசின் திட்டம் எதுவுமில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் துவங்குவதும் இயலாத ஒன்றாகும்.

36—

## ஆரம்பச் சுகாதார நிலையம்

**வினா எண் 34395—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதியில் மோகனூர் ஒன்றியத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எத்தனை?

(ஆ) அங்கு பணியாற்றும் பணியாளர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பாலப்பட்டி, வளையப்பட்டி, மோகனூர் மற்றும் ஆலம்பட்டி ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

(ஆ) பாலப்பட்டியில் 25 பணியாளர்களும், வளையப்பட்டியில் 12 பணியாளர்களும், மோகனூரில் 19 பணியாளர்களும் மற்றும் ஆலம்பட்டியில் 17 பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.





37—

## ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 50314—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, இலால்குடி ஒன்றியம், ஏசனைகோரை கிராமம், துணை ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஒன்றியம், ஏசனைகோரை துணை சுகாதார மையக் கட்டடம் முழுமையாகச் சேதமுற்று புதுப்பிக்க இயலாத நிலையில் உள்ளது. இக்கட்டடத்தைப் பழுதுபார்க்கும் தொகை புதியக் கட்டடம் கட்டும் தொகையினைவிட அதிகமாகும் என்பதால் இவ்விடத்தில் புதியக் கட்டடம் கட்டுவதே சாலச் சிறந்தது என்று உதவி செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை, கட்டடம், திருச்சிராப்பள்ளி தெரிவித்துள்ளார். எனவே, வருங்காலங்களில் புதிய துணைச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்புரைப் பரிசீலிக்கும்போது ஏசனைகோரை துணைச் சுகாதார நிலையம் கட்ட முன்னுரிமை பட்டியலில் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

38—

## மருத்துவ உதவி

**வினா எண் 50869—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பன்றிகளால் அதிக அளவில் நோயாளிகளுக்கு உடல்நலக் குறைவு ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** பன்றி இறைச்சியை உண்பதாலும் மற்றும் பன்றிகளின் மூலமும் 24 வகையான நோய்கள் பரவுகின்றன. பன்றிகளின் நடமாட்டத்தைப் பொது இடங்களிலிருந்து கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நோய்கள் வெகுவாகப் பரவாமல் மற்றும் நோய் தாக்குமில்லாமல் கட்டுப்படுத்தலாம்.

அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் இது குறித்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரத் துறை சார்பாக அந்தந்தப் பகுதியிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் போதுமான மருந்துகளை இருப்பில் வைத்து இதுபோன்ற பிணியாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேல் சிகிச்சை தேவைப்படும் பிணியாளர்கள் அரசு மருத்துவமனைகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

**39—**

**மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 53796—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு அதிலுள்ள சித்த மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்டவும் மற்றும் மருத்துவர்கள் நியமனம் செய்யவும் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடம் 2. ஒரு மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. அதனை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சித்தா பிரிவில் ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார். ஆரம்பச்





சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, சித்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு (சித்த பிரிவு உட்பட) சுற்றுச்சுவர் கட்டித் தரும் கருத்துரு தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**40—**

**காலரா நோய்**

**வினா எண் 57583—திரு. டி. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, ஓட்டேரி பகுதியில் 2004 மே மாதம் காலரா நோயால் பாதிக்கப்பட்டு யாரேனும் இறந்துள்ளனரா?

(ஆ) சென்னை நகரில் காலரா நோய் பரவாமல் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) இல்லை.

(ஆ) பொதுமக்கள் குடிநீரைக் காய்ச்சிக் குடிக்கவும், சுற்றுப்புறம் சுத்தமாகவும், கழிவுநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். குடிநீரில் தொடர்ந்து நாள் முழுவதும் போதுமான அளவு குளோரின் உள்ளதா என்று கண்காணிக்கப்பட்டு வருகிறது. குளோரின் இல்லாத குடிநீரில் குளோரின் மாத்திரையைப் போட்டுக் குடிக்க பொதுமக்களுக்கு குளோரின் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

**41—**

**ஹெப்படைடிஸ் பி தடுப்பூசி**

**வினா எண் 59053—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 4

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் ஹெப்படைடிஸ் பி தடுப்பூசி வழங்கப்படும் திட்டம் எந்தெந்த மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது?

(ஆ) எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) 2003-2004 ஆம் ஆண்டில் மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் ஹெப்படைடிஸ் பி தடுப்பூசி வழங்கப்படும் திட்டம் பரிட்சார்த்த முறையில் ஆரம்பிக்கப்பட்டு மத்திய அரசின் உதவியோடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**42—**

**கயிறு திரிக்கும் தொழில்**

**வினா எண் 9508—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையத்தில் கட்டில் கயிறு திரிக்கும் தொழில் அதிகமாக நடைபெறுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு தொழில் முனைவோருக்கு தொழில் தொடங்க மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?



2005 பிப்ரவரி 4]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையம் பகுதியில் வாழும் ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர் சேலம் மாவட்டத் தொழில் மையத்தை அணுகினால் அவர்களுக்கு கட்டில் கயிறு திரிக்கும் தொழில் துவங்க பாரதப் பிரதமர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தகுதி அடிப்படையில் வங்கிகள் மூலம் கடன் பெறத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், இத்தொழிலை புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கும் தொழில் முனைவோருக்கு 10% முதலீட்டு மானியம் (அதிகபட்சம் ரூ. 16 இலட்சம்) மின்னாக்கி மானியம் மின்னாக்கி விலையில் 5% (அதிகபட்சம் ரூ. 5 இலட்சம்) மற்றும் குறைந்த அழுத்த மின் மானியம், மின்சாரக் கட்டணத்தில் 30%, 20% மற்றும் 10% முறையே உற்பத்தித் துவங்கிய முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் வழங்கப்படும். மேலும், தொழிற்சாலையின் மொத்தத் தொழிலாளர்களில் 50% -க்கு மேல் மகளிர் பணியமர்த்தப்பட்டால் 5% கூடுதல் மானியம் (ரூ..5 இலட்சம் வரை) வழங்கப்படும். வெள்ளையம்பாளையத்தில் கட்டில் கயிறு திரிக்கும் (பாரதப் பிரதமர் சுய வேலை வாய்ப்புத் திட்டம்/புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ்) தொழில் அலகு அமைக்க விண்ணப்பமேதும் பெறப்படவில்லை. எனினும், மேற்கண்ட தொழில் அலகு அமைப்பதற்கு விண்ணப்பம் பெறப்படின் அதன்மீது உரிய நடவடிக்கை எடுத்து, தொழில் அலகு அமைப்பதற்குப் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், சேலம் அலுவலகம் மூலம் அனைத்து உதவிகளும் செய்து தரப்படும்.

**43—**

**அம்பர் சர்க்கா பயிற்சி**

**வினா எண் 22754—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 4

(அ) சேலம் மாவட்டத்தில் ஊரக நூற்பு மையங்களில் அம்பர் சர்க்கா பயிற்சி எத்தனை இடங்களில் அளிக்கப்படுகிறது?

(ஆ) இதனால் பயனடைந்தவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சர்வோதய சங்கங்கள் மூலமாகவோ அல்லது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாகவோ "அம்பர் சர்க்கா பயிற்சி" ஏதும் அளிக்கப்படுவதில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**44—**

**சுய தொழில் தொடங்க கடன் உதவி**

**வினா எண் 40367—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் உள்ள இலுப்பைத் தோப்பு பகுதியில் வாழும் மக்களுக்கு, சுய தொழில் தொடங்கிட அரசு கடன் உதவி அளிக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, இலுப்பைத் தோப்பு பகுதியில் இருந்து இதுவரை பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் விண்ணப்பம் பெறப்படவில்லை. மேலும், பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாவட்டத் தொழில் மையம் மூலம் கடன் கேட்டு விண்ணப்பிக்கும் இளைஞர்களுக்கு சுய



2005 பிப்ரவரி 4]

வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கியின் மூலம் கடன் பெற்று சுய தொழில் துவங்க தொழில் வணிகத் துறை உதவி செய்கிறது.

இத்திட்டத்தில் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, 18-35 வயதுக்குட்பட்ட குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.40,000-க்கு மிகாமல் உள்ள எல்லா இளைஞர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்களாவர். ஆதிதிராவிடர், பழங்குடியினர், முன்னாள் படைவீரர், ஊனமுற்றோர் மற்றும் பெண்களுக்கு வயது வரம்பு 18-45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம், மேற்கூறிய பண்ருட்டி தொகுதி, இலுப்பைத் தோப்பு பகுதியில் இருந்து தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்பட்சத்தில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்கள் தொழில் துவங்க மாவட்டத் தொழில் மையம்மூலம் உதவி செய்யப்படும்.

**45—**

**சிறுதொழில்கள் துவங்க கடன்**

**வினா எண் 49987—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் பகுதி விவசாயிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட ஏழை எளியவர்களுக்கு தாட்கோமூலம் சிறு தொழில்களைத் தொடங்க ஊரகத் தொழில் துறைமூலம் கடன் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் பகுதி விவசாயிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட ஏழை எளியவர்களுக்கு தாட்கோமூலம் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ஊரகத் தொழில் துறைமூலம் கடன் வழங்க அரசிடம் திட்டம் இல்லை. எனினும், தாட்கோ மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து மானியத்துடன் கூடிய தொழிற் கடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

[2005 பிப்ரவரி 4

மேலும், ஊரகத் தொழில் துறையைச் சார்ந்த கோவை மாவட்டத் தொழில் மையம் மூலம் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:-

**1. பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

18 முதல் 25 வயது வரையிலான 8 ஆம் வகுப்பு வரை படித்தும், வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு இத்திட்டம் பயன் அளிக்கிறது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு வயது உச்சவரம்பு 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.40,000-க்கு மிகையாக இருக்கக் கூடாது. குறைந்தது மூன்றாண்டுகள் ஒரே இடத்தில் குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். தொழில் தொடங்க ரூ. 2,00,000 வரை மற்றும் வியாபாரத்திற்கு ரூ. 1,00,000 வரை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்று தொழில் துவங்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தமிழக அரசின் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அனைத்து வட்டாரங்களிலும் குறைந்தது ரூ. 20 இலட்ச முதலீட்டில், வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்கள், தனி நபர்கள் துவங்க மாவட்டத் தொழில் மையம் மூலம், ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இயந்திரத் தளவாடங்கள் முதலான முதலீட்டில் 15% (அதிகபட்சம் ரூ. 15 இலட்சம்) முதலீட்டு மானியமாகவும், 50 சதவீதத்திற்குமேல் பெண் தொழிலாளர்களைக் கொண்டிருப்பின் முதலீட்டில் 5% (அதிகபட்சம் ரூ. 5 இலட்சம்) கூடுதல் மானியமாகவும், மின்னாக்கி மானியம் 15% (அதிகபட்சம் ரூ. 5 இலட்சம்) ஆகியவை வழங்கப்படுகிறது. மேலும், முதல் 3 ஆண்டுகளுக்கு முறையே 30 விழுக்காடு, 20 விழுக்காடு, 10 விழுக்காடு குறைந்த அழுத்த மின்மானியமும் வழங்கப்படுகிறது.

**46—**

**கதர் நூல்**

**வினா எண் 50403—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 4]

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கதர் நூல் அதிகமாக உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கதர் நூல் அதிகமாக உற்பத்திச் செய்ய தேவையான நூற்பாளர்களைப் பணிக்குச் சேர்த்து உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**47—**

**தொழிற்பேட்டை பழுதுபார்த்தல்**

**வினா எண் 51440—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளில் மிகவும் பழுதடைந்துள்ள சில கூடங்களைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், குடிமங்கலம் மற்றும் கணபதிபாளையம் ஆகிய சிட்கோ தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடு செய்யப்படாத 15 தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யும் சமயம் தேவைப்பட்டால் சீர் செய்யப்பட்டு ஒப்படைக்கப்படும்.

**48—**

**சிறுதொழில் செய்ய கடன்**

**வினா எண் 58609—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 4

(அ) பனை ஏறும் தொழிலாளர்களுக்கு சிறு தொழில் செய்யக் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் பனைத் தொழில் செய்து வரும் கைவினைஞர்களுக்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1999-2000 முதல் 2002-2003 வரை 45 பனைத் தொழிலாளிகள் பயனடைந்துள்ளனர்.

**49—**

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 60126—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் காதிபவனுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் கதரங்காடி ஏதும் செயல்படவில்லை. காதிபவன் என்பது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் நிறுவனமன்று. மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இது செயல்படுகின்றது. எனவே, மாநில அரசால் சொந்தக் கட்டடம் கட்டித் தர இயலாது.



2005 பிப்ரவரி 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

(ஆ) வினா எழவில்லை.

**50—**

**தானியக் களம் அமைத்தல்**

**வினா எண் 26266—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பொச்சரம்பட்டி கிராமத்தில் விவசாயிகளின் நலனைக் கருதி தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பொச்சரம்பட்டி கிராமத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர் களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. மறைவுற்ற உறுப்பினர் திரு. கே. சுதர்சனம் குடும்பத்திற்கும் மற்றவர்க்கும் நிதியுதவி வழங்கியது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தருவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, அதாவது 3-2-2005 அன்று இந்த அவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பாரதிய ஜனதா கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள், கொலையுண்ட சங்கரராமன் குடும்பத்திற்கு

5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளபோது மறைந்த சட்டமன்ற உறுப்பினரான திரு. கே. சுதர்சனம் அவர்களது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்தான் வழங்கப்பட்டுள்ளதாக ஆதங்கப்பட்டுக் கொண்டார். இந்த இரண்டு நிகழ்வுகளில் வழங்கப்பட்ட நிதியுதவி பற்றிய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

முதலமைச்சர் தனது தேர்ந்த விருப்பத்தின்பேரில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கலாம். இதன் அடிப்படையில்தான் கொலை செய்யப்பட்ட திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிதியுதவியை நான் வழங்கினேன். கொலையுண்ட சங்கரராமன் அவர்களின் மனைவி திருமதி பத்மா தங்களது குடும்பத் தலைவர் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டுவிட்டதால் வருவாய் ஏதுமின்றி தங்களது குடும்பம் வறுமையில் வாடுகிறது என்றும், இதனால் தங்களது மகன் மற்றும் மகள் இருவரும் தொடர்ந்து கல்வி கற்க இயலாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்து, தாங்கள் தொடர்ந்து வாழ்க்கை நடத்த நிதியுதவி வழங்க வேண்டுமென்று வேண்டி கோரிக்கை மனு கொடுத்தார். அதனைப் பரிவுடன் பரிசீலித்து அவர்களின் தேவையறிந்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வழங்கினேன்.

மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. சுதர்சனம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகப் பதவியில் இருந்தபோது உயிரிழந்தார். அவ்வாறு ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருக்கின்றபோது மரணம் அடைந்தால் அரசு விதிகளின்படி அவரது வாரிசுதாரர்களுக்கு ஒட்டுமொத்த படியாக, அதாவது lump sum allowance-ஆக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கலாம். இதன்படிதான் அவரது குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. இதேபோலத்தான் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்களது குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் ஒட்டுமொத்த படி வழங்கப்பட்டது. திரு. கே. சுதர்சனம் அவர்களது குடும்பமோ, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்களது குடும்பமோ வறுமையில் இல்லை. எனவே, திரு. கே. சுதர்சனம் அவர்களது குடும்பத்திற்கும், திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்களது குடும்பத்திற்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து எந்த நிதியுதவியும் வழங்க வேண்டிய தேவை எழவில்லை.





தங்களது கடமையில் அசாதாரண தைரியத்துடனும், அளவற்ற ஈடுபாடும் கொண்டு பணியாற்றி உயிரிழந்த அரசு அலுவலர்களுக்கு, பணியில் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டைக் கௌரவிக்கும் வகையில் அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கியுள்ளேன். இந்த அடிப்படையில்தான் காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமத்தில் கள்ளத்தனமாக மணல் கடத்தப்படுவதைத் தடுக்க முயன்று அதன்காரணமாக 20-4-2003 அன்று கொல்லப்பட்ட வருவாய் ஆய்வர் திரு. சண்முகசுந்தரம், திருப்பெரும்புதூர் வட்டம், எருமையூர் கிராமத்தில் கள்ளத்தனமாக கருங்கல் கடத்தப்படுவதைத் தடுக்க முயன்றதில் லாரி மோதி 13-9-2003 அன்று உயிரிழந்த வட்டாட்சியர் திரு. ஜி. புண்ணியகோட்டி, காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், உதயம்பாக்கம், மணப்பாக்கம் கிராமப் பகுதிகளில் கள்ளத்தனமாக மணல் கடத்தப்படுவதைத் தடுக்க முயன்றதில் 11-12-2004 அன்று உயிரிழந்த மண்டல துணை வட்டாட்சியர் திரு. வெங்கடேசன் ஆகியோரது குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் வழங்கினேன்.

சுனாமி தாக்கிய கடலூர் மாவட்டம், கிள்ளை மற்றும் பரங்கிப்பேட்டை கிராமங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்ட சிதம்பரம் வட்டாட்சியர் திரு. எம். முஸ்தபா கமால் பாட்சா மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததும், அரசு கடமை ஆற்றுவதில் அவர் கொண்டிருந்த அளவற்ற ஈடுபாட்டைக் கௌரவிக்கும் விதத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வழங்கினேன்.

இதேபோல், 21-11-2002 அன்று யானைத் தந்தங்கள் திருடும் கும்பலைப் பிடித்திட ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது காட்டு யானைகளால் மிதியுண்டு, உயிரிழந்த கோவை வனக் கோட்ட வனக் காப்பாளர் திரு. சுரேந்திர ராஜா அவர்களது குடும்பத்தினரின் ஏழ்மையான சூழ்நிலையைக் கருதி 5 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணையிட்டேன்.

முற்பகல் 10-05

வன உயிரினத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தபோது கள்ளத்தனமாக வன விலங்குகளை வேட்டையாடும் கும்பலால், 20-10-2002 அன்று கொல்லப்பட்ட முதுமலை வன உயிரினக் காப்பக வேட்டைத் தடுப்புக் காவலர் திரு. சிகன் அவர்களது குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் நிதி உதவியை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கினேன்.

13-12-2003 அன்று மன்னார்குடியிலிருந்து திருவாரூருக்குச் சென்றுகொண்டிருந்த தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தபோது பேருந்தில் இருந்த துவாரம் வழியாக கீழே விழுந்ததில் உயிரிழந்த செல்வி கௌசல்யா என்னும் சிறுமியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வழங்கி ஆணையிட்டேன்.

எதிர்பாராத விபத்துகள் ஏற்படும்போது அந்த விபத்துகளில் உயிர் இழப்போரின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும், பலத்த காயம் அடைவோருக்கு 15 ஆயிரம் ரூபாயும், சாதாரண காயம் அடைவோருக்கு 6 ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதுவன்றி வறுமையான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்ற பொதுமக்கள் மின்சாரம் தாக்குதல், இடி மின்னல் தாக்குதல், மண் சரிவில் சிக்குதல் முதலான இயற்கை இடர்ப்பாடுகளால் உயிர் இழக்க நேரிடும்போதும் அவர்களது குடும்பச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அக்குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கி, ஆணையிடுகிறேன். இதுபோன்ற நிகழ்வுகளில், அந்தந்த சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, தேவையான நிதி உதவிகளை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நான் வழங்கி வருகிறேன்.

மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. சுதர்சனம் அவர்கள், என்னுடைய இயக்கத்தைச் சார்ந்தவர். என்மீது பற்றும் பாசமும், உடையவர். வேறு எவரைக்காட்டிலும் அவரது குடும்பத்தின்மீது எனக்கு அக்கறை உண்டு. அந்தக் குடும்பத்திற்கு என்ன தேவை என்பதை நான் அறிவேன். எனவே, ஆடு நனைகிறதே என்று யாரும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).





## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து இரண்டாவது முதல் இருநூற்று ஐம்பத்து ஐந்தாவது வரையிலான (பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவை) நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். முனைவர் மு. தம்பிதுரை.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபதாவது முதல் நூற்று அறுபத்து இரண்டாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது முதல் நூறாவது வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

## 5. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**திரு. மு.பெ. சாமிநாதன்:** சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்க்கலாம், அறைக்கு வாருங்கள் பேசுவோம்.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்-தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வேலூர் நகரம், சத்துவாச்சாரி, அல்லாபுரம், தொரப்பாடி, சேண்பாக்கம் மற்றும் முழு வேலூர் மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க காவிரி ஆற்று நீர் வழங்கும் ஒகேனக்கல் குடிநீர் திட்டம் குறித்தும்;

2. வேலூரில் அரசு சட்டக் கல்லூரி துவக்குவது குறித்தும்;

3. வேலூர் மாவட்ட விவசாயிகள் வறட்சியில் வாடுவதால் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;

4. வேலூர் அருகே உள்ள மூடப்பட்ட அரியூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறப்பது குறித்தும்;



5. வேலூர் சத்துவாச்சாரி, அல்லாபுரம், தொரப்பாடி, சேண்பாக்கம் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்தத்தை வழிமொழிய வேண்டும்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"1. தமிழகத்தில் அதிகரித்து வரும் வேலையின்மையைத் தீர்க்க ஆக்கபூர்வமான திட்டங்களை அறிவிக்காதது குறித்தும்;

2. கோவை மாவட்டத்திலும், மாநிலத்தின் இதர பகுதிகளிலும் மூடப்பட்ட ஆலைகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை மீண்டும் திறப்பது குறித்தும்;

3. அவினாசி-அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்தும்;

4. வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள சாலைப் பணியாளர்களை மீண்டும் பணியில் அமர்த்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுடைய ஆட்கள் எல்லாம் மாநாட்டிற்குப் போய்விட்டார்களா? திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, காந்தி விளையாட்டுத் திடலை விளையாட்டு அரங்கமாக மேம்படுத்தும் திட்டம் குறித்தும்;

2. நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகே பழத்தோட்டம் செல்லும் நெடுஞ்சாலையில் பழுதடைந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

3. நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், உளிக்கல் சிறப்பு நிலை ஊராட்சி, நான்சச் முதல் பக்காசூரன் மலை வரை நில ஆர்ஜிதம் செய்து புதிய சாலை அமைக்கும் திட்டம் குறித்தும்;

4. நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தெங்குமரஹாடா ஊராட்சி, கல்லம்பாளையம் அருகே மோயாற்றின் குறுக்கே வனத் துறை மூலம் பாலம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. கந்தசாமி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கோவை மாவட்டம், வால்பாறையில் ஒரு புதிய கலைக் கல்லூரியை ஆரம்பிப்பது குறித்தும்;

2. கோவை மாவட்டம், வால்பாறையில் பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. பயிற்சி நிலையம் ஏற்படுத்துவது குறித்தும்;

3. கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள கருமலை மற்றும் நடுமலை குறுகிய பாலங்களை விரிவுபடுத்துவது குறித்தும்;

4. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று நெல்லித்துறை, மன்னம் பாலம் கட்டுவது குறித்தும்;





5. கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் நீண்ட காலமாகக் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

6. கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

7. கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு குரூப் வீடுகள் கூடுதலாகக் கட்டித் தருவது குறித்தும்;

8. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியாறு ஊட்டக் கால்வாய் பழுதடைந்துள்ளதை மீண்டும் புதுப்பிக்க வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளைத் துவக்குவது குறித்தும்;

2. சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் மழைக் காலங்களில் வழிந்து வருகின்ற மழைநீரை சேமிக்க செட்டிச்சாவடி மற்றும் கொண்டப்பநாயக்கன்பட்டி பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் குறித்தும்;

3. சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

4. சேலம் மாநகராட்சி மையப் பகுதியான நாலு ரோடு பகுதியில் நடை மேம்பாலம் அமைக்கப்பட வேண்டியது குறித்தும்;

[2005 பிப்ரவரி 4

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, காந்தி விளையாட்டுத் திடலை விளையாட்டு அரங்கமாக மேம்படுத்தும் திட்டம் குறித்தும்;

2. நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகே பழத்தோட்டம் செல்லும் நெடுஞ்சாலையில் பழுதடைந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டுவது குறித்தும்;

3. நீலகிரி மாவட்டம், குன்னூர் ஒன்றியம், உளிக்கல் சிறப்பு நிலை ஊராட்சி, நான்சச் முதல் பக்காசூரன் மலை வரை நில ஆர்ஜிதம் செய்து புதிய சாலை அமைக்கும் திட்டம் குறித்தும்;

4. நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தெங்குமரஹாடா ஊராட்சி, கல்லம்பாளையம் அருகே மோயாற்றின் குறுக்கே வனத் துறை மூலம் பாலம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. கந்தசாமி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கோவை மாவட்டம், வால்பாறையில் ஒரு புதிய கலைக் கல்லூரியை ஆரம்பிப்பது குறித்தும்;

2. கோவை மாவட்டம், வால்பாறையில் பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. பயிற்சி நிலையம் ஏற்படுத்துவது குறித்தும்;

3. கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள கருமலை மற்றும் நடுமலை குறுகிய பாலங்களை விரிவுபடுத்துவது குறித்தும்;

4. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று நெல்லித்துறை, மன்னம் பாலம் கட்டுவது குறித்தும்;



2005 பிப்ரவரி 4] [திரு. கோவை தங்கம்]

5. கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் நீண்ட காலமாகக் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

6. கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

7. கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு குரூப் வீடுகள் கூடுதலாகக் கட்டித் தருவது குறித்தும்;

8. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியாறு ஊட்டக் கால்வாய் பழுதடைந்துள்ளதை மீண்டும் புதுப்பிக்க வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளைத் துவக்குவது குறித்தும்;

2. சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் மழைக் காலங்களில் வழிந்து வருகின்ற மழைநீரை சேமிக்க செட்டிச்சாவடி மற்றும் கொண்டப்பநாயக்கன்பட்டி பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் குறித்தும்;

3. சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

4. சேலம் மாநகராட்சி மையப் பகுதியான நாலு ரோடு பகுதியில் நடை மேம்பாலம் அமைக்கப்பட வேண்டியது குறித்தும்;

[திரு. மு. கார்த்தி] [2005 பிப்ரவரி 4

5. சேலம் மாநகராட்சி மற்றும் சேலம் ஒன்றியத்திலுள்ள சாலைகளைப் புதுப்பிக்க வேண்டியது குறித்தும்;

6. சேலம் மாநகராட்சியில் உள்ள கன்னங்குறிச்சி ஏரி, இராமன்குட்டை ஏரி, வன்னிய நகர் ஏரி, பஞ்சந்தாங்கி ஏரி, பள்ளபட்டி ஏரி, போடிநாயக்கன்பட்டி ஏரி, சேலத்தாம்பட்டி ஏரி ஆகியவற்றைத் தூர் வாரி பராமரிக்க வேண்டியது குறித்தும்;

7. சேலம் மாநகராட்சிப் பகுதியிலிருந்து பெறப்படும் அன்றாட உரக் கழிவுகளிலிருந்து (குப்பைகள்) மின்சாரம் தயாரிப்பது குறித்தும்;

8. தமிழகம் முழுவதிலுமுள்ள கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகள் அனைத்தும் மாலை நேரக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கும் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

முற்பகல் 10-10

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கார்த்தி முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள விவசாயப் புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்குவது குறித்தும்;

2. சர்வ சிக்ஷா அபியான் (S.S.A.) திட்டத்தின்கீழ் தெலுங்கு, B.R.C. பயிற்சி வகுப்புகளுக்கு 50 தெலுங்கு ஆசிரியர்களை நியமிப்பது குறித்தும்;

3. தளி தொகுதியில் வனப் பகுதியிலுள்ள விவசாயப் பயிர்களைச் சீரழிக்கும் யானைகளினால் ஏற்படும் சேதங்களுக்கு விவசாயிகளுக்கு உடனுக்குடன் நஷ்டஈடு வழங்குவது குறித்தும்;



2005 பிப்ரவரி 4] [திரு. கே.வி. முரளிதரன்]

4. தளி தொகுதிக்குட்பட்ட அககொண்டப்பள்ளி முதல் அனுசோனை வரையிலும் கெலமங்கலம் முதல் தேன்கனிக்கோட்டை வரையிலும் உள்ள மிகவும் முக்கிய தார் நெடுஞ்சாலையைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்தும்;

5. தளி தொகுதியில் மிகவும் முக்கிய நான்கு கோவில்களான பேவநத்தம் சிவா நந்தீஸ்வரர், குந்துக்கோட்டை துர்கம் மலை மல்லிகார்ஜுனீஸ்வரர், தேன்கனிக்கோட்டை பேட்டராய சுவாமி, கொரட்டகிரி மதனகிரிசாமி ஆகிய கோயில்களின் திருப்பணிகள் செய்வது குறித்தும்;

6. தளி தொகுதியில் அஞ்செட்டி அருகே தொட்டள்ளா குறுக்கே தொட்டள்ளா அணை ஏற்படுத்துவது குறித்தும்;

7. தளி தொகுதியில் உள்ள முக்கிய ஏரிகளான தளி கிராம ஏரி, குந்துக்கோட்டை கிராமம், அட்டவங்கா ஏரி, பனை கிராமம் அக்கா தங்கை ஏரி, பாளையங்கோட்டை கிராமம் ஜவளநாயகன் ஏரி, கெலமங்கலம் நஞ்ஜையன் ஏரிகளைத் தூர் வாரி பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

8. தளி தொகுதியில் சிவன் கோயில் இருக்கும் தேவர்பெட்டாவையும், லிட்டில் இங்கிலாந்து என்று அழைக்கப்படும் தளியில் உள்ள ஏரியில் படகு சவாரி மையம் அமைத்தும் சுற்றுலா மையமாக்குவது குறித்தும்;

9. இஸ்ரேல் ப்ராஜெக்ட் திட்டத்தை தளி தொகுதியில் உள்ள குந்துமாரனப் பள்ளி ஜெக்கேரி, பைரமங்கலம், எச். செட்டிப்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் அமல்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. முரளிதரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால்.

[2005 பிப்ரவரி 4

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தினை ஆழப்படுத்தியும், தூர் வாரியும் நீர் கொள்ளளவினை அதிகரிப்பது குறித்தும்;

2. சிவகாசி தொகுதியில் வெம்பக்கோட்டை முதல் சத்திரப்பட்டி வரையிலான மாநில நெடுஞ்சாலை செப்பனிடுவது குறித்தும்;

3. சிவகாசி தொகுதியில் மாரனேரி - நரிக்குடி மாநில நெடுஞ்சாலை பழுதுபட்டிருப்பது செப்பனிடுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராஜகோபால் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கொலக்கொம்பை - முசாபரி, உட்லேண்ட்ஸ், மானார் பழனியப்பா எஸ்டேட் பால்மரலிஸ் - சாம்பார் எஸ்டேட் வழியாக காரமடை பஞ்சாயத்துக்குட்பட்ட முள்ளி - வெள்ளியங்காடு - காரமடை சென்றடையும் பாதை இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட இந்த முக்கியமான சாலையைத் திறப்பது குறித்தும்;

2. நீலகிரி மாவட்டம், உதகை நகராட்சி குடிநீர் விநியோகம் பெறும் ஊட்டி நகராட்சிக்கு உட்பட்ட பார்சன் வேலி அணையில் ஜெனரேட்டர்கள் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



2005 பிப்ரவரி 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. அரசு அலுவலகங்களில் பணி நியமனத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பல இலட்சம் படித்தவர்களுக்குப் பணி வழங்கும் வேலைவாய்ப்புத் திட்டங்கள் குறித்தும்;

3. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்துவது குறித்தும்;

4. கோவில்பட்டியில் உள்ள தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விஸ்தரிக்கச் செய்து குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. இராசேந்திரன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்பவும் ஒன்றாக ஆகிவிட்டீர்கள். திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"ஐந்து ஆண்டுகளாக அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் சுமார் 2,400 கணினி ஆசிரியர்களின் பணி நிரந்தரம், சம்பள நிர்ணயம் செய்வது குறித்து

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக மிக்க நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆளுநர் உரையினுடைய தமிழாக்கத்தை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் படித்ததை பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக வரவேற்கிறோம், நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். குறிப்பாக, தமிழாக்கத்தை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் படித்தவிதம், எல்லோருக்கும் மனதில் புரியும்படியாக இருந்த காரணத்தினாலே பல தடவை கைதட்டல்களும் பிரதிபலித்தன. இதிலிருந்து தமிழாக்கத்தைப் படிப்பதனுடைய முக்கியத்துவத்தை மிக நன்றாக அறிய முடிந்தது. இதே மரபை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்றும் தங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆளுநர் உரையிலே தமிழ்நாடு அரசினுடைய, குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சாதனைகளைப் பற்றியெல்லாம் மிக நன்றாகப் பாராட்டிப் பேசியிருக்கின்றார்கள். அவர்கள் வீரப்பனுடைய விஷயத்திலாகட்டும், புதிய வீராணம் திட்டத்திலாகட்டும், இன்னும் பல்வேறு பிரச்சினைகளில் ஆகட்டும், ஆற்றிய திறமையான ஒரு ஆட்சி முறையைப் பற்றி ஆளுநர் மிகவும் பாராட்டியிருக்கின்றார்கள். அதைப்போலவே, சுனாமிப் பேரலையின் காரணமாகப் பேரழிவு ஏற்பட்டபோது அல்லும்பகலும் விழித்திருந்து, அந்த அனாதை மக்களுக்கு அரும்பணி ஆற்றியதைப்பற்றியும் பாராட்டியிருக்கின்றார்கள்.

நம்முடைய அகில இந்திய பாரதிய ஜனதா கட்சித் தலைவரும், முன்னாள் துணைப் பிரதமருமான உயர்திரு எல்.கே. அத்வானி அவர்கள் அடுத்த நாள் காலையிலேயே இங்கே 9-30 மணிக்கு வந்தார்கள். சுனாமிப் பேரலையாலே சென்னை மாநகரிலே மயிலாப்பூர் தொகுதிதான் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் கடற்கரையோரம் இருக்கின்ற ஒரு பகுதி. அவரை அழைத்துச் சென்று, பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம் போன்ற பகுதிகளைச் சுற்றிக் காண்பித்தோம். அவர்கள் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல்





சொன்னார்கள். ஆறுதல் சொன்னது மட்டுமல்லாமல், எல்லா உதவிகளையும் நாங்கள் செய்யத் தயாராக இருக்கின்றோம் என்றும் அந்த மக்களிடம் உறுதிமொழி கொடுத்துவிட்டு வந்தார்கள். அன்று மாலையே ஐந்து மணிக்கு, குஜராத் மாநில அரசின் முதலமைச்சர் நரேந்திர மோடி அவர்கள், அங்கே இருக்கின்ற சட்ட அமைச்சர் திரு. அஷோக் பட் அவர்களை அனுப்பினார்கள். அவர் ஐந்து மணிக்கு வந்தார். அவர்களையும், அந்தப் பகுதிகளுக்கெல்லாம் அழைத்துச் சென்று காண்பித்தேன். மறுநாள், அவர், ரூபாய் ஐந்து கோடிக்கான காசோலையையும், 42 டன் உணவு தானியங்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கினார்கள்.

முற்பகல் 10-15

அதுமட்டுமல்ல; இன்னும் எத்தனை உதவிகள் வேண்டுமானாலும், குஜராத் மாநில அரசு செய்யத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது என்ற விஷயத்தையும் முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள். இதிலே ஒன்று குறிப்பிடத்தக்கது, சுனாமிப் பேரலையினால் ஏற்பட்ட பேரழிவிற்கு, முதல் மாநிலமாக உதவிக்கு வந்தது குஜராத் மாநிலம்தான் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு, சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் திரு. ரமன் சிங் அவர்கள் வந்தபோது பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம், அவர்களையும் அழைத்துச் சென்று, அவரும் சத்தீஸ்கர் மாநில அரசினுடைய சார்பாக இரண்டரை கோடி ரூபாய் காசோலையையும், 40 டன் அரிசி மற்றும் உணவு தானியங்களையும் அரசாங்கத்திடம் ஒப்புவித்து பிறகு விநியோகம் செய்யப்பட்டது.

அதேபோல, இராஜஸ்தான் மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. திகம்பர் சிங் அவர்களும் இங்கே வருகை புரிந்தார்கள். அவர்களையும் எல்லா இடங்களுக்கு அழைத்துச் சென்றேன். அவர்கள் எல்லோரும் இங்கே மட்டுமல்ல; கடலூர், பாண்டிச்சேரி, நாகை போன்ற பகுதிகளுக்கும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்கும் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். இதிலே நான் குறிப்பிட வேண்டியது, என்னுடைய தொகுதியான மயிலாப்பூர் தொகுதியிலே, சென்னையிலே ஏற்பட்ட பேரழிவால் சுமார் 10,175 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. அவர்களையெல்லாம், நான்கைந்து கல்யாண மண்டபங்களிலே தங்க வைத்து, மாநகராட்சி அதிகாரிகள் உடனடியாக உதவிக்கு வந்தார்கள். அங்குள்ள பள்ளிக்

கட்டடங்களிலேயும், சுமார் 10 ஆயிரம் குடும்பங்களை அமர்த்தி, பல்வேறு அசோஸியேஷன்ஸ், கிளப்புகள் மற்றும் மாநகராட்சி மூலம், அவர்களுக்கு காலையிலே இட்லி, வடை, தேநீர், மதியம் சாப்பாடு, உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அதேமாதிரி, இரவு நேரங்களிலும் பத்து நாட்களுக்குத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வந்தோம். அப்போது, மயிலாப்பூரிலே இருக்கிற இராமகிருஷ்ணா மிஷன் சார்பாகவும் பல்வேறு உதவிகளை வழங்கினார்கள். எல்லா மண்டபங்களிலேயும் தங்கியிருக்கின்ற அவர்களுக்கு, டாக்டர்களை அனுப்பி, உடனடியாக மருத்துவ வசதி செய்து கொடுத்தோம். கால் ஒடிந்தவர்கள், கை ஒடிந்தவர்கள் ஏராளமான பேர் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் முதலுதவி சிகிச்சை அளித்து, அரசு மருத்துவமனைகளிலே சேர்ப்பித்தோம்.

இதுபோல, எண்ணற்ற சேவைகளை, நாகப்பட்டினம் மாவட்டத்திலே, பாரதிய ஜனதா கட்சி மற்றும் இராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒரு மணி நேரத்திற்குள்ளாக ஆரம்பித்து நம்முடைய மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் மற்றும் அகில இந்தியச் செயலாளர் திரு. இல. கணேசன் அவர்கள் தலைமையிலே செய்தோம். அந்தப் பிணங்களை எடுப்பதற்குக்கூட அங்கே ஆட்கள் இல்லை. நூற்றுக்கணக்கான எங்களுடைய தொண்டர்கள் எந்தவித ஆரவாரமும், ஆடம்பரமும் இல்லாமல் அல்லது புகழ்ச்சிக்கு ஏங்கிக் கிடக்காமல், பணி செய்வதே தங்களுடைய கடமை என்று, சொந்தக்காரர்கள்கூட பிணத்தின் அருகிலே போவதற்கு முடியாத அந்த துர்நாற்றத்திலேயும்கூட, அவர்கள் தங்கள் தோள்களிலே சுமந்து அடக்கம் செய்தார்கள். எந்த விளம்பரமும் இல்லாமல், கடமையைச் செய்தார்கள். இதனை, இந்தக் கடமையுணர்ச்சியை, நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நல்லகண்ணு அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன்.

நம்முடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய முன்னாள் நிதியமைச்சர் திரு. ஜஸ்வந்த் சிங் அவர்களும், முன்னாள் அமைச்சர் திருமதி சுஷ்மா சிவராஜ் அவர்களும் இங்கே வருகை புரிந்தார்கள். மயிலாப்பூர் தொகுதியிலே சுற்றிப் பார்த்து எல்லா உதவிகளையும் செய்ய அவர்கள் உறுதிமொழி கொடுத்திருந்தார்கள். டெல்லியிலேயிருந்து, பாரதிய ஜனதா கட்சி சார்பிலே இரண்டு இரயில்கள் நிறைய கோதுமை, அரிசி, சர்க்கரை, பருப்பு, சமையல்



பாத்திரங்கள் எல்லாம் அனுப்பினார்கள். ஒரு செட் சுமார் 750 ரூபாய் ஆகும். இப்படி அனுப்பி வைத்த அவற்றையெல்லாம் நாங்கள் ரீபேக் பண்ணி, கடலூர் மாவட்டத்திலே, நாகை மாவட்டத்திலே, இங்கே மயிலாப்பூரிலே என்று சுமார் 2,500 பேர்களுக்கு அங்கே சென்று, அவர்களுடைய குடும்பங்களை போட்டோ எடுத்து, விண்ணப்பத்திலே் கையெழுத்து வாங்கி, டோக்கன் கொடுத்து முறையாக ஒரு தவறும் இல்லாமல் நேர்மையாக விநியோகம் செய்தோம். மக்கள் எல்லாம் இன்றைய தினம் பாராட்டுகிறார்கள். அரசும் கூப்பன் எல்லாம் கொடுத்து, சில பேர்களுக்கு, 4 ஆயிரம் ரூபாய் சில பேர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் என்று வீடு கட்ட வசதிகள் எல்லாம் செய்து கொடுத்திருக்கின்றார்கள்.

முற்பகல் 10-20

டெல்லியிலே இருந்து 40 டன் தார்ப்பாய்களை அவர்கள் கொடுத்தனுப்பினார்கள். அங்கே தற்காலிக கூரைகள் அமைப்பதற்காக நாம் ஏற்பாடு செய்தோம். இது இல்லாமல், மயிலாப்பூர் பகுதியிலே இருக்கின்ற மீனவர்களுக்கு நல்ல பாதுகாப்பான சிறிய வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக 200 வீடுகளை முதற்கட்டமாக கட்டிக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் பணிவன்போடு தெரிவித்துக் கொண்டு, அவர்கள் நிலங்களை ஒதுக்கினால் அங்கே நாங்கள் கட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்; சேவை புரிவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். பிற மாநில முதலமைச்சர்கள் தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிய உதவிகளை நன்றியுடன் வரவேற்கிறோம். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள் பேசுகின்றபோது, சத்தீஸ்கர் முதலமைச்சர் அவர்கள் 2½ கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியதாகத் தெரிவித்தார்கள். சத்தீஸ்கர் முதலமைச்சர் எந்த நிதியுதவியும் வழங்கவில்லை. 2,235 டன் அளவிற்கு அரிசி வழங்கினார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** நான் அதற்குள்ளே போகவில்லை. அவர்கள் என்னிடம் சொன்னார்கள். சத்தீஸ்கர் என்பது அரிசி களஞ்சிய பூமி. ஆகையினாலே அனுப்பிவிட்டார் போல் இருக்கிறது. உடனடியாக இன்னும் ரூபாய் 2½ கோடிக்கு பதிலாக 5 கோடி அனுப்ப வேண்டும் என்று நான் கண்டிப்பாகக் கேட்டுப் பெற்று, உங்களிடம் சமர்ப்பிப்பதற்கு முயற்சிக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சுனாமி பேரலையினாலே ஏற்பட்ட மாபெரும் பேரழிவில் ஒருபக்கம் மிக துன்பமாக இருந்தபோதிலும்கூட, பல மீனவர்கள் இல்லங்களுக்கு நான் உடனடியாகச் சென்றிருந்தேன். அவர்கள் எல்லாம் நன்றாக சம்பாதித்துக் கொண்டிருந்தவர்கள். ஏழைகள் அல்ல. கூலி வேலை செய்பவர்கள் அல்ல. 8 பவுன், 10 பவுன் நகை போட்டிருந்தவர்கள். ஆனால், அத்தனையையும் இழந்துவிட்டார்கள். மாற்று உடைகூட இலலை. அந்த நேரத்திலே அரசும், தனியார் நிறுவனங்களும் பல்வேறு அரசியல் கட்சிகளும் செய்த உதவி மிக உண்மையான பேருதவியாகும். இதைத் தொடர்ச்சியாக இன்னும் 2 ஆண்டு காலத்திற்கு நாகப்பட்டினம் போன்ற பேரழிவு ஏற்பட்டிருக்கின்ற இடங்களுக்கெல்லாம் மறு வாழ்வு கொடுக்க வேண்டும். நான்கூட நினைத்தேன், என்ன, ஒரு வலை 2,000 ரூபாய், 5,000 ரூபாய் ஆகும் என்று. ஆனால், சிறிய வலையே 25,000 ரூபாய் ஆகிறது. பெரிய வலை 1 இலட்சம் ரூபாய் ஆகிறது. அத்தனையையும் இழந்து விட்டவர்களுக்கு தமிழ்நாடு அரசு வலைகள் வழங்குவதற்கு மானியத் தொகை கொடுத்திருக்கின்றார்கள். மற்றும்...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள் கூறுகின்றபோது, வலைகள் வாங்குவதற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீனவர்கள் அவர்களுடைய தொழிலை முதலில் தொடங்குவதற்காக 65 கோடி ரூபாய் ஒதுக்கி, கட்டுமரத்திலே இருக்கின்ற வலைகள் வாங்குவதற்கு 10 ஆயிரம் ரூபாயும், வள்ளத்திலே இருக்கின்ற வலைகள் வாங்குவதற்கு 20 ஆயிரம் ரூபாயும் கொடுத்து, அதற்கான பணிகள் எல்லாம் இப்பொழுது எல்லா மாவட்டங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





முற்பகல் 10-25

**திரு. கே.என். இலட்சுமணன்:** கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. விலை இப்படியெல்லாம் இருக்கிறது. மக்களுக்கு எவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காண்பிப்பதற்காக நான் சொன்னேன். மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு 2800 கோடி ரூபாய் மற்றும் சுமார் 50 ஆயிரம் டன் உணவு தானியம் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். எப்போதும் ஏற்பட்டிராத பேரழிவு, இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில்தான் பாதிப்பு அதிகம். ஆகையினாலே, 2800 கோடி என்ன, இன்னும் அதிகமாகவே கொடுக்கிறோம் என்று அங்கே இருக்கிற மத்திய அரசு சொல்லியிருக்க வேண்டும், கொடுத்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக 1700 சில்லறை கோடி, இன்னும் வந்து சேரவில்லை. எப்போது கொடுக்கப் போகிறார்கள் என்றும் தெரியவில்லை. அதிலும் 35 per cent தான் இந்த வள்ளம், படகுகள், வலை வாங்குவதற்கு எல்லாம் மானியம் என்று சொல்கின்றார்கள். நாங்கள் சொல்கிறோம், பூராவுமே மானியமாகத்தான் கொடுக்க வேண்டுமென்று. மீனவர்கள் அங்கே கடன் வாங்கிக் கொண்டு, ஒரு இலட்சம் கடன் என்றால், அதில் 65 ஆயிரம் ரூபாய் கடன், 35 ஆயிரம் ரூபாய் மானியம் என்றால், 65 ஆயிரம் கடனைக் கட்டுவதற்கு இயலாது. அவர்கள் பிழைப்பு நடத்தி வருவாய் வருவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, நம்முடைய தமிழ்நாடு அரசு பூராவையும் மானியமாகக் கொடுக்க வேண்டும்; அதற்காகப் போராட வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசால் இதை கண்டிப்பாகச் செய்ய முடியும். பல்வேறு நாடுகளிலிருந்து வந்த உதவிகளை எல்லாம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அவர்களும் கொடுக்காமல் இருந்தால் எப்படி உதவி செய்ய முடியும்? பேரழிவை எப்படிச் சமாளிக்க முடியும்?

நம்முடைய மத்திய அரசு—யாருடைய கையில் கோல் இருக்கிறது என்று உங்களுக்கெல்லாம் தெரியும். அவர்கள் ஆட்டுவித்தால் ஆடுவார்கள். அவர்கள் ஆட்டுவதை நிறுத்திவிட்டால் நின்றுவிடும். அந்த சக்தியைப் படைத்த கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள், இதோ தமிழ்நாட்டு மக்கள் அவதியுறுகிறார்கள். 2800 கோடி ரூபாய் அனுப்புகிறீர்களா அல்லது அடுத்த நாள் வீட்டுக்குப் போகிறீர்களா என்று ஏன் சொல்லக் கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்றுதான்

[திரு. கே.என். இலட்சுமணன்] [2005 பிப்ரவரி 4

நான் கேட்கிறேன். நல்ல காரியத்திற்காக ஆட்சியைக் கவிழ்ப்பதிலே தப்பே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினாலே, தமிழ்நாட்டு மக்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு என்றென்றும் ஆதரவாகவும் இருப்பார்கள்.

நான் இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய மயிலாப்பூர் தொகுதி கடற்கரை ஓரத்தில் இருக்கிற பெரிய தொகுதி. அதனால்தான் பாதிப்பும் அதிகம். ஆகையினாலே, அங்கே தமிழ்நாடு அரசு விசேஷ கவனம் செலுத்தி, உடனடியாக அவர்கள் மறுவாழ்வுக்கு எல்லா உதவிகளையும் செய்துகொண்டிருக்கிறது. இன்னும் விரைவாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, அந்தக் கடற்கரை ஓரமாக எந்த ஒரு உத்தரவோ, permission-னோ இல்லாமல் குடிசை போட்டுக்கொண்டு சில மீனவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக வேறு இடத்திலே மாற்றித் தந்திருந்தால் இந்த அழிவு குறைந்திருக்கும், பலியானோர் குறைந்திருப்பார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, புதுகை மாவட்டத்தில் 7 சார்-பதிவாளர் அலுவலகங்களில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்களுக்குச் சம்பளம் 300 ரூபாய் 10 மாதங்களாக வழங்கப்படவில்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு உடனடியாக கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தளி தொகுதியிலே நேற்றையதினம் மாணவர்களுக்கு Vitamin மாத்திரைகள் கொடுக்கும்போது எந்தத் தவறு ஏற்பட்டது என்று தெரியவில்லை. வயிற்றுப்போக்கு என்று பெரிய அசாதாரண நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களை எல்லாம் கைது செய்திருக்கிறார்கள். குழந்தைகளுடைய நன்மைக்காகப் போராடியிருக்கிறார்கள். அப்படி கைது செய்யப்பட்டவர்களை எல்லாம் அரசு உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை நிறைவுசெய்கிறேன். நன்றி, வணக்கம்.



2005 பிப்ரவரி 4]

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று தினங்களாக நமது பேரவையில், டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி நடைபெற்றிருக்கிற அந்தத் துயரச் சம்பவங்களை நினைவுபடுத்திப் பேசியுள்ளனர். மனிதாபிமானம் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அந்தச் சோகத்திலே பங்குகொண்டதோடு மட்டுமல்லாமல், அந்தப் பணியிலே தமிழக மக்கள் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தையொட்டி இருக்கின்ற நாகப்பட்டினம், வேளாங்கண்ணி மற்றும் கிராமங்களில், குறிப்பாக தமிழகத்தில் 13 மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கிற அந்த சுனாமியினுடைய பேரலைத் தாக்குதல் 2004 ஆம் ஆண்டினுடைய இறுதியில், நம்மையெல்லாம் மிகப் பெரிய சோகத்திலே ஆழ்த்தி இருக்கிறது என்பதை யாரும் மறந்து இருக்க முடியாது. 26 ஆம் தேதி அந்த நிகழ்வுகள் நடந்திருந்தாலும், இரண்டு தினங்கள் என்ன செய்வது என்றே தெரியாமல் மிகப் பெரிய திகைப்பு தமிழ்நாட்டு மக்களுக்கு, அரசுக்கு ஏற்பட்டது. மனித உயிர்கள் எட்டாயிரம் பேர்கள் உயிர் இழந்து இருந்தபோதிலும்கூட, 28 ஆம் தேதிக்குப் பிறகுதான் அந்தப் பணிகளை முற்றிலுமாக தமிழக அரசு வேகமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அதிகாரிகள், அமைச்சர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், சேவை மனம் படைத்திருக்கின்ற நல்லெண்ணம் கொண்டவர்கள், மேற்கொண்டார்கள்.

நேரில் பார்க்கிறபொழுது ஏதோ ஒரு குளத்திலே மீன் செத்து மிதப்பதைப்போன்று குழந்தைகளும், பெண்களும், முதியோர்களும் அதிகமாக மிதந்த அந்தச் சோகமான காட்சியை நம்மால் காண முடிந்தது. அந்த இடர்ப்பாடுகளிலிருந்து எப்படி அந்த மக்களை அவ்வளவு சீக்கிரத்திலே மீட்க முடியும், அந்தப் பிரேதங்களை எப்படி அடக்கம் செய்ய முடியும் என்று ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டிருந்த அந்தச் சோகமான நிகழ்ச்சியை நம்மால் காண முடிந்தது. அதேநேரத்தில் நாகப்பட்டினம், வேளாங்கண்ணி அதனுடைய கடலோரப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள் பாதிக்கப்பட்டவர்கள் போக, உயிர் மீண்டவர்கள் அத்தனை பேர்களையும், அருகில் இருக்கிற தொகுதிகளிலே, 12,000 பேர்களுக்கு மேலே கொண்டு வந்து, அரசின் சார்பாக இறக்கிவிடப்பட்டார்கள். அதில் இன்னும் நெஞ்சைவிட்டு நீங்காத காட்சிகளை நம்மால் காண முடிந்தது. காரணம், இறங்கியவர்கள் மறு பஸ்ஸிலே வந்து இறங்கக்கூடியவர்களில் தன் மகன் இருக்கிறானா

என்று எதிர்பார்த்ததும், இறங்கிய குழந்தைகள் தன் தாயும், தந்தையும் வந்து இறங்குகிறார்களா என்று எதிர்பார்த்ததும், ஓடோடிப் போய் தன்னுடைய உறவினரைத் தேடிப் பார்த்ததும் போன்ற சோகமான காட்சிகளை எங்களால் காண முடிந்தது. அவ்வளவு மோசமான விளைவைச் சந்தித்த அவர்களுக்கு இன்றைக்கு இவ்வளவு கூடிய சீக்கிரத்தில் மறு வாழ்வு கிடைக்குமா என்று எதிர்பார்த்த சூழ்நிலையில், அரசு முழுமையாக அந்தப் பணிகளில் ஈடுபட்டதற்கு நான் முதலிலேயே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, தமிழ்நாட்டினுடைய அரசு அதிகாரிகள் முழுமையாக அந்தத் துர்நாற்றத்திலும் மீட்புப் பணியிலே ஈடுபட்டார்கள் என்பதால் நிச்சயமாக அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, தமிழ்நாடு முழுவதிலுமிருந்து சேவை மனப்பான்மை உள்ள மக்கள் மற்றும் இளைஞர்கள், இறந்தவர்களை எடுத்து வந்து அடக்கம் செய்வதிலே, எரிப்பதிலே தீவிரமாக ஈடுபட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் நன்றி சொல்லக்கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கேகூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களை கம்யூனிஸ்ட்கள் பாராட்டினார்கள் என்று சொன்னார்கள். ஆர்.எஸ்.எஸ்.-ஐ சேர்ந்தவர்கள் கொள்கை ரீதியிலே கம்யூனிஸ்ட்களுக்கு எதிர்ப்பாக இருக்கலாம். கம்யூனிஸ்ட்கள் ஆர்.எஸ்.எஸ்.-க்கு எதிர்ப்பாக இருக்கலாம். ஆனால், ஒவ்வொருவரும் மனிதாபிமானத்தோடு ஈடுபடுகிறபோது அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதுதான் மனிதாபிமானம். அதுதான் அரசியலுக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-35*

அதேபோன்று, அரசியல் ஆக்குவதற்குக்கூட சில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டார்கள். நாகூர் தர்காவுக்குப் பக்கத்திலே இருக்கிற இடங்களில் 300-க்கும் மேற்பட்ட பிரேதங்கள் அப்படியே கிடந்தன. அந்தக் கருவக் காட்டிலே இருந்தன. அங்கே இருக்கிற முஸ்லீம் இளைஞர்கள், நாகூரில் இருந்த இளைஞர்கள் அத்தனை பேரும் அந்த body-களை எடுத்து வந்து, நாகூர் தர்காவிலே இருக்கிற குழியிலேயே புதைக்கின்ற பணிகளிலே ஈடுபட்டார்கள். அதிலேகூட, இறந்த பிணத்தை மத மாற்றம் செய்து புதைத்தார்கள் என்கிற செய்திகள் வெளியில் வந்தன. அதைத்தான் மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் நேற்று குறிப்பிடும்போது,



அப்படிப்பட்ட செய்திகள் பத்திரிகைகளில் வந்ததாக அவர் குறிப்பிட்டார். அங்கே போஸ்டர் ஒட்டப்பட்டது. ஆக, அந்த நேரத்தில்கூட அது அரசியல் ஆக்கப்பட்டது. ஆனால், மதத்திற்கு அப்பால் நின்று, சாதிக்கு அப்பால் நின்று, மனித உணர்வோடு அந்தப் பணிகளிலே இன்றைய தினத்திலே ஈடுபட்டிருக்கிறோம். மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே, தமிழ்நாட்டிலேயிருந்து முழுமையாக வந்திருந்த துப்புரவுத் தொழிலாளர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாழ்ந்த நிலையிலே, கடைக்கோடியிலே, இன்னும் தன்னுடைய வாழ்க்கையின் அடிமட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவன்தான் எந்தப் பணியையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறான் என்பதை நம்முடைய அரசு உணர்வதை, மிக, மிக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே ஆயிரக்கணக்கான காவல் துறையினர் நின்று கொண்டிருந்தார்கள். ஆயிரக்கணக்கான காவல் துறையினர் அந்தக் கடற்கரையோரம் முழுவதிலும் நின்று கொண்டிருந்தார்கள். காவல் துறைக்கு நான்-**துப்புரவுத் தொழிலாளர்கள்தான் அந்தப் பணியிலே ஈடுபட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினரை இப்படிக் குற்றஞ்சாட்டுவது சரியல்ல; அது உண்மையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகக் கடலோரப் பகுதிகளில் சுனாமியால் பாதிப்பு ஏற்பட்டு பல ஆயிரம் பேர் உயிர் இழந்தபோது, காவல் துறையினர் எல்லா மீட்புப் பணிகளிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டார்கள் என்பதுதான் உண்மை. பல்வேறு பணிகளில் காவல் துறையினர் ஈடுபட்டார்கள். உடல்களை மீட்பதிலும் அவர்கள் ஈடுபட்டார்கள். ஆனால், காவல் துறையினரால் மட்டுமே அந்தப் பணியைச் செய்ய முடியவில்லை. ஆகவே, இராணுவத்தின் உதவி கோரப்பட்டது. இங்கே உதவிக்காக வந்த இராணுவத்தினர் அந்த உடல்களைத் தொடமாட்டோம் என்று கூறிவிட்டார்கள். அதனால்தான் காவல் துறையினருக்கு உதவி புரிவதற்காகத் துப்புரவுத் தொழிலாளர்கள் தமிழகம் முழுவதிலிருந்தும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வரவழைக்கப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறையினரை இதிலே குற்றம் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும் இந்தப் பணியிலே அவர்களால்தான் ஈடுபடுத்த முடிந்தது என்பதிலே, இன்னும்கூட...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதுதான் தவறான கருத்து, தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் இன்றுகூட பத்திரிகைகளிலே பல செய்திகளைப் பார்த்தேன். கன்னியாகுமரி, நாகப்பட்டினம், அதைப்போன்று சென்னையிலேகூட காவல் துறையினர் சில பேர்கள் சுனாமியினுடைய பேரலையிலிருந்து சில மக்களைப் பாதுகாத்தார்கள் என்ற செய்திகள்கூட வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட காவல் துறை அதிகாரிகளும் செயல்பட்டிருக்கிறார்கள் என்றுதான் அடுத்ததாக சொல்ல நான் விரும்பினேன். ஏனென்று சொன்னால், அப்படிப்பட்டவர்கள் பற்றி பல பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன. இப்படி வீரமான செயலிலே ஈடுபட்ட காவல் துறையினரும் இருக்கிறார்கள் என்பதையும் நான் மறந்துவிடவில்லை. அதையும் நான் நினைவுபடுத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நாகப்பட்டினத்திற்கு வந்தபோது, அவர்களிடத்திலே உடனடியாக சொன்னோம். உங்களுடைய அறிவிப்பு இந்த மக்களுக்கு ஒரு நம்பிக்கையூட்டுகிற விதத்திலே இருக்கிறது. மேலும், உடனடியாக இதைச் செய்ய வேண்டுமென்று அவர்களிடத்திலே அன்றைக்கு நாங்கள் சொன்னோம். அந்த வகையில்தான் அப்படிப்பட்ட ஒரு சோகமான நேரத்திலே மத்திய அமைச்சர்களும், மத்திய அரசும், நம்முடைய மாநில அரசோடு சேர்ந்து பல பணிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கடலோர மாவட்டங்களிலே என்னுடைய தொகுதியிலே 13 மீனவர் சங்கங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த 13 மீனவக் கிராமங்களும் இந்தப் பேரலையால்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது '** என்று கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 பிப்ரவரி 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவரே மறுத்துவிட்டார். ஆகவே, அது நீக்கப்படுகிறது.

முற்பகல் 10-40

**திரு. ஜி. பழனிசாமி:** என்னுடைய தொகுதியிலேகூட 13 மீனவக் கிராமங்கள் இருந்தன. இன்றைக்கு தடுப்புச் சுவர்கள் கட்ட வேண்டும், தூண்டில் வளைவுகள் உருவாக்கப்பட வேண்டுமென்று மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, அனுபவரீதியாக நாம் பார்க்க வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியில் மாங்ரோவ் காடுகள் இருந்ததன் காரணமாக அந்த மீனவக் கிராமங்களில் முற்றிலும் ஒருவருக்குகூட பாதிப்பு இல்லாத அளவுக்கு பாதுகாத்திருக்கிறது. அதேபோன்று, கோடியக்கரையினுடைய காடு அந்தப் பேரலையிலிருந்து மக்களைப் பாதுகாத்திருக்கிறது. அதேபோன்று, கடலோரங்களிலே அந்த மாங்ரோவ் காடுகளை வளர்ப்பதிலே நமது அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னால், படிப்படியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அந்த மீனவ மக்களுக்கும், அங்கே இருக்கக்கூடிய மீனவ மக்களோடு சேர்ந்து கடலோரங்களில் வாழ்க்கை நடத்தக்கூடியவர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிற நிவாரணப் பொருள்கள், நிவாரணங்களையும் அதுபோன்று நேற்றையதினம் நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதையும் நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பணிகள் முற்றிலுமாக நடைபெற வேண்டும்; அவர்களைச் சென்றடைய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக்கு ஆலோசனை கூறுவதாக நீங்கள் யாரும் கருதிவிட வேண்டாம். 1993 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலத்திலே ஒரு மாபெரும் பூகம்பம் ஏற்பட்டது. 9,000 பேர்கள் அங்கே இறந்து போனார்கள். 16,000 பேர்கள் காயமுற்றார்கள். 1 இலட்சத்து 80 ஆயிரம் பேர்கள் வீடிழந்து நிர்க்கதியாக நின்றார்கள். அந்த அரசு கிராம வாரியாக அங்கே ஒரு கமிட்டி அமைத்தது. ஆக, அரசு செய்கின்ற திட்டங்கள், முழுமையாகவும், நேரடியாகவும் மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்பதற்கான வகையில் அமைப்புகளை,

குழுக்களை அமைத்து, அந்தப் பணிகளை மேற்கொண்டதனுடைய விளைவாக, அந்த மக்களுக்கு முழுமையாக, நிவாரணங்கள் குறிப்பிட்ட காலத்திலே சென்றடைந்தன. அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, நிவாரணப் பொருட்கள் ஆண்களிடம் வழங்கினால் அது குடும்பத்திற்குப் போய்ச் சேராது. பெண்களிடத்திலே போனால் அது குடும்பத்திற்குச் சேருமென்று சொன்னார்கள். உண்மையிலேயே அது வரவேற்க வேண்டியதுதான். அதேபோன்றுதான் அங்கு பட்டா கொடுக்கிறபோதும், வீடு கொடுக்கிறபோதும் கணவன் மனைவிக்குச் சேர்த்தே மகாராஷ்டிரா மாநிலத்திலே வழங்கியிருக்கிறார்கள். ஒரு நல்ல திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள் ஆகியோர் கண்காணிப்புக் குழுவோடு அந்தத் திட்டப் பணிகளை நிறைவேற்றினர். யாராவது ஒரு குறை என்று சொன்னால்கூட, அந்தக் குறையைச் சொல்லக்கூடியவர்கள் அந்தக் கமிட்டியிலே சொல்லி, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மகாராஷ்டிராவிலே ஏற்பட்ட அந்த பூகம்ப பாதிப்பிலிருந்து அந்த மக்கள் மீள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது. நிச்சயமாக அதனுடைய அறிக்கை அரசுக்கு கிடைக்காமல் இருந்திருக்க முடியாது. இருந்தாலும், இந்த நேரத்திலே அதனுடைய அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (அறிக்கையை அமைச்சரிடம் கொடுத்தார்)

அதேபோன்று, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற நிவாரணப் பணிகள் தொடர்ந்து அந்த மக்களுக்குச் சென்றடைய வேண்டும். இதிலே இடைத்தரகர்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒப்பந்தக்காரர்கள்கூட சரியாக செயல்படாமல் போவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. காரணம் என்னவென்று சொன்னால், நானே காவல் துறையிலே சொன்னேன். வேளாங்கண்ணியிலே இறந்தவர்களின் பிரேதங்களை 4 இளைஞர்கள் எடுத்து வந்தபோது, காவல் துறையினரிடத்திலே சொல்லி அவர்களைப் பிடித்து வழக்குப் பதிவு செய்யச் சொன்னேன். காரணம் என்னவென்று சொன்னால், பிரேதங்களைத் தூக்கி வருகின்றபோது அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், யார், கழுத்தில் அதிகமான நகைகளைப் போட்டு இருந்தார்களோ அந்தப் பிரேதங்களை, அவர்கள் தூக்கி வந்தபோது, நகைகளை எல்லாம் கழற்றி எடுத்தார்கள். காதுகளை





அறுத்தெடுத்தார்கள். இவ்வளவு ஒரு சோகமான காலகட்டத்தில்கூட, இந்த நாட்டைச் சூறையாடக்கூடிய, களவாடக்கூடிய நபர்கள் இந்தச் சமுதாயத்திலே இருக்கிறார்கள். ஆகையால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்கின்ற பொருட்கள் உரியவர்களை நிச்சயமாக சென்றடைய வேண்டுமென்று சொன்னால், கடலோரத்தில் இருக்கிற எல்லா கிராமங்களுக்கும் ஒரு வலுவான, அதிகாரம் படைத்திருக்கிற ஒரு கமிட்டியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், தமிழ்நாட்டிலுள்ள எல்லா பகுதி மக்களிடமிருந்தும் மனிதாபிமானத்தை, தமிழ் உணர்வை, நம்மால் முடிந்த அளவு காண முடிந்தது. ஜாதிக்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு, இனத்திற்கு அப்பாற்பட்டு, யார் இறந்து இருக்கிறார்கள் என்று பார்க்காமல், பழைய துணிகள், ஆடைகளை வாங்கி வந்து கொடுக்க வேண்டுமென்கிற அந்த உணர்வு, தமிழ்நாட்டு மக்களுக்கு வந்திருப்பதை, நிச்சயமாக இந்த அவையின் மூலமாக அவர்களைப் பாராட்ட, நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த உணர்வோடுதான் அந்தப் பணிகளிலே நாங்கள் ஈடுபட்டோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, சந்தனக் கடத்தல் வீரப்பன் நீண்டகாலமாக காட்டிலே இருந்துகொண்டு, பிடிபடாமல் இருந்தது மட்டுமல்ல, யானைத் தந்தத்தை எடுத்தது மட்டுமல்ல, சந்தன மரத்தை கடத்தியது மட்டுமல்ல, அண்டை மாநிலமாக இருக்கின்ற மாநிலத்தோடு நமக்குள் இன மோதல்களை, ஒவ்வொரு தடவையும் ஒரு பதற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்த அவனை, நம்முடைய காவல் துறையினுடைய வீரச் செயல் காரணமாக முற்றிலுமாக, அந்தக் கும்பல் அழிந்தது என்பது வரவேற்க வேண்டிய விஷயம். ஆனால், அதே நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, இதே வீரப்பனால் அங்கே இருக்கிற மலைவாழ் மக்கள் பல பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிரடி காவல் துறையாலும் அங்கே இருக்கக்கூடிய மலைவாழ் மக்கள் சில பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சில நிதியுதவிகளை நம்முடைய தமிழக அரசு செய்யவேண்டும். அதற்காக தேசிய மனித உரிமை ஆணையத்தின் சார்பாக சதாசிவம் கமிஷன் அமைக்கப்பட்டு அது ஒரு அறிக்கையை நம்முடைய அரசுக்கு வழங்கியிருக்கிறது. அதை

முழுமையாக நீங்கள் அமல்படுத்த வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-45

சதாசிவம் கமிஷன், நேற்றையதினம்கூட நீதிமன்றத்தின் மூலமாக, தமிழக அரசு 3 மாதத்திற்குள்ளாக அதை ஆய்வு செய்து அதற்குரிய நிதியை வழங்கவேண்டும் என்றும், அதற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறது. பல பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, அதனால் அந்த மலைவாழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நம்முடைய அரசு உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்ததாக, வேளாண் தொழில். இப்போது வேளாண் தொழில் மூலமாகத்தான் நாட்டிலே 70 சதவீதம் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்ற நிலை இருந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக, தமிழ்நாட்டிலும்கூட இப்போது புதிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியவில்லை. மூடியிருக்கிற தொழிற்சாலைகளைத் திறக்க முடியவில்லை. மறு வேலைகள் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலையில், வேளாண் தொழில்மூலம் மட்டும்தான் இப்போது இருக்கக்கூடிய ஏழை எளிய கிராமப்புற மக்களை, விவசாயிகளை ஒரு மாற்று வேலைத் திட்டத்தில் கொண்டு வருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆக, அந்த வேளாண் தொழிலை நம்பி கிராமப்புறங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற அந்த 70 சதவீதம் மக்களின் வேளாண் தொழிலுக்கு ஓர் உறுதியளிப்புத் திட்டத்தை நீங்கள் கொண்டு வரவேண்டும்.

இன்றையதினம் மத்திய அரசுகூட 150 மாவட்டங்களில் வேலைக்கு உறுதியளிப்புத் திட்டத்திற்கான ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. அதுபோன்ற திட்டங்களை, நம்முடைய தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்கள் வறட்சியால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு, மத்திய அரசோடு, மாநில அரசு மேலும் சில மாவட்டங்களை இணைத்து, அவர்களுக்கு வேலைக்கு உறுதியளிப்புத் திட்டங்களை கொண்டு வருவதற்கான முயற்சிகளை தமிழக அரசு செய்யவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அநேகமாக 7,000 பேர்...





**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சில் ஒரு ஒத்த கருத்து இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வருகிறேன். தமிழ்நாட்டில் 3, 4 ஆண்டுகளாக மழை பெய்யாமல் இருந்து, பல மாவட்டங்களில் மழை பெய்து இருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக வேலூர் மாவட்டத்தில் அறவே மழை பொய்த்துவிட்ட காரணத்தால், குடிதண்ணீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக இருக்கிறது. அதை அந்த மாவட்டத்திலிருந்து வந்த உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள். ஒரு குடம் நீர் 2 ரூபாய்க்கு விற்றதாக இன்றைக்குக்கூட செய்தி வந்திருக்கிறது. இன்றைக்குக்கூட சாலை மறியல் ஆங்காங்கு நடந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் தெரிவிப்பது என்னவென்றால், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, அந்த மாவட்டத்தில் உடனடியாக, தொகுதி வாரியாக போர்வெல் போடுவதோ, மற்ற இடங்களுக்கோ தனி நிதி ஒன்று ஒதுக்கி, வறட்சியாக அதைக் கருதவேண்டும். ஏனென்றால், மற்ற மாவட்டங்களுக்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. திருவண்ணாமலைக்குப் போனால் மழை பெய்து நீர் ஓடுகிறது. ஆனால், இங்கோ குடிப்பதற்கே தண்ணீர் இல்லை. எங்கள் ஊரிலேயே ஒரு குடம் நீர் 2 ரூபாய்க்கு விற்கின்ற நிலைமைக்கு வந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு, அவர் பேச்சோடு இணைத்து தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வேலூர் மாவட்டத்தினுடைய குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு மாவட்டத்திலேயுள்ள 20 ஒன்றியங்களிலே இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஆணை வழங்கியதனுடைய அடிப்படையிலே, வேலூர் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் குடிதண்ணீர்ப் பிரச்சினை சம்பந்தமான ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்

சுட்டிக்காட்டியதைப்போன்று, ஒரு குடம் 2 ரூபாய், 3 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலைமை மாவட்டத்திலே இல்லை. உப்பு நீராக இருக்கின்ற ஒருசில பகுதிகளிலே தோன்றுதொட்டு, மக்கள் வறட்சிக்காக மட்டுமல்ல, குடிநீருக்காக அவர்கள் வாங்குகின்றார்கள் என்பதுதான் உண்மையேயொழிய, வறட்சிக்காக அவர்கள் காசு கொடுத்து நீரை வாங்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே, இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைத் தலைவர் எப்போதுமே மிகைப்படுத்தித்தான் பேசுவார். பழனிசாமி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் வேலூர் மாவட்டத்திற்குக் கொண்டு போய்விடாதீர்கள்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் இங்கே இருக்கிறார். அவர் எதிர்க்கட்சியின் துணைத் தலைவர். (சிரிப்பு) (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலேகூட 20 நாளைக்கு ஒருமுறைதான் தண்ணீர். அதனால் காசு கொடுத்து வாங்குகிறார்கள். அதுதான் உண்மை. முதலமைச்சரிடமிருந்து பணம் வரும். அதை மறைத்து விடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, பல நேரங்களில் அவர் எனக்குத் துணை புரிகிற காரணத்தால், துணைத் தலைவர் என்று குறிப்பிட்டிருக்கிறார். (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7000 ஆதிதிராவிடப் பெண்களுக்கு தமிழக அரசின் சார்பாக வேலைவாய்ப்புக்கான பல திட்டங்கள் இங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தளவிலே, ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு எந்தவொரு விடிவும் இல்லாத ஒருபோக்கு தமிழகத்திலே தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகையால், அவர்களுக்கு வேலைவாய்ப்பை



உருவாக்குவதற்கு — கடந்த 7 ஆண்டு காலமாக — கோலப்பன் குழுவின் சார்பாக ஒரு அறிக்கை தமிழக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அந்தக் கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. பழனிசாமி உட்காருங்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காகவும், தொலைநோக்குப் பார்வையோடு அவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்கின்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் சிறப்புற, திறம்பட செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு போன்ற குறைந்த நீரிலே அதிக மகசூல் பெறுவதற்குண்டான மாற்றுப் பயிர்த் திட்டத்தையும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, இன்றைக்கு பல்வேறு கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்பைக் கூடுதலாக உருவாக்கிக்கொண்டு வருகின்றார்கள். குறிப்பாக, படிப்பறிவு இல்லாத பாமர விவசாயத் தொழிலாளப் பெருமக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு மாற்றுப் பயிர்த் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்களுக்கு பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேதகு ஆளுநர் உரையிலேயே அது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிந்திருக்கின்றேன். இன்னும்கூட, இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே, உழைக்கிற மக்களுக்கு நேரடியாக அந்த நிலங்கள் சென்றடைய வேண்டும். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பெரிய முதலாளிகளுக்கு, பெரிய

கம்பெனிகளுக்கு நீங்கள் கொடுக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தையே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பெரிய தொழிலதிபர்களுக்கு இந்த அரசு கொடுக்கவில்லை. அவர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்குவதற்கு இந்த அரசு அனுமதிக்கவில்லை. ஏற்கெனவே, சிறு விவசாயிகளிடம் இருக்கின்ற நிலங்களை, அவர்கள் சாகுபடி செய்வதற்காக, சாகுபடியின்கீழ் கொண்டு வருவதற்காக, இந்தத் தொழிலதிபர்கள் விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். Contract farming-தான் இப்போது செய்யப்படுகிறது. அதாவது, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்றைக்குத் தரிசு நிலங்களாக இருக்கின்றன. அவற்றை மீண்டும் விளை நிலங்களாக ஆக்குவதற்குத் தேவையான முதலீடு செய்வதற்கு இன்றைக்கு சிறு விவசாயிகளிடம் வசதியில்லை. ஆகவே, இப்போது அரசு அறிவித்திருக்கிற திட்டத்தின்படி, பெரிய தொழிலதிபர்கள் 1000 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்துக்கொண்டு, அந்த 1000 ஏக்கர் நிலப்பரப்பில், எத்தனை சிறிய விவசாயிகள் வருகின்றார்களோ, அத்தனை பேர்களுடனும் அவர்கள் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். அந்தத் தரிசு நிலங்களை விளை நிலங்களாக்க என்னென்ன முதலீடுகள் செய்யவேண்டுமோ, என்னென்ன இடுபொருட்கள் கொடுக்கவேண்டுமோ, அவற்றையெல்லாம் இந்தத் தொழிலதிபர்கள் அவர்களுக்கு வழங்குகிறார்கள். விவசாயிகள் குறிப்பிட்ட அந்தப் பயிரை சாகுபடி செய்தபின், இந்தத் தொழிலதிபர்களே, செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, குறிப்பிட்ட விலை கொடுத்து, அவர்களிடம் அந்தப் பயிர்களை வாங்கிக் கொள்கிறார்கள். இதுதான் இந்தத் திட்டத்தின் அடிப்படையே தவிர, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை யாரும் வாங்கவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இப்போது கோலப்பன் குழுவின் சிபாரிசுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய நேரடிப் பார்வையிலே அதை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, சுனாமி பாதிப்பு ஏற்பட்டபோது, கடலோர மாவட்டங்களிலே முழுமையாக எல்லா அமைச்சர்களையும் நான் சந்தித்திருக்கிறேன். அவ்வளவு அமைச்சர்களும் நேரடியாக



அந்தப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கேயிருக்கின்ற சாலைகள் முழுமையாக, பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, கிழக்குக் கடற்கரைச் சாலை; கடந்த பத்து ஆண்டு காலமாக அந்தச் சாலைகள் மேம்பாடு செய்யப்படும் என்கிற அடிப்படையில் இருந்தாலும், இதுவரையிலும் எந்தவொரு பணியும் நடைபெறாமல், பெரிய பாதிப்புக்குள்ளாகி, போக்குவரத்து முழுமையாக இல்லாமல் இன்றைக்கு இருக்கிறது. நான் இதை அரசியலுக்காகச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் முன்னாள் வேளாண் துறை அமைச்சர் இருக்கிறார். அவர் தொகுதியையும் என் தொகுதியையும் இணைக்கின்ற மிகப் பெரிய சாலையைப் பார்த்தோம் என்று சொன்னால், போக்குவரத்துக்கே பயன்படுத்த முடியாத அளவிற்கு அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை ஆய்வு செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்டு, இன்னும் அங்கே நடைமுறைப்படுத்த முடியாமல், அந்தத் திட்டப் பணிகள் செய்யமுடியாமல் இருக்கின்றன. இல்லையென்று சொன்னால், அந்தத் திட்டம் வருகிற வரையாவது அந்தச் சாலைகளைச் சீரமைப்பதற்கு நீங்கள் கடும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிழக்குக் கடற்கரைச் சாலையினுடைய நிலை பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற சாலைகளுடைய தரத்தை உயர்த்தவும், முக்கியமான கிழக்குக் கடற்கரை சாலையை உலகத் தரம் வாய்ந்த சாலையாக மாற்றிடவும் உலக வங்கியினுடைய 2,160 கோடி ரூபாய் என்ற திட்டத்தினை இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் ஆற்காட்டில் இருந்து தூத்துக்குடி வரைக்கும் இருக்கின்ற 732 கிலோ மீட்டர் சாலைகளை உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக மாற்றுவதற்கும், தமிழகத்தில் இருக்கின்ற 2000 கிலோ மீட்டர் மாநில மற்றும் பெரிய மாவட்டச் சாலைகளை உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இடைப்பட்ட காலத்தில்

அந்தச் சாலைகளுடைய பராமரிப்புப் பணி சீரிய முறையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. E.C.R சாலையில் பெரிய பாதிப்புகள் உருவாகின்றன என்பதற்காகத்தான் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன்.

அதேபோன்று, தேனி, வேலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளைப் பார்த்தோம் என்று சொன்னால், இன்றைக்கு அவை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. நாகப்பட்டினத்தில் இருக்கிற மருத்துவமனை நீண்டகாலமாக மாவட்ட மருத்துவமனையாக இருக்கிறது. அந்த மருத்துவமனை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாகப் பராமரிக்க முடியாமல் எந்த அளவிற்குச் சிரமப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உணர்ந்திருப்பார்கள். ஆகையால், அந்த நாகப்பட்டினம் மாவட்ட மருத்துவமனைக்குப் பல்வேறு மருத்துவக் கருவிகள் வழங்கி, அதன் புனரமைப்புக்கான பணிகளை நீங்கள் மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, 12,000 பேர் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்ட என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் நான்கு தாலுகாக்களுக்கு மருத்துவமனையாக இருக்கக்கூடிய ஒரே மருத்துவமனைக்கு தொடர்ந்து இதுவரையிலும் கட்டடம் இல்லையென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு பல தடவை கொண்டு வந்திருக்கிறேன். அமைச்சர் அவருடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், இதுவரையிலும் எந்த ஒரு...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியினுடைய நிதியைப் பெற்றிருக்கிறோம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட மருத்துவமனைகள், அதேபோல் தாலுகா மருத்துவமனைகள், Non-Taluk மருத்துவமனைகள், அனைத்து மருத்துவமனைகளுக்கும் கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய் நிதி பெற்றிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உங்களுடைய மருத்துவமனைக்கு இந்த ஆண்டு Part II Scheme-ல்கூட அதற்கான நிதியும்





ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சருக்கு நன்றி. அதேபோன்று, சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டுவரவேண்டும் என்பதற்காக இரண்டு தினங்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். ஒன்றை நான் குறிப்பிட விரும்புவது, சென்னையினுடைய குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கவேண்டுமென்று சொன்னால் அநேகமாக, 150 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இன்றைய தினத்திலே 140 மில்லியன் லிட்டர் சென்னை நகருக்குத் தேவையிருந்தாலும் 20 சதவிகிதம் தண்ணீர்தான் கொண்டுவரப்படுகிறது. ஆனால், மத்திய அரசும் அறிவித்திருக்கிறது, மாநில அரசும் அறிவித்திருக்கிறது கடல் நீரைக் குடிநீர் ஆக்குகின்ற திட்டங்கள் ஆக..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யவேண்டுமென்றால் அதற்கு 840 Million Litres தண்ணீர் ஒரு நாளைக்குத் தேவைப்படுகிறது. 840 Million Litres per day. ஆகவே, எந்த ஒரு திட்டத்தின் மூலமாகவும் இந்தக் குடிநீர் தேவையை நாம் நிறைவு செய்யமுடியாது. இதைப் பல முறை நாம் விளக்கியிருக்கிறோம். ஆகவேதான், பல்வேறு வழிகளில் இந்தக் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். ஏற்கெனவே, சென்னைக்கு குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகளில் மழை பெய்யும்போது அதனால் கிடைக்கக்கூடிய தண்ணீர், அதனோடு ஆந்திராவிலிருந்து கிடைக்கக்கூடிய கிருஷ்ணா நதி தண்ணீர், அதனோடு புதிய வீராணம் திட்டம் மூலமாக கிடைக்கக்கூடிய தண்ணீர், இவையெல்லாம் சேர்ந்தால்கூட சென்னையின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. அதற்காகத்தான் இப்போது இந்த வீராணம் புதிய திட்டத்தின் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

அதனோடு, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தையும் செயல்படுத்த உள்ளோம். அதற்காக global tender-களை விட்டிருக்கிறோம். பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி உடன் அந்த tender காலம் முடிவடைகிறது.

அதன் பின்னர் யாரெல்லாம் இந்த tender-ல் Bid கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, யார் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்று முடிவு செய்யப்படும். ஆனால், இதில்கூட நாம் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 300 million litre per day தான் செயல்படுத்த முடியும். இதுவரை வந்த tender bid-களில் பெரும்பாலானவர்கள் ஒருநாளைக்கு 100 மில்லியன் லிட்டர் குடிதண்ணீர் வழங்கக்கூடிய திட்டத்தைத்தான் செயல்படுத்த முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் உடனடியாக சென்னைக்கு குடிநீர் வழங்குவதற்கு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்மூலம் ஒரு 300 mld பெறுவதுகூட மிகவும் சிரமமான காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவேதான், ஒரு நாளைக்கு 840 மில்லியன் லிட்டர் தேவைப்படுவதால் பல்வேறு திட்டங்களைத் தொகுத்து, அவற்றின்மூலம் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்திற்கு நன்றி. இதை மத்திய அரசும் அறிவித்திருக்கிறது, மாநில அரசும் அறிவித்திருக்கிறது. இது ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். அதைத்தான் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே 558 சார்-பதிவாளர்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கத்தையும் ஏற்கெனவே இந்த அவையிலேயே நான் அளித்திருக்கிறேன். மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவதற்கு இந்த மாநில அரசு தயாராகத்தான் இருக்கிறது. ஆனால், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் சென்னையில் ஏற்படுத்தப்படும், செயல்படுத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்ததே தவிர, அது எவ்வாறு செயல்படுத்தப்படும், அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்று எந்த விவரமும் இதுவரை தெரிவிக்கவில்லை. அவர்கள் 1000 கோடி ரூபாய் அறிவித்தார்கள். அந்த 1000 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களுக்காக அவர்கள் 1000 கோடி ரூபாயை அறிவித்திருக்கிறார்கள். இந்த 1000 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு 100 mld கூட தயாரிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 588 சார்-பதிவாளர் அலுவலகங்களில் சமீபத்திலே அரசாங்கத்தின் சார்பிலே ஓர் உத்தரவு போட்டு 272 சார்-பதிவாளர் அலுவலகங்களை முற்றிலுமாக நிறுத்துவதற்கான உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிக் கேட்கிறபோது சொல்கிறார்கள், கணினிமயமாக்க வேண்டுமென்பதற்காக, கம்ப்யூட்டர்மூலமாக பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக இவை எடுக்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல், அப்படி ஓர் உத்தரவை அரசு பிறப்பித்தது உண்மைதான். ஆனால், தற்போது அதை நிறுத்தி வைத்திருக்கிறோம். அதைச் செயல்படுத்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மிக மிக நன்றி. ஏனென்றால், தமிழ்நாட்டில் பல இடங்களில் இந்தப் பிரச்சினை தலைதூக்க இருந்த காரணத்தினால் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இறுதியாக, ஒருசில விஷயங்களை நான் சொல்லி, என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடித்து விடுகிறேன். இன்றையதினம் புதிய பஸ்கள் வாங்கலாம் என்று போக்குவரத்துத் துறைமூலமாக சில நடவடிக்கைகளை அரசு எடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும், திருவாரூரிலே ஒரு குழந்தை கீழே விழுந்ததற்குப் பின்னால், இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஏதாவது ஒரு சம்பவம் நடந்த பின்னால்தான் அரசாங்கம் கவனம் செலுத்துகிறதே தவிர, அதற்கு முன்பாக அந்தத் துறையோ, துறை அதிகாரிகளோ அதில் முழுமையான கவனம் செலுத்தாமலே கவனக் குறைவுகள் இருக்கின்றன. (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். கவனக் குறைவு இருக்கிறது. அதேபோலத்தான், கும்பகோணத்தில் குழந்தைகள் 94 பேர் இறந்த பின்னால்தான் தனியார் கல்விக்கூடங்கள் சம்பந்தமாக அரசாங்கம் சில சட்ட திட்டங்களை அமல்படுத்தி நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கிறது. ஒரு விபத்து நடந்த பின்னால்தான் அரசு கவனம்

செலுத்துகிறது; அந்தத் துறை கவனம் செலுத்துகிறதே தவிர, அதற்கு முன்கூட்டியே அந்தத் துறையில் இதையெல்லாம் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. இது, இன்று நேற்று அல்ல, தொடர்ந்து நடைமுறையிலே இருக்கிற சம்பவமாக இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே கும்பகோணம் பஸ் டெப்போ என்று நினைக்கிறேன், இதுவரையிலும் இவ்வளவு பஸ்கள் வாங்கியிருக்கிறீர்களே, ஒரு புது பஸ்ஸைக்கூட நான் பார்த்தது இல்லை. (குறுக்கீடு) இனிமேல் பார்க்கப் போகிறோமா?

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் இந்த கும்பகோணம் பகுதி மட்டுமல்ல, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவின்படி இப்போது வாங்கிக்கொண்டிருக்கின்ற புதிய பேருந்துகள், இனிமேல் வாங்க இருக்கின்ற புதிய பேருந்துகளைப் பொறுத்தவரையில் — 1325 பேருந்துகள் வாங்கயிருக்கிறோம் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்—அந்தப் பகுதியிலே புதியதாக இயக்குகின்றபொழுது, உங்களுடைய சட்டமன்ற உறுப்பினரைக்கூட அழைத்து, அவர்களிடம் காண்பித்துவிட்டுக்கூட அதை இயக்குகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 முதல் 1996 வரை இந்த அரசு தமிழகத்தில் ஆட்சி செய்தபோது, தமிழகத்தின் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டப்பட்ட பேருந்துகளெல்லாம் இந்தியாவிற்கே முன்மாதிரியாகத் திகழ்ந்தன. அவ்வளவு நல்லமுறையில் அவை பராமரிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டு, மாற்றப்பட்டு, பழைய பேருந்துகளே இல்லை என்ற நிலைமையைக் கொண்டு வந்து, இத்தகைய விபத்துகளுக்கே இடந்தராமல் நாங்கள் போக்குவரத்துத் துறையைப் பராமரித்து வந்தோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. 1996 முதல் 2001 வரை இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, போக்குவரத்துத் துறையையே சீரழித்துவிட்டது. இதைப்பற்றிப் பலமுறை இந்த அவையிலேயே தெளிவாக விளக்கம் அளித்திருக்கிறோம். அதனால் பழைய பேருந்துகள் மாற்றப்படவில்லை. ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளும் மராமத்து செய்யப்படவில்லை; பழுதுபார்க்கப்படவில்லை; புதிய பேருந்துகளும் வாங்கப்படவில்லை.





ஆகவே, ஓட்டை உடைசல்களாகப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. மீண்டும் 2001-ல் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, மிக மோசமான நிதி நிலைமையைச் சந்திக்க வேண்டியிருந்தது. நிதி நெருக்கடி. புதிய பேருந்துகள் வாங்கப் பணம் இல்லை. அப்போதும் மிகவும் மோசமாக இருந்த பேருந்துகளை மாற்றிக்கொண்டுதான் இருந்தோம். ஆனால், மாற்ற வேண்டிய எல்லாப் பேருந்துகளையும் மாற்றுகின்ற அளவிற்கு நிதி வசதி இல்லை. ஓரளவுக்குப் பழுதுபார்த்துவிட்டு, இந்தப் பேருந்துகளை ஓட்டிக் கொண்டிருந்தபோதுதான் இந்த விபத்து நேர்ந்தது. அதன்பின்னர், நான் இதற்காக ஒரு கூட்டம் நடத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், அமைச்சரையும் அழைத்து, இனிமேல் இத்தகைய விபத்துகளுக்கு இடம் தரக்கூடாது என்று சொல்லி, இதற்காக விசேஷ நிதியை ஒதுக்கி, பழுதுபார்க்கக்கூட முடியாத அளவிற்கு சேதமடைந்துவிட்ட பேருந்துகளையெல்லாம் உடனடியாக condemn செய்துவிட்டு, புதிய பேருந்துகளை வாங்க வேண்டுமென்று உத்தரவிட்டதன்பேரில்தான், இப்போது புதிதாகப் பேருந்துகள் வாங்கப்பட்டு வருகின்றன. எப்போதுமே ஒரு விபத்து நேர்ந்துவிட்ட பிறகுதான் நடவடிக்கை எடுக்கிறது இந்த அரசு என்பது, ஒரு பொத்தாம்பொதுவான குற்றச்சாட்டு. ஒரு கொலை நிகழ்ந்தபின்தான் காவல் துறை நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, கொலை நடந்து விடுமோ என்று அச்சப்பட்டு, முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்ததிலே குற்றஞ்சொல்வதற்காகச் சொல்லவில்லை. ஏற்கெனவே ஒரு தியேட்டர் எரிந்துபோனது; அதிலே பல பேர் எரிந்துபோனதற்குப் பின்னால்தான் அந்தத் தியேட்டரை முறைப்படுத்துவதற்கு ஒரு சட்டம் அமல்படுத்தப்பட்டது. ஒரு கல்வி நிலையத்தைத் தனியார் நடத்துவதற்கு ஒரு விதி இருக்கிறபோது, ஒரு சட்டம் இருக்கிறபோது, ஒரு விபத்து நடந்த பின்னால்தான், அந்தச் சட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதை ஏற்கெனவே இருக்கிற அரசு, ஏற்கெனவே இருக்கிற சட்டம், ஏற்கெனவே இருக்கிற அதிகாரிகள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில், பள்ளிக்கூடங்கள் எவ்வாறு இருக்க வேண்டும், அங்கே என்னென்ன விதிமுறைகள்

கடைப்பிடிக்கப்பட வேண்டும், என்னென்ன ஏற்பாடுகள் அங்கே செய்யப்பட வேண்டும் என்று ஏற்கெனவே விதிகள் இருக்கின்றன. கும்பகோணம் பள்ளிக்கூடத்தில் நிகழ்ந்த அந்தக் கோர விபத்துப் பற்றி விசாரித்தபோது, கல்வித் துறையில் இருந்த அதிகாரிகள், அந்தப் பள்ளிக்கூடத்திற்கு எல்லாக் கட்டமைப்புகளும் சரியாக இருக்கின்றன என்று, அவர்கள் இலஞ்சம் வாங்கிக் கொண்டு சான்றிதழ்களைக் கொடுத்துவிட்டதால்தான் இந்தப் பாதிப்பு நேர்ந்தது. இதை ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆகவே, குற்றம் புரிந்த அதிகாரிகள்மீது உடனடியாக நடவடிக்கையும் எடுத்திருக்கிறோம். சிலர் கைதும் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அதிகாரிகளே அரசுக்குத் தவறான தகவல்களைத் தருகின்றபோது, இத்தகைய விபத்துகள் நேர்கின்றன. ஆகவே, அரசு இன்னும் எச்சரிக்கையாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

**திரு. ஜி. பழனிசாமி:** நன்றி. இறுதியாக, ரேஷன் கார்டுகள், அதாவது குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சருடைய உத்தரவின் பேரிலே இன்றைக்கு 49 இலட்சத்து 31 ஆயிரத்திற்கு மேற்பட்டிருக்கிற குடும்ப அட்டைகளில் 37 இலட்சம் பேர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இது இந்த அரசில் மட்டுமல்ல, இதற்கு முந்தைய அரசிலும், அதற்கு முந்தைய அரசிலும் பார்த்தீர்கள் என்றால், குடும்ப அட்டை வழங்குவதிலே இருக்கிற குளறுபடிகள் தீர்க்கவே முடியாத ஒன்று. ஏனென்றால், புதிய, புதிய நிலையில் வருகிறபோது இந்தப் பிரச்சினைகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்போதும்கூட தகுதியான ஒரு சிலபேர்கள் விடுபட்டிருக்கிறார்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ரேஷன் கார்டுகள் வேண்டுமென்கின்ற கோரிக்கைகள் எழுந்துகொண்டே இருக்கின்றன. புதிது புதிதாகப் பிரச்சினைகள் எழுகின்றன என்று சொன்னால், அதற்கு அரசு காரணம் அல்ல. அது அரசின் குற்றமல்ல. ஒரு உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் ஒரு கூட்டுக் குடும்பம் இருக்கிறது; 5, 6 பேர் அதில் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று சேர்த்து ஒரு குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. அதன்பின்னர், அந்தக் குடும்பத்திலிருந்து இரண்டு பேர், ஒரு கணவன்-மனைவி பிரிந்து தனிக் குடித்தனம்



போகிறார்கள். உடனே அவர்கள் தனியாக ரேஷன் கார்டு வேண்டும், எங்களுக்கு ரேஷன் கார்டு கிடைக்கவேயில்லை என்று சொல்கிறார்கள். இதனால்தான் பிரச்சினைகள் எழுகின்றன.

**திரு. ஜி. பழனிசாமி:** நன்றி. இதை நாங்களும் தொடர்ந்து அரசிடத்திலேயும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் வலியுறுத்தி வருகிறோம். அதேபோல, இந்தக் குடும்ப கார்டுகள் உள்ளவர்கள், ஒரு மாவட்டத்திலே இருக்கிறபோது, தங்களுடைய குடும்ப கார்டுகளைப் பெற்று பொருட்களை வாங்குகிறார்கள். அந்த மாவட்டத்தை விட்டு தமிழ்நாட்டிலேயே வேறு மாவட்டத்திற்கு—வேறு மாநிலத்திற்குப் போவதில்லை, வேறு மாவட்டத்திற்குப் போனால், அவர்களே அந்த மாற்றத்திற்கான உத்தரவை அந்தக் கார்டிலேயே வழங்கலாம். பல பேர், வேலைவாய்ப்பிலே இருக்கக்கூடியவர்கள், சில பேர் குடிபெயர்ந்து போகக்கூடியவர்கள், சிலபேர் தொழில்ரீதியாக வெளியிலே வாழ்க்கை நடத்தக்கூடியவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கார்டுகள் இல்லாமல் இருக்கிறது. இதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். ஒன்றே ஒன்று. ஒரு கோரிக்கையை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

அதேமாதிரி, கூட்டுறவுச் சங்கங்களிலே ஏற்கெனவே டெபாசிட் செய்யப்பட்டிருக்கிற பணம் பல விவசாயிகள் திரும்பக் கேட்கின்றபோது அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணம் இல்லையென்கின்ற பிரச்சினை தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிறது. இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நான் நிறைவுசெய்கிறபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், தருமபுரி மாவட்டத்திலே, ஊத்தங்கரையிலே ஒரு கொலை நடந்திருக்கிறது. அதனை காவல் துறை சரியாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்காமல், தட்டிக்கழிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அவர் மனுவும் கொடுத்து இருக்கிறார். இதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை நான் முன் வைக்கிறேன். முதலிலே 100 ஆண்டுகளில் சந்திக்காத ஒரு மகத்தான பேரழிவு, மிகப்பெரிய பேரழிவு, இந்தப் பிரச்சினையிலே அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளை, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எங்கள் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். நேற்றையதினம்கூட மூன்று மாதத்திற்கான நிவாரணத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதேபோல, கல்வி அமைச்சர் அவர்கள் கல்விக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்வது சம்பந்தமாகவும், அதேபோல, தேர்வுகள் சம்பந்தமாகவும் வெளியிட்டிருக்கக்கூடிய அறிவிப்புகளையெல்லாம் நாங்கள் வரவேற்கிறோம்.

அதே நேரத்தில், இந்தச் சுனாமியின் தாக்குதலாலே, ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகளைச் சமாளிப்பதற்கு மேற்கொள்ளப்படுகிற நிவாரண நடவடிக்கைகளில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது என்றும், அதை அரசியலாக ஆக்கக்கூடாது என்றும், அது எந்தத் தரப்பில் இருந்து வந்தாலும், அது தவறானது, ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதை எங்கள் கட்சியின் சார்பில் நான் அழுத்தமாக வலியுறுத்துகிறேன். இந்தப் பிரச்சினையில் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்று எங்கள் கட்சி, இந்தச் சம்பவம் நிகழ்ந்த அடுத்த நாளே முடிவு செய்து அறிவித்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எங்கள் கட்சியின் குழு நேரடியாகச் சந்தித்து வேண்டுகோளும் விடுத்துப் பேசியது. அந்த அடிப்படையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுகோளை ஏற்று கடந்த மாதம் 7 ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கூட்டினார்கள்.. அந்த வகையிலே இந்தப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரையும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளையும், ஆளுங்கட்சி உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள மொத்த கட்சிகளையும் ஒருமுகப்படுத்தப்பட வேண்டுமென்பதிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தை முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்திற்கு எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் அப்போதே நன்றியைத் தெரிவித்திருக்கிறோம். இது தொடர வேண்டுமென்று இப்போதுகூட மாநில மாநாடு நாகர்கோவிலிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; அந்த மாநாட்டிலேயும் தீர்மானங்கள்





நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நேற்றைய தினம் முதல் தீர்மானமே இந்தப் பிரச்சினையையொட்டித்தான் நாங்கள் போட்டிருக்கிறோம். பலதரப்பட்ட மக்களும், அமைப்புகளும், நிறுவனங்களும், கட்சிகளும் இதிலே செயல்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருக்கும், விரலுக்குத் தகுந்த வீக்கம், மாவுக்குத் தகுந்த பணியாரம் என்கிற மாதிரி கட்சிக்கும், தகுதிக்கும் அவரவர்களுக்கு உட்பட்ட அளவில் அந்தப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. பி.ஜே.பி. தலைவர்கூட அவர்கள் என்னென்னவெல்லாம் பண்ணியிருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். பெரிய கட்சி, பெரிய லெவலிலே செய்திருக்கிறார்கள். அதேமாதிரி எங்களால் என்ன முடிந்ததோ அதை நாங்களும் செய்திருக்கிறோம்.

*முற்பகல் 11-15*

மேற்கு வங்காளத்திலிருந்து மருத்துவக் குழு வந்து 10 தினங்கள் நாகை மாவட்டத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டது. எங்கள் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் திரு. பிரகாஷ் கரத் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மோகன், பெல்லார்மின் உள்ளிட்ட எங்கள் கட்சியின் மாநிலச் செயலாளர் மற்றும் எங்கள் கட்சியின் 6 சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் தொடங்கி, வேதாரண்யம், குமரி மாவட்டம் முழுவதற்கும் நேரடியாகப் போய் பார்வையிட்டு, நிவாரணப் பணிகளில் எங்கள் அமைப்புகளை ஈடுபடுத்தினோம். நூற்றுக்கணக்கான இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத் தோழர்கள் பிணங்களை மீட்கும் பணிகளில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள். பல நூற்றுக்கணக்கான நிவாரண முகாம்களில் அவர்களாகவே செயல்பட்டார்கள்.

இதை எங்கள் அமைப்பு மட்டுமல்ல, பல்வேறு அமைப்புகளும் செய்திருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், ஜாதி, மத, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு ஒரு மகத்தான மனித நேய உணர்வுகளை இந்தப் பிரச்சினை உருவாக்கியிருக்கின்றது. எங்களைப் போன்றவர்களுக்கு மட்டுமல்ல, நம் எல்லோருக்குமே ஒரு மிகப் பெரிய திருப்தி அளிக்கக்கூடிய விஷயம் என்ன என்று சொன்னால், இன்று நமது மாநிலத்தைப் பொறுத்தவரை ஒரு மதச்சார்பற்ற நிலை என்பது வலுவாக ஊன்றி நிற்கும் ஒரு மாநிலம் என்பது இதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று நாங்கள் அழுத்தமாய் கருதுகிறோம்.

[திரு. கே.சி. கருணாகரன்] [2005 பிப்ரவரி 4

(மேசையைத் தட்டும் ஒலி) நாகூர், பரங்கிப்பேட்டை போன்ற ஊர்களிலே முஸ்லீம் பெருமக்கள் கன்னியாகுமரி, வேளாங்கண்ணி போன்ற மாவட்டங்களிலே கிருத்துவ பெருமக்கள் ஆற்றியிருக்கும்படியான பணிகள் என்பது நாம் நன்றி தெரிவிக்கவில்லை என்றாலும்கூட பரவாயில்லை. அவதூறு பண்ணக்கூடாது. பி.ஜே.பி. போன்ற கட்சிகள் மத மாற்றம் நடக்கிறது என்றெல்லாம் சொல்வது கண்டனத்திற்குரியது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்தப் பிரச்சினையிலே இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன என்பது சம்பந்தமாக நாங்கள் எங்களுடைய தீர்மானத்திலே என்ன சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், இந்தப் பேரழிவிலிருந்து மக்களைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதுடன் மாநில அரசு தனது அரசு இயந்திரத்தை முழுவீச்சில் முடுக்கிவிட்டுப் பணியாற்ற வேண்டும். மத்திய அரசு தாராள நிதியையும், தேவைப்படும் அனைத்து உதவிகளையும் அளிக்க வேண்டும்; காணாமல் போன அனைவரது குடும்பத்தினருக்கும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும்; பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தருவதுடன், பொருள் இழப்புக்கு முழு நிவாரணம் அளிக்க வேண்டும்; மீனவர்களின் தொழிலாளர்களுக்குத் தேவையான படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்களை வாங்க முழுவதும் மானியமாக வழங்கிட வேண்டும்; முதலமைச்சர் நேற்று கேட்டுக்கொண்டார்கள். இந்தக் கருத்தை எங்கள் மாநில மாநாட்டின் தீர்மானத்தில் நாங்களும் வலியுறுத்தி இருக்கிறோம். மத்திய அரசு 100 சதவிகித மானியம் வழங்க வேண்டும் என்பதில் மாநில அரசாங்கத்தின் கருத்தோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இணைந்திருக்கிறது என்பதை நான் அழுத்தமாய் வலியுறுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேசமயம், கடலோரப் பகுதிகளில் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. உப்பளத் தொழிலாளர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதுடன் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; சேதமடைந்த நிலங்களைச் சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்ற முழுச் செலவையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்; உப்பளங்களை மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவரத் தேவையான நிதியைத் தரவேண்டும்; மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய மாநில



2005 பிப்ரவரி 4] [திரு. கே.சி. கருணாகரன்]

அரசுக்கு மத்திய அரசு நிதி வழங்கவும் வலியுறுத்தி, தீர்மானத்தை நாங்கள் நேற்று நிறைவேற்றியிருக்கின்றோம்.

அதேநேரத்திலே, இங்கு சில அரசியல் சர்ச்சைகள் வந்தன. பெரியவர் மாண்புமிகு கே.என். இலட்சுமணன் அவர்கள் பேசுகிறபோதுகூட சொன்னார்கள். நேற்று முதல்வர் பேசும்போது சொன்னார். இடதுசாரி கட்சிகள், மார்க்சிஸ்ட் கட்சியோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ, மற்ற கட்சிகளோ மத்திய அரசை ஆதரிக்கிறது என்பது, மிகப் பெரிய அரசியல் தேசியத் தேவையின் அடிப்படையிலே உருவானது. மந்திரி சபையிலே அங்கம் வகிப்பது என்பது வேறு. அதை ஆதரிப்பது என்பது வேறு. காங்கிரஸ் கட்சியோடு இரண்டற கலந்து கொண்ட கட்சிகள் அல்ல கம்யூனிஸ்ட் கட்சிகள். காங்கிரசை எதிர்த்துத்தான் 3 மாநிலங்களில் 44 உறுப்பினர்கள் மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். காங்கிரஸ் கட்சியின் இப்போதைய பொருளாதாரக் கொள்கைகளை நாங்கள் எதிர்ப்பவர்கள்தான். இன்றுகூட பத்திரிகையில் பார்த்தால், 8½ சதவிகித Provident Fund வட்டியை 9½ சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறது. 12-ஐ, 8-ஆகக் குறைத்த பெருமையை பி.ஜே.பி. அரசு செய்தது. இப்போது நாங்கள் போராடி 12 சதவிகிதம் வேண்டுமென்று கேட்டோம். 9½ சதவிகிதமாக மத்திய அரசு அறிவித்தது. இன்று நாங்கள் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால் சின்னப் பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுத்து ஏமாற்றுகிற வேலையெல்லாம் எங்களிடம் வேண்டாம், இதை 9½ சதவிகிதமாகக் கொடுத்துவிட்டு பொதுத் துறை பங்குகளில் 75 சதவிகிதத்தை விற்காதீர்கள் என்று எங்கள் கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறோம். ஆகவே, ஆதரவு (குறுக்கீடு) தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் ஆதரவை வாபஸ் வாங்கி விடவேண்டியதுதானே? வாங்கிக்கொள்ளலாம்; வாங்கிவிட்டால் தண்ணீர் கிடைத்துவிடுமா? கிடைக்கும் என்று சொல்லுங்கள், யார் அதற்கு உத்தரவாதம்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு உத்தரவாதம் சொல்ல முடியுமா? முடியாது.

முற்பகல் 11-20

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் உத்தரவாதம் சொல்ல முடியாது. ஆனால், மத்தியிலே காங்கிரஸ் தலைமை உத்தரவாதம் அளிக்க முடியும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** கடந்த 30, 37 ஆண்டுகளில் மாறி மாறி வந்த ஆட்சி மாற்றங்களினால் மத்தியிலே பலமுறை—நாங்கள் ஒருமுறைகூட ஆட்சியில் பங்காளிகளாக இருந்தவர்கள் இல்லை-தி.மு.க.வும், நீங்களும் இருந்துள்ளீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-ல் அவர்கள் இயக்கத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஜோதிபாசு அவர்களை இந்த நாட்டின் பிரதமராக்க வேண்டும் என்று பகீரத முயற்சியை நான் மேற்கொண்டேன். காங்கிரஸ்தான் அதற்கு ஒத்துழைக்கவில்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** காங்கிரஸ் ஒத்துழைத்திருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டோம் என்பதுதான் உண்மை. எங்கள் கட்சியின் 17-வது அகில இந்திய மாநாடு தெளிவாகத் தீர்மானித்தது, பங்கெடுக்கக்கூடாது என்று. ஆனால், அந்தப் பெருமையை எங்களுக்கு உருவாக்கித் தந்ததில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்கள்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு எப்போதும் நாங்கள் நன்றி உள்ளவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பதவியைக் கொடுத்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்தார். 1999-ல் மரியாதைக்குரிய திரு. ஜோதிபாசு அவர்களும் ஒப்புதல் தெரிவித்தார், திரு. சுர்ஜித் அவர்களும் ஒப்புதல் தெரிவித்தார், மற்ற கட்சிகள் அனைத்தும் ஒப்புதல் தெரிவித்தன, மாறுபட்ட ஒரே கட்சி காங்கிரஸ்; அதனால்தான் உங்கள் கட்சி அந்த வாய்ப்பை இழந்தது.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன் சொல்லட்டும். (குறுக்கீடு) அவர் சொல்லட்டும். பாதிக்கப்பட்டவர் அவர்தான். அவர் சொல்லட்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மன்னிக்க வேண்டும். காங்கிரசும் கேட்டுக்கொண்டது. அதில் பங்கெடுக்க வேண்டாம் என்று— மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, சுர்ஜித்தும்



ஏற்றுக்கொண்டார், ஜோதிபாசுவும் ஏற்றுக்கொண்டிருந்தார் என்பது உண்மை. எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில், தனி மனித விருப்பங்கள் முடிவாக ஆகாது. கட்சியின் அகில இந்திய மகாநாடு, கட்சியின் மத்திய கமிட்டி, இவ்வாறான ஒரு ஆட்சியில் குறைந்தபட்ச எண்ணிக்கையில் உள்ளவர்களைக் கொண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், நம் கொள்கைகளை அங்கே அமலாக்க முடியாது, ஆகவே, அதில் பங்கெடுக்கக்கூடாது என்று எங்கள் கட்சி முடிவு எடுத்ததால்தான், நாங்கள் அதில் பங்கு பெறவில்லை. (குறுக்கீடு) அதுதான் உண்மை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-ல் அவர்கள் கட்சியின் மத்திய தேசிய Politburo-வை, கமிட்டியை கூட்டிவிட்டுத்தான் மரியாதைக்குரிய சுர்ஜித் அவர்கள் ஒப்புதலைத் தெரிவித்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் பி.ஜே.பி.யைச் சார்ந்த திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள் பேசும்போது, கவிழ்த்துவிடுங்கள் என்று சொன்னார். அதற்காகவா நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டோம்? 6 ஆண்டுகாலம் ஓயாமல் போராடியவர்கள். இந்த நாட்டில் இப்போது மட்டுமல்ல, எப்போதும் இனி பி.ஜே.பி. மத்திய அரசாங்கத்தின் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் நாங்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தவர்கள். ஆகவே, காங்கிரஸ் கட்சி வேறுவகையிலே அதுவாக கவிழ்ந்துபோனால், அது போய்த் தொலையட்டும். நாங்கள் அதைக் கவிழ்க்க வேண்டும் என்கிற அவசியமில்லை, நாங்கள் ஆதரிப்போம். அந்த ஆதரவு எதை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமென்றால் பி.ஜே.பி. மீண்டும் வந்துவிடக்கூடாது என்ற நிர்ப்பந்தத்தின் அடிப்படையில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய நல்ல எண்ணத்திற்குப் பாராட்டுகள். (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** ஏனென்றால் ஆட்சியாளர்கள் சரியான நிலையிலே அந்த இயந்திரத்தை இயக்காதபோது ஏற்படுகிற பழுதினாலோ அல்லது பாதிப்பினாலோ சில சமயம் அதுவாகக் கவிழ்ந்து விடுவது உண்டு. ஆகவே, நான் சாபம் இடவில்லை, அது தேவையும் இல்லை. நாங்கள் ஆதரிக்கக்கூடியவர்கள்தான்.

[2005 பிப்ரவரி 4

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டதெற்கெல்லாம் Spring வைத்தாற்போல் துள்ளியெழும் திரு. ஞானசேகரன் அவர்கள் இப்போது ஏன் மௌனமாக இருக்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கே.சி. கருணாகரன்:** அதுதான், ஒரு தேசிய சிக்கலில் சிக்கிக் கொள்ள வேண்டாமே என்று அவர் ஒருவேளை நினைத்திருக்கக்கூடும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) சரி, விஷயத்திற்கு வந்துவிடுகிறேன். ஆகவே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் இப்போதே கவிழ்ந்துபோனதைப் போல இருக்கிறார். (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** ஆகவே, டெல்லியிலே இருக்கும்படியான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அரசு, தமிழ்நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளை, ஆற்றவேண்டிய கடமைகளை, செய்ய வேண்டிய உதவிகளைப் பெறுவதில் எல்லோரோடும் இணைந்து நின்றும், இன்னும் சொல்லப்போனால், கூடுதல் வேகத்தோடும் நாங்கள் செயல்படுவோம் என்று கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பொறுத்தவரை நாங்கள் இருப்போம். எங்களைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் உறுதியாக அந்தப் பணியைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது, சில முக்கியமான பிரச்சினைகளை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை வெறும் சட்டரீதியான பிரச்சினையாக மாத்திரம் பார்க்காமல்—எத்தனையோ ஆயிரம் கோடி ரூபாய் காரியங்களை நாம் ஆற்றுகிறோம்—ஒரு 10, 15 ஆயிரம் பேர்களைச் சென்ற ஆண்டில் புதிய அளவிலே அவர்களை வேலைக்கு எடுத்து, அரசு ஊழியர்களாக அங்கீகரித்து, 15 ஆயிரம் பேர்களுக்கு இந்த அரசு புனர்வாழ்வு தந்துள்ளது. அது அரசு ஊழியர் போராட்டமும், அதை ஆதரித்தவர்களின் குற்றமாகக்கூட இருக்கலாம். ஆனாலும் ஒரு 15 ஆயிரம் பேர் புதிதாக அரசுப் பணியிலே நிரந்தரமாக்கப்பட்டு, அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கு, அவர்களைப் பணியமர்த்திய அரசுக்கும், முதல்வருக்கும் நன்றி. வேண்டுகோள் என்னவென்றால், இந்த 10 ஆயிரம் சாலைப் பணியாளர்களை மறுபடியும் வேலைக்கு எடுப்பதன்மூலம் நமக்கு எந்த நஷ்டமும் வந்துவிடாது. தயவுசெய்து இதை வேறுமாதிரியாகப் பார்க்கவேண்டாம். கோர்ட்டில் இருக்கிறது



என்று ஒரே வரியில் சொல்லி நாம் தப்பிப்பது நன்றாக இருக்காது. High Court தீர்ப்பு அளித்திருக்கிறது. நீங்கள் appeal செய்யாமல் இருந்தாலே போதுமானது. Supreme Court-ல் appeal செய்திருப்பதால் அது pending ஆக இருக்கிறது. என்ன அவசியம்? சாதாரணமான சமாச்சாரம். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் ஒன்றும் ஆகிவிடப்போவதில்லை. இந்த வேண்டுகோளை தயவுசெய்து இந்த அரசு எடுத்து நிறைவேற்றினால் அரசுக்குத்தான் நல்லது. இதை வேறுமாதிரியான பிரச்சினையாகப் பார்க்க வேண்டாம் என்று கேட்டு, சாலைப் பணியாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல, சென்ற ஆண்டு அக்டோபரில் JACTO-GEO-வோடு முதல்வர் அவர்கள் பேசினார்கள். நல்ல ஒப்பந்தம் ஏற்பட்டு அவர்களும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள். பல சலுகைகளை அறிவித்தீர்கள். ஏற்றுக்கொண்டார்கள். தொழிற் சங்க அங்கீகாரத்தையும் வழங்கினீர்கள். மகிழ்ச்சி. அவர்களோடு பேசும்போது நீங்கள் அக்டோபர் மாதத்தில் ஒரு வாக்குறுதியைத் தந்தீர்கள். சத்துணவுப் பணியாளர்கள்பற்றி, அதாவது அங்கன்வாடி ஊழியர்கள். அவர்களுக்குத் தனியான உயர்வுபற்றி அல்லது பணிபற்றிக் கேட்டபோது, நான் தனியான அறிவிப்பை வெளியிடுவேன் என்று அக்டோபரில் நீங்கள் சொன்னீர்கள். அதை மீண்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். தயவுசெய்து அதன்மீது உரிய அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அதேமாதிரி, கவர்னர் அறிக்கையில் போக்குவரத்துத் துறையில் செய்திருக்கக்கூடிய மாற்றங்களைப்பற்றி அறிவித்து இருப்பதற்கு மகிழ்ச்சி. 2,000 புதிய பஸ்கள் வாங்குகிறோம். 4,848 பழுதடைந்த வாகனங்களை 30 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து, ஒழுங்குபண்ணப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வரவேற்கிறோம். இலாபம் ஈட்டியுள்ளது. நஷ்டத்தில் ஓடியது, இப்போது இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது. அரசின் சாதனை. நஷ்டம் ஏற்பட்டால் தொழிலாளர்கள் துரோகம் செய்து விட்டார்கள் என்று நீங்கள் சொல்வீர்கள். இப்போது இலாபம் கிடைத்துள்ளது. ஐந்து ஆண்டுகள் முடிந்தும் அவர்களுக்குச் சம்பள உயர்வுபற்றி பேச்சுவார்த்தை நடத்தாமல் இருப்பது என்ன நியாயம்?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Wage Settlement ஊதிய ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தைக்கு அரசும், போக்குவரத்துக் கழகமும் எப்போதும்

தயாராக இருக்கிறது என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிக்கையிலேயே தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், இந்தத் தொழிற் சங்கங்கள்—உங்களுடைய தொழிற் சங்கமும், மற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிற் சங்கங்களும் நீதிமன்றத்திற்குச் சென்று, இந்த ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றபோது, ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட நான்கு சங்கங்களை மட்டும்தான் அழைத்துப் பேசவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிற் சங்கமும், உங்களுடைய தொழிற் சங்கமும் C.I.T.U. புதிய தேர்தலை நடத்தி, அதிலே தேர்வு செய்யப்பட்டவர்களை அழைத்துத்தான் இந்த ஊதிய ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்று நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறீர்கள். தேர்வு செய்யப்படாத மற்ற தொழிற் சங்கங்கள், பதிவு பெற்ற தொழிற் சங்கங்கள் அனைத்தும், அனைவரையும் அழைத்துப் பேசவேண்டுமென்று அவர்களும் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆக, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதன் காரணமாகத்தான் இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடங்க முடியவில்லை. இதனால்தான் இந்த ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு இடையூறாக இருந்தது உங்களுடைய தொழிற் சங்கங்கள்தான். இந்த நிலையை அறிந்ததற்குப் பிறகுதான், உங்களுடைய நிலை, உங்களுடைய கொள்கை நமது தொழிலாளர்களுக்கு விரோதமாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தால்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் யாரும் கேட்காமல் தானே முன்வந்து ஊதிய ஒப்பந்தம் ஏற்படும் வரை இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு 250 ரூபாயை தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிக்கையை நீங்கள் உன்னிப்பாக, கவனமாக படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதும் நீங்கள் நீதிமன்றத்திலிருந்து வழக்குகளை வாபஸ் வாங்கிவிட்டு, எப்போது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும் அரசு பேசுவதற்குத் தயாராக இருக்கிறது என்ற உத்தரவாதத்தையும் அம்மா அவர்கள் அளித்திருக்கிறார்கள். ஆகவே, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடக்காமல் இருப்பதற்கு உங்களுடைய தொழிற் சங்கங்கள்தான் காரணமே தவிர, அரசோ, அம்மா அவர்களோ, இல்லை என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



*முற்பகல் 11-30*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கருணாகரன் அவர்கள் பேசுகின்றபோது போக்குவரத்துக் கழகங்கள் வருவாயை உபரியாக ஈட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அது தவறான கணக்கு. ஒருபுறம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் நிருவாகச் சீர்திருத்தம், நிருவாகச் செம்மை காரணமாக போக்குவரத்துக் கழகங்களுடைய வருவாய் பெருகுகிறது. ஆனால், அதேநேரத்தில் மைய அரசு, நீங்கள் ஆதரிக்கின்ற மைய அரசு, பலமுறை டீசலுக்கு வரி உயர்வை, விலை உயர்வை ஏற்படுத்திய காரணத்தால் ஏற்படுகின்ற நட்டம், அதையும் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். மைய அரசிடம் சொல்லி டீசல் விலையைக் குறைக்கச் சொல்லுங்கள். உபரியாக வருகின்ற வருமானத்தை நாம் ஊழியர்களுக்குத் தரமுடியும். இல்லையென்றால் நாம் பேருந்து கட்டணத்தைத்தான் உயர்த்தி, ஊழியர்களுக்கு அதிக ஊதிய உயர்வைத் தரமுடியும். பேருந்துக் கட்டணங்களை ஏற்றினால் அதற்கும் போராடுவீர்கள். ஊதிய உயர்வு தரவில்லையென்றும் போராடுகிறீர்கள். இப்படிப்பட்ட மாறுபட்ட அணுகுமுறை ஏன்? மைய அரசை வற்புறுத்தி டீசல் விலையைக் குறைக்கச் சொல்லுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தபோதெல்லாம் எதிர்த்து தெருவிலே நிற்கிறவர்கள் நாங்கள். இப்பொழுதும் மூன்று தடவை சண்டை போட்டிருக்கிறோம். எதிர்த்து தெருவில் நின்றும் சண்டை போட்டிருக்கிறோம். ஆதரிக்கவும் செய்து கொண்டிருக்கிறோம். கியாஸ், அதாவது சமையல் எரிவாயுக்கு மாதா மாதம் 5, 5 ரூபாய் கூட்டுகிறோம் என்று அறிவித்தார்கள். கடும் நிர்ப்பந்தத்திற்குப் பிறகு அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நாங்கள் கொடுத்த நிர்ப்பந்தத்தினால்தான் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவ்வளவுதான் எங்களால் செய்ய முடியும். உத்தரவு போடுகிற இடத்தில் நாங்கள் இல்லை. இன்னும் 50 வருடம் ஆனாலும் நாங்கள் போகப் போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், திரு. சந்தானம் ஏதோ கேட்கிறார்.

[2005 பிப்ரவரி 4

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி மத்திய அரசுக்கு ஆதரவு தெரிவிக்கின்ற கட்சிகளெல்லாம் தெருவிலே நின்று மட்டும்தான் போராடுகிறார்களே தவிர, நாடாளுமன்றத்தில் இந்தக் கேள்வியை எழுப்பவேயில்லை. அதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கு இவர்கள் எழுப்பியிருக்கவேண்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அனுதாபப்படுகிறேன். அவர் இடதுசாரிக் கட்சி. எங்களோடு சேர்ந்து வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கிற கட்சி, அகில இந்திய பார்வர்ட் பிளாக். பார்லியமென்ட்டில் நாம் எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, சபையில் தவறான தகவலைத் தரக்கூடாது என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் நிலைமை, கத்திமுனைமீது நடப்பது போன்று இருக்கிறது. ஒருபக்கம் நாம் பேருந்துக் கட்டணங்களை உயர்த்த விரும்பவில்லை. பேருந்துக் கட்டணங்களை உயர்த்துவதால் மக்கள்மீது மீண்டும் ஒரு சுமையை நாங்கள் போட விரும்பவில்லை. அதேநேரத்தில் மத்திய அரசு திரும்பத் திரும்ப டீசல் விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் போக்குவரத்துக் கழகங்களை நடத்துவதே சிரமமான காரியமாக இருக்கிறது. இந்த நிலைமையை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்துதான் இந்த அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற கட்சியைச் சார்ந்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய கட்சியின் தலைவர்கள் மத்திய அரசை வற்புறுத்தி, டீசல் விலையைக் குறைக்கச் செய்ய வேண்டுமென்று மக்கள் நலன் கருதி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** தொடர்ந்து எங்கள் குரல் வலுவாக ஒலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவ்வளவுதான் பண்ண முடியும். அதைச் செய்துவிடலாம். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. நீங்களும் சேர்ந்து வாருங்கள்.



2005 பிப்ரவரி 4]

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது தொடர்ந்து அவர்களுடைய குரல் வலுவாக ஒலிக்கும் என்று அறிவித்தார்கள். டீசல் விலை உயர்வுக்காக அவர்களுடைய குரல் வலுவாக, ஆதரவாக ஒலிக்குமா அல்லது டீசல் விலையை உயர்த்தக் கூடாது என்பதற்காக அவர்கள் குரல் வலுவாக ஒலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** எங்கள் குரல் எவ்வாறு ஒலிக்கும் என்று இந்திய நாடு முழுமைக்கும் தெரியும். அமைச்சருக்குப் புரியாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. நாங்கள் நிரந்தரமாக போராடிக்கொண்டிருக்கிறோம். (சிரிப்பு) அடுத்து.... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் போராடுகிற இடத்தில் இல்லை. பாராளுமன்றத்தில் ஆட்சி செய்கிற கட்சியே உங்களுடைய ஆதரவில்தான் இயங்குவதாக நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். ஒரே வரியிலே ஆதரவைத் திரும்பப் பெறுவோம் என்று நீங்கள் கூறினால் மறு நாளே டீசல் விலையை அவர்கள் இறக்கிவிட்டுப் போகிறார்கள். ஏன் அதைச் செய்வதிலே நீங்கள் தயக்கம் காட்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதனைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, ஆதரவைத் திரும்பப் பெற்றால் அவர்களே இறங்கிவிடுவார்கள். பிறகு டீசல் விலையை எங்கே இறக்குவது? (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** என்னுடைய வேலையை வெகுவாகக் குறைத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. (சிரிப்பு) அடுத்து, ஆளுநர் உரையிலே இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பற்றியெல்லாம் நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. அவிநாசி-அத்திக்கடவுத் திட்டம் சம்பந்தமாக ஒரு கட்சி அல்ல அனைத்துக் கட்சிகளும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், ஐந்து மணித் துளிகளிலே முடித்துவிடுங்கள்.

[2005 பிப்ரவரி 4

**திரு. கே.சி. கருணாகரன்:** சரி. அனைத்துக் கட்சிகளும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துகொண்டிருக்கிறோம். 11 சட்டமன்றத் தொகுதிகள் சம்பந்தப்படுகிறது. தொகை கொஞ்சம் அதிகமானதுதான். ஆனாலும் தேர்தலில் நாம் கொடுத்த வாக்குறுதி, அவிநாசி-அத்திக்கடவுத் திட்டத்தை நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றும் என்று வாக்குறுதி தந்தோம். முதலாவது அறிக்கையில் பொதுவாகச் சொன்னோம். அதை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சம்பந்தப்பட்ட வழக்கில் சில புகார்கள். தண்ணீர் திருடப்படுகிறது. Main pipe-line-ல் gate valve போட்டு, இரண்டு inch pipe-line-லே திருட்டுத்தனமாக தண்ணீர் கொண்டு போவதை நானே நேரில் கண்டறிந்து கையும் களவுமாகப் பிடித்து தண்ணீர்த் திருட்டு தடுக்கப்பட்டது. ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து நான் வலியுறுத்தி வருகின்றேன். எந்த நடவடிக்கையும் இல்லை. ஒரு சாதாரண fitter, Steeph என்ற கீழ்நிலை fitter மேலே சஸ்பெண்ட் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. Engineer-கள்மீது.... (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே அந்தச் சம்பவங்கள் எங்கும் நடைபெறவில்லை. அப்படி நடைபெறுவதாக அவர் தெரிவிக்கும் தகவலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக் கடிதம் மூலமாகக் கொடுத்தார்கள் என்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நேற்று முன்தினம் 300 பேருக்கு மேற்பட்ட ஊழியர்கள், பொதுமக்கள் கோவையிலே அந்தச் சம்பவங்களையெல்லாம் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி, Engineers பெயர்களைப் பதிவு செய்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தி, அந்தத் தகவலை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். நான் அமைச்சரிடம் அதைத் தருகிறேன். உரிய நடவடிக்கைக்குக் கொண்டு போகட்டும். ஒரு பக்கம், தண்ணீர்ப் பற்றாக்குறை. ஜனங்களுக்குத் தண்ணீர் supply பண்ண முடியவில்லை. இன்னொரு பக்கம், இயல்பான வறட்சி. கிடைக்கிற



தண்ணீரை இப்படி அதிகாரிகளும், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளும் என்றுகூட சொல்லலாம்; தொடர்பு வைத்து தண்ணீரைத் திருட்டுத்தனமாக திருடுவது, Kinley போன்ற நிறுவனங்களுக்குத் தண்ணீர் supply பண்ணுவது என்ற மாதிரியான complaints எல்லாம் இருக்கிறது. ஆகவே, குடிநீர்ச் சம்பந்தப்பட்ட பிரச்சினையை ஒரு essential service என்பதன் பேரில், அத்தியாவசிய சேவை என்பதன் பேரில், இந்த அரசு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய நிர்வாகத்தை ஒரு சரியான கட்டுப்பாட்டின்கீழ் கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கிற மாநகரத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு எரியும் பிரச்சினை. நான் உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு மூன்று முறை கடிதங்கள் நேரடியாகக் கொடுத்திருக்கிறேன். அரசின் கவனத்திற்கும் தெரியும். நிதி அமைச்சர் அவர்களோடுகூட ஒரு முறை பேசினோம். அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு சம்பந்தமான பிரச்சினை. இப்போதுகூட, ஜனவரி மாதம் 17 ஆம் தேதி, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு பிரச்சினையை விவாதிப்பதற்கு என்றே ஒரு சிறப்பு மாமன்றக் கூட்டம் நடத்தப்பட்டு அதன்மீது சில தீர்மானங்களை கோவை மாநகராட்சி எடுத்து அரசுக்கு அனுப்பியுள்ளது. அரசு என்ன செய்ய வேண்டும்? ஒரு சாதாரண விஷயம். முதல்வர் அவர்கள் புரிந்துகொள்வதற்காக நான் சொல்வது என்னவென்றால், அங்கீகாரம் வழங்கப்படாத மனைப்பிரிவுகளில் 50 ஆயிரம் மக்கள் வாழும் பகுதிகளில் தண்ணீர் கொடுப்பதிலே நமக்கு மாறுபட்ட கொள்கை இல்லை. லாரிகளிலே சப்ளை பண்ணுகிறோம். கொடுமை என்னவென்று கேட்டால், வருடம் ஒன்றுக்கு, லாரிக்களுக்கு மட்டும் வாடகையாக ஒரு கோடி ரூபாயைக் கொடுக்கிறது மாநகராட்சி. அதைத் தடுத்து நிறுத்தி பொதுப் பகிர்மானக் குழாய்களை அமைத்துவிட்டோம் என்று சொன்னால், மாநகராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் கூட வருடம் ஒன்றுக்கு செலவாகாது. பணம் மிச்சமாகும். அரசுக்கு மிச்சமாகும். இதை நிறைவேற்றித் தாருங்கள் என்று நாங்கள் மூன்று ஆண்டு காலமாக கரடியாய்க் கத்திக்கொண்டிருக்கிறோம். அரசுதான் செய்ய வேண்டும். தண்ணீர் சப்ளை பண்ணுவதில் நமக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஏன் லாரியின் மூலம் கொடுக்க வேண்டும்? பொதுப் பகிர்மானக் குழாயைப் போட்டால் இரண்டு கோடி ரூபாயிலே முடிந்து போகும். ஆகவே... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அங்கீகாரம் வழங்கப்படாமல் இருக்கின்ற பகுதிகளிலே உள்ள மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது தண்ணீரை கொடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த அங்கீகரிக்கப்படாத மனைப் பட்டாக்களை அங்கீகாரம் செய்வது சம்பந்தமாக அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

**திரு. கே.சி. கருணாகரன்:** கடந்த சுமார் ஒன்றரை வருட காலமாக பத்தாயிரக்கணக்கான ஜனங்கள் வீதிக்கு வந்து போராடினார்கள். 72 பேர் கொண்ட மாநகராட்சியில் 32 பேர் இந்தப் பிரச்சினையிலே எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள், போராடிக் கொண்டிருக்கிறார்கள். விசேஷமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. 4, 5 கோரிக்கைகள்தான். பணச் செலவு ஒன்றும் கிடையாது. நிர்வாக ரீதியில் செய்ய வேண்டிய வேலை. இவ்வளவு காலம் கடத்துவது சரியல்ல. இது மக்களுக்கு நியாயம் வழங்கியதாக ஆகாது. நாம் யாரும் எந்தக் கட்சிக்காரர்களும், சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களோ ஜனங்களிடம் போக முடியாது. ரோடு கிடையாது. தண்ணீர் கிடையாது. தெரு விளக்கு கிடையாது. சாலை வசதி கிடையாது. Metropolitan city மாதிரி இருக்கக்கூடிய கோயம்புத்தூர் மாநகரத்தில் இப்படி ** மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது மிகவும் கஷ்டமான விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கோவை மாநகரத்தில் இருக்கின்ற மக்கள் ** அத்தகைய நிலைமை நானும் கோவையைச் சேர்ந்தவன் என்கின்ற வகையில், அங்கே இல்லை என்பதைக் குறிப்பிட்டு, அவர் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று குறிப்பிட்டிருப்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கே.சி. கருணாகரன்:** அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சேர்த்துக்கொள்ளலாம். உண்மை என்னவென்று கேட்டால், அவர்கள் சுகமாக இல்லை. ரோடு இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? தண்ணீர் கிடைக்கவில்லை. தெரு விளக்கு கிடையாது. நீங்கள் மழைக் காலங்களில் போனீர்கள் என்றால், சாரமேடு பகுதிகளில் கால் பதியும். அதை எல்லாம் நான் பட்டியல் போடத் தயார். நியாயமா இது? ஏதாவது மறுப்புத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக அமைச்சர் அவர்கள் இவ்வாறு பேசக்கூடாது. உண்மையில் மிகப் பெரிய நெருக்கடி. வாருங்கள், என்னோடு வாருங்கள். நான் அழைத்துச் செல்கிறேன். அதை ஜனங்கள்கிட்டே சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** இல்லை, ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடத்திலே ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். சபையில் unparliamentary word தான் use பண்ணக் கூடாதே தவிர, உடனே அதை எடுத்துவிடுகிறேன் என்று சொல்கிறீர்கள். நான் ஒன்றே ஒன்று சொல்லிவிடுகிறேன். எனக்கு ஒரு ஆசை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** உடனே அமைச்சர்கள் எழுந்து எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எடுத்து விடுகின்றீர்கள். என்றாவது ஒரு நாள் இந்த அமைச்சர்கள் சொல்லியும் எடுக்காமல் இருக்கின்றேன் என்று சொல்வீர்களா? அந்தத் தீர்ப்பை ரொம்ப நாளாக நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். உடனே எடுத்து விடுகிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள் நியாயமாகச் சொல்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** Unparliamentary word இல்லை. ** என்று சொல்வது தப்பா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள் சொல்வது, நியாயமாகச் சொல்கிறார்கள். ஆகவே, நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு திரு. கே. பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற இடங்களிலே எல்லாம் அரசினுடைய அங்கீகாரம் பெறாமல் தானாக அங்கே பல்வேறு பகுதிகளிலே இருக்கின்றவர்கள் வீட்டு மனைகளை விற்பனை செய்கின்றபோது, அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப எந்தச் சூழ்நிலையிலே அந்த மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டாலும், குறுகிய இடமாக இருந்தாலும் அதைப் பெற்றுக்கொள்கிறார்கள். சாலை அமைப்பதற்குத் தேவையான அளவிற்குப் பாதைகளை விடுவதும் இல்லை. அவர்கள் குறுகிய இடங்களிலே ஆங்காங்கே அவர்களுடைய வசதிகளுக்கு ஏற்றாற்போல் வீடுகள் கட்டிக் கொள்வதால் சட்டத்திற்குப் புறம்பான கட்டடங்கள் கட்டி இருக்கின்ற காரணத்தினால்தான் அந்த மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படாமல் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை சீர்செய்வதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடைசியாக முடிவுக்கு வருவதற்கு முன்னால் உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு ஒரு அன்பான வேண்டுகோள். தயவுசெய்து ஒரு நாள் கோவைக்கு வாருங்கள். மாமன்ற உறுப்பினர்களை, மேயரை, கமிஷனரை அழைக்கலாம். சில பகுதிகளுக்காவது நேரடியாக வந்து ஒட்டுமொத்தமாக ஆய்வு செய்யுங்கள். ஒரு பிரச்சினையில் இருக்கக்கூடிய அடியும், தலையும் A முதல் Z வரை என்ன இருக்கிறது; என்ன பிரச்சினை; எங்கே இதிலே சிக்கல் இருக்கிறது; இதை என்ன செய்யவேண்டும்-இவை எல்லாம் உங்களுக்குத் தெரியாதவை அல்ல. மிகச் சிறந்த தலைமை தாங்கும் நமது முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதற்குத் தீர்வு காண்பார் என்பதிலே எங்களுக்குச் சந்தேகம் கிடையாது. ஏன் காலம் கடத்தப்படுகிறது என்பது மட்டுந்தான் தெரியமாட்டேன் என்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவிலேயே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரை கோவைக்கு அனுப்புகிறேன். அவர் பிரச்சினைகளை ஆராய்ந்து இங்கே வந்து அறிக்கை தந்த பிறகு, எவ்வளவு விரைவாக முடியுமோ இதற்கு ஒரு தீர்வு காண்கிறேன் என்கின்ற உத்தரவாதத்தை அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2005 பிப்ரவரி 4]

**திரு. கே.சி. கருணாகரன்:** மிகுந்த நன்றியை என் சார்பிலும், எங்கள் கட்சி சார்பிலும், கோவை மாநகர மக்களின் சார்பிலும், துன்பப்பட்டு வருகின்ற மக்களின் சார்பிலும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இந்த மகிழ்ச்சியோடு நிறைவு பண்ணுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** சரி. முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 11-45*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த இந்த உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையினுடைய இறுதியிலே, "தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை வளம் பெறத் தேவையான மிக விரைந்த முன்னேற்ற நடவடிக்கைகளை குறிக்கோளாகக் கொண்டு, இந்த அவையில் நடக்கும் விவாதங்கள் நடுநிலைமை கொண்டதாகவும், ஆக்கபூர்வமானதாகவும், பொருளார்ந்ததாகவும் அமையும் என நான் நம்புகிறேன்" என்று முடித்திருக்கிறார். ஆகவே, அந்த வகையிலே இந்த ஆளுநர் உரைமீது விருப்பு வெறுப்பில்லாமல் ஒரு எதிர்க் கட்சி சொல்லவேண்டிய வகையிலே, ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நான் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன் என்பதை முதலிலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கைகளை, செயல் திட்டங்களை எடுத்துச்சொல்லக்கூடிய வகையிலே, அதிலும் குறிப்பாக வரக்கூடிய நிதிநிலை அறிக்கையிலே நிறைவேற்றவிருக்கக்கூடிய கொள்கைகளை, திட்டங்களை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு முன்னோட்ட அறிக்கை என்பதை நான் உணர்கிறேன். ஆகவே, அந்த வகையிலே இந்த ஆளுநர் உரையிலே சிலவற்றை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.



226628
சென்னை-600 009

[திரு. ஜி.கே. மணி] [2005 பிப்ரவரி 4

அறிவிப்புகளாகவும் சொல்லியிருக்கிறார். அந்த வகையிலே பார்க்கின்றபொழுது 2001 ஆம் ஆண்டு இந்த ஆட்சி துவங்கிய காலத்திலேயிருந்து இன்றைய வரையிலே ஆளுநர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே ஒவ்வொரு ஆளுநரும் ஆண்டுதோறும் நிறைய வாக்குறுதிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று சொன்னால், இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படி ஆளுநர் உரை என்பது....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 முதல் கடந்த ஆளுநர் உரை இந்த அவையில் வாசிக்கப்பட்ட வரை ஏறக்குறைய 226 அறிவிப்புகள் இந்த அவையில் செய்யப்பட்டன. அவற்றில் 10 தவிர, மீதி அனைத்தும் செயல்படுத்தப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 10 அறிவிப்புகளும் இப்பொழுது process செய்யப்பட்டு வருகின்றன. அவை pending-ஆக இருக்கின்றன. விரைவில் அந்தத் திட்டங்களின்மீதும் ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. பத்து என்பது அல்ல, பத்துக்கும் மேலான அறிவிப்புகள், நிறைய அறிவிப்புகள் ஆளுநர் உரையிலே, இன்னும் நான் இங்கே ஆதாரத்தோடு வைத்திருக்கிறேன். குறிப்பிட்டுச் சொல்லக்கூட விரும்புகிறேன். அதைப்போல, நிதிநிலை அறிக்கையிலேகூட சொல்லப்பட்டவை ஏராளமாக இருக்கின்றன. ஏதோ இதை நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. நிதிநிலை அறிக்கையில் சொன்னாலும் அல்லது ஆளுநர் உரையிலே உறுதிகளை அளித்தாலும்கூட அது எந்த அளவிலே இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிறைவேற்றப்படாத திட்டங்கள், அறிவிப்புகள் என்ன இருக்கின்றன. கடந்த ஆண்டு அறிவிப்பில் தொடங்க இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு, அதன் தொடர்ச்சியாக அறிக்கை வருகின்ற நேரத்திலே, அதை, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடர்கின்ற நேரத்திலே குறிப்பிட்டிருந்தால் இது ஒரு நல்ல ஆட்சிக்கு, நல்ல நிர்வாகத்திற்கு முன் உதாரணமாக இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொடர்ந்து மத்திய அரசாங்கத்திலேகூட ஒவ்வொரு ஆண்டும் அறிவிப்புகள் அறிவித்த பிறகு, இவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; இந்தத் திட்டங்களைத்



2005 பிப்ரவரி 4] [திரு. ஜி.கே. மணி]

தொடவேயில்லை ; இது பாதி நிறைவேறியிருக்கிறது என்று அறிவிப்பு செய்கிறார்கள். ஆகவேதான், நான் இந்த மாமன்றத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஒவ்வொரு ஆண்டும் உங்களுடைய அறிவிப்புகளை நீங்கள் வெளியிட்ட பிறகு, அடுத்த ஆண்டு தொடக்கத்திலே, நீங்கள் இந்த ஆளுநர் உரைக்கு முன்பு சட்டமன்றத்திலே ஒரு அறிக்கையாக வெளியிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அறிக்கை வெளியிட இந்த அரசு தயாராக இருக்கிறது. இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருப்பது ஆளுநர் உரை. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம். ஆகவே, பட்ஜெட்டைப் பற்றி, நிதிநிலை அறிக்கையைப் பற்றி இப்பொழுது பேசக்கூடாது. 2001, 2002, 2003 மற்றும் 2004 ஆகிய நான்கு ஆண்டுகளில் இந்த அவையில் வாசிக்கப்பட்ட ஆளுநர் உரைகளில் ஒட்டுமொத்தமாக 226 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இவற்றில் 216 அறிவிப்புகளைச் செயல்படுத்த ஆணைகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் 10 அறிவிப்புகள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவற்றின்மீதும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். இதுசம்பந்தமான அறிக்கையை இந்த அவையில் வைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம், வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். ஒரு ஆளுநர் உரைக்கு முன்பு கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டது; நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டது எந்த அளவிற்கு நிறைவேறியிருக்கிறது என்பதைச் சொன்னால் தொடர்ந்து அதை எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். இந்த மாமன்ற உறுப்பினர்களும், நாட்டு மக்களும் இதை நன்கு அறிவார்கள் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். அதிலே உதாரணத்திற்குக்கூட 10-க்கு மேல் இருக்கின்றன என்பதைச் சொல்கிறேன். இங்கே, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். குடும்பத்திற்கு ஒரு வீடு அல்ல; வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்கள் மனைப் பட்டா வேண்டுமென்று விண்ணப்பித்தவர்கள் ஏராளம் பேர் இருக்கின்றார்கள். அது இன்னும் நிலுவையிலே இருந்துகொண்டிருக்கிறது.

[திரு. ஜி.கே. மணி] [2005 பிப்ரவரி 4

அதைப்போல, *26* அறிவிப்புகளுக்கு மேலாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற விவரங்களை இங்கே என்னிடத்திலே வைத்திருக்கிறேன். *2001* ஆம் ஆண்டிலே செப்டம்பர் மாதத்திற்குள்ளாக கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் நடத்தி முடிக்கப்படும் என்று சொன்னீர்கள். ஆனால், இதுவரையிலே நடத்தப்படவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை நம்முடைய மாமன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் தேர்தல் நடத்த முடியவில்லை. இதுதான் உண்மை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றுக்கும் நீதிமன்றம் என்று சொல்லி காரணம் காட்டிவிட்டால் பொருந்தாது. நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றம் என்று ஒரு காரணம் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு அரசு என்ன செய்ய முடியும் என்று தெரியவில்லை. எத்தனையோ வழக்குகளில் இருதரப்பு வாதங்களையும் கேட்டு முடித்த பின்னர் நீதிபதிகள் orders reserved என்று சொல்லிவிடுகிறார்கள். அப்போது அரசால் என்ன செய்ய முடியும்? இதற்கு ஏதாவது வழி இருந்தால் திரு. ஜி.கே. மணி அவர்கள் தெரிவிக்கலாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சாதாரண பிரச்சினையல்ல. ஆண்டுதோறும் நிறைய கடன் வாங்கக்கூடிய பிரச்சினை. கூட்டுறவு நிறுவனங்களுடைய பிரச்சினை. அங்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லை. ஆகவே, இதற்கு முக்கியத்துவம் கொடுத்து நீதிமன்றத்திற்குத் தேவையான ஆவணங்கள் என்னவோ, உடனுக்குடன் அவற்றை கொடுத்து, அந்த வழக்கை விரைந்து முடிக்க வேண்டும். அதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். இத்தனை ஆண்டு காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதைத்தான் நான்—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அல்லாமல், என்னென்ன ஆவணங்கள்



2005 பிப்ரவரி 4] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

நீதிமன்றத்திலேயிருந்து கேட்கப்பட்டதோ அனைத்து ஆவணங்களும் உரிய நேரத்தில் உரிய முறையில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஏதேனும் திட்டம் வைத்திருந்தால் அதை இந்த அரசுக்குக் கொடுத்தால் அதையும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் பரிசீலிப்பார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர் தேர்தல், மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பார்கள் என்று சொன்னீர்கள். அதுவும் இங்கே நிறைவேற்றப்படவில்லை. அதைப்போல...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்கள் எப்போதுமே அபாண்டமான குற்றச்சாட்டுக்களை இங்கே சொல்வார். அதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். ஆனால், சொல்லுகின்ற குற்றச்சாட்டுக்கு அர்த்தம் இருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை மக்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள், அதை நீங்கள் செயல்படுத்தவில்லையென்று சொன்னால், அந்த அதிகாரம் மாநில அரசிடம் இல்லை. அதற்கு மத்தியிலே, நாடாளுமன்றத்திலே ஒரு Constitutional amendment கொண்டு வர வேண்டும். ஆகவே, உங்கள் அமைச்சர்களே மத்தியில் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வலியுறுத்தச் சொல்லி ஒரு Constitutional amendment-ஐ நிறைவேற்றச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கெடுத்தாலும் நீங்கள் மத்திய அரசைச் சொல்கிறீர்கள். மத்திய அரசு (குறுக்கீடு) நான் சொல்கிறேன், சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி தொடர்ந்து இப்படிச் சொல்கிறார் என்றால் ஒன்றைத்தான் சொல்லத் தோன்றுகிறது. உண்மையாகத் தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குவதுபோல் நடிப்பவர்களை எப்படி எழுப்ப முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

[2005 பிப்ரவரி 4

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளம் இருக்கின்றன. மத்திய அரசு செய்ய வேண்டுமென்று சொன்னால், இந்த மாமன்றத்திலே அதற்கான தீர்மானங்களை நிறைவேற்றி நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களை அணுகி, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டு மக்கள் ஒருமித்த குரலிலே குரல் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. மன்னிக்க வேண்டும். மணி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் சார்பில்தான் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் மைய அரசுக்கு உட்பட்ட மைய சட்டம் (குறுக்கீடு)-மணி, கவனியுங்கள்-Central Act-க்கு உட்பட்ட அதிகாரமாக இது இருக்கிற காரணத்தால், மைய அரசுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே பலமுறை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் செவிமடுக்கவில்லை. இதை நீங்கள் அங்கு சொல்லி மாற்ற வேண்டும். மைய அரசு சட்டத் திருத்தம் கொண்டு வந்தாக வேண்டும். நமது சட்டசபையில் ஈடேற்றக்கூடிய ஒன்று அல்லவே?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையெல்லாம் நான் தெரியாமல் சொல்லவில்லை. நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையிலே மத்திய அரசாங்கத்தின்மீது குறை சொல்வது, தமிழகத்தைச் சார்ந்த மத்திய அமைச்சர்கள்...

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை குறை சொல்லவேண்டும் என்று நாங்கள் எதுவும் சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையை இப்போது கிளப்பியது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை, பொதுமக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் விருப்பம். ஆகவே, இதுகுறித்து பலமுறை மத்திய அரசிற்கு நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். ஆனால், மத்திய அரசு அதைச் செய்யவில்லை. ஆகவே, மத்திய அரசைத்தான் வற்புறுத்தவேண்டும். அந்த அதிகாரம் மாநில அரசிடம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 பிப்ரவரி 4]

**திரு. ஜி.கே. மணி:** நான் அதை குறை சொல்லவில்லை. மத்திய அரசு நிறைவேற்றவேண்டியதற்கு, மத்திய அரசு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டியதற்கு, மாநில அரசானது இந்த மாமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி (குறுக்கீடு) இல்லை. இல்லை. ஒரு தீர்மானம் போடலாம். (குறுக்கீடு) மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கை என்று சொன்னால் (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. மத்திய அரசாங்கம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களைப் பற்றிதான் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** நான் ஊராட்சி மன்றம் என்று சொல்லவில்லை. ஊராட்சி ஒன்றியம் என்றுதான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அதிகாரம் இல்லை என்று சொல்கிறீர்கள். அதிகாரம் இல்லாதவற்றை மத்திய அரசைக் கேட்டு செய்வோம் என்று அறிவித்திருக்கலாம். அதுவுமில்லை. (குறுக்கீடு) இல்லை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் அப்படி ஒரு அறிவிப்பு கூறப்படுகிறது என்றால், மைய அரசிடம் தெரிவித்து சட்டத் திருத்தம் கொண்டு வர மைய அரசை வற்புறுத்துவோம் என்று பொருள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, தூங்குபவர்...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மத்திய அரசாங்கம் நிறைய நிதி கொடுக்கவேண்டியது இருக்கிறது மாநில அரசாங்கத்திற்குச் செய்யவேண்டிய உதவிகள் ஏராளம் இருக்கின்றன. அதற்கு மத்திய அரசு நிறைவேற்றக்கூடிய வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டியவற்றை இந்த மாமன்றத்திலே தீர்மானங்களாக நிறைவேற்றலாம். தமிழ்நாட்டிலே இருக்கிற மத்திய அமைச்சர்கள் ஒத்துழைப்போடு நிறைவேற்றுவதற்கு, இங்கே இருக்கக்கூடிய மத்திய அரசில் அங்கம் வகிக்கிற கட்சிகளினுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டுமே தவிர, அதை விடுத்து, இந்த மாமன்றத்திலேயும் சரி, வெளியிலேயும் சரி, எதிர்க்

கட்சிகள்மீது குறை சொல்வது, மத்திய அமைச்சர்மீது குறை சொல்வது, நம்முடைய வளர்ச்சிக்கு அறிகுறியாக அமையாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அதேமாதிரி நம்முடைய காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம் ரூ.30 கோடியில் கட்டப்படும் என்று தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. இதுவும் நீதிமன்றப் பிரச்சினை என்று சொன்னாலும்கூட இதையெல்லாம், விரைவாக முடிப்பதற்கு, ஆண்டுதோறும் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்களே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையின் தலைமை இயக்குநர் அலுவலகப் புதிய கட்டடத்திற்கு, அடிக்கல் நாட்டியாகிவிட்டது. ஓர் ஆண்டிற்குள் அது கட்டி முடிக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டும் விட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** நான் தவறாகச் சொல்லவில்லை. தொடர்ந்து ஒரு வருடமாக சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். அதேபோல, 2001 வரவு-செலவுத் திட்டத்திலும் அதேபோல ஆளுநர் உரையிலேயும் இங்கே நீர் ஆதாரத் தொகுப்பு திட்டம்-2, இது 2001-லிருந்து இன்று வரையிலே, 2005 வரையிலே சொல்லப்பட்டு வருகிறது. உலக வங்கியை நாங்கள் எதிர்நோக்கி இருக்கிறோம். கோரிக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லி வருகிறோம். அதேபோல, 2001-லே ரூ.2090 கோடி என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இப்போது 2005-ல் மதிப்பீடு கூடுதலாக ஆகியிருக்கும். ஆனால், நான்கு ஆண்டுகள் கழித்தும் அதே தொகையைச் சொல்லிக்கொண்டு உலக வங்கியை நாங்கள் எதிர்நோக்கி இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தால், இந்தத் திட்டத்தை அறிவிக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆகவே, இப்படி என்னாலே நிறைய சொல்லிக்கொண்டே இருக்க முடியும். அதேபோல, கடந்த ஆட்சிக் காலத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அதற்குப் பதிலாக புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கொண்டு வந்தீர்கள். இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் வாயிலாக நீங்கள் சொல்லி இருப்பது 2001-ல். 2003 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே 182 ஒன்றியங்களில் ரூ.227.41 கோடி மதிப்பிலான 258 செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. அதேபோல, 2003-ல் 220 ஒன்றியங்களில் ரூ.267 கோடி செலவிலான 320 முன்மொழிவுகள் பரிசீலனையில்



உள்ளன. ரூ.23.14 கோடி மதிப்பிலான 33 தொழிற்கூடங்களுக்கு ஒப்பளிப்பு. 2004-ல் சொல்லப்பட்டது. 369 ஒன்றியங்களில் 695 திட்டங்களைச் செயல்படுத்த ஒப்பளிக்கப்பட்டன. கிட்டத்தட்ட 72 திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. இப்படி சொல்லிவிட்டு பிறகு... (குறுக்கீடு)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரக் கணக்கு என்பது பழைய கணக்கு. ஆனால், இப்போது குறிப்பிட்டிருக்கக்கூடிய வளர்ச்சிப் பணிகள் குறித்து, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக என்னென்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது குறித்து ஆளுநர் உரையிலே விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 31 ஆம் பக்கத்திலே, 34-வது பாராவிலே விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் புதிய முன்னேற்றம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்ல வருகிறேன். சொல்வதற்கு முன்பாகவே படித்துவிட்டார்கள். ஆளுநர் உரை 2005, பக்கம் 31, பத்தி 34. இதிலே சொல்லப்பட்டிருப்பது-உற்பத்தி தொடங்கப்பட்ட தொழில்கள் 204, முதலீடு ரூ.132.26 கோடி. தொடங்கப்படவுள்ள தொழில்கள் 158. முதலீடு ரூ.103.32 கோடி. நிதி நிறுவனங்களின் பரிசீலனையில் உள்ளது 145 தொழில்கள். முதலீடு ரூ.109.70 கோடி. இதிலே சொல்லப்பட்டிருப்பது மொத்தம் 507 திட்டங்கள். ஆனால், 2004 ஆம் ஆண்டு சொல்லப்பட்டது 695 திட்டங்கள். ஆனால், இந்த ஆண்டு 507 என்று சொல்கிறீர்கள். எப்படிக் குறைந்தது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவேற்றப்பட்ட திட்டங்களை விட்டுவிட்டுத்தான் நாங்கள் அதிலே குறிப்பிட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு வந்திருக்கக்கூடிய, இப்போது நிதி நிறுவனங்களிலே எதிர்பார்க்கப்பட்டிருக்கக்கூடிய குறிப்புகளைத்தான் நாங்கள் இங்கே வைத்திருக்கிறோம். அவர் தெளிவாக, கொடுக்கப்பட்டிருக்கிற பாராவைப் புரிந்துகொண்டு அந்த விளக்கத்தைச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து புரிந்து, கூட்டிக் கழித்து கணக்குப்போட்டுத்தான் சொல்கிறேன். தொடங்கப்பட்டது, தொடங்கப்பட உள்ளது, பரிசீலனையில் உள்ளது. இவை எல்லாவற்றையும் சேர்த்துதான் சொல்கிறேன். எண்ணிக்கை வித்தியாசம் வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டிச் சொல்கிறேன். நீங்கள் ஆதாரத்தோடு இருந்தால் சொல்லுங்கள். நீங்களும் கூட்டிக் கழித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ள திட்டங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று எந்த விதியும் இல்லை. சில சமயம் பரிசீலனைக்குப் பிறகு சில திட்டங்கள் நிறைவேறாது என்று ஒதுக்கப்படுவதும் உண்டு.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு, தொழில் செய்வதற்கு அனுமதி கொடுத்ததற்குப் பிறகுகூட பங்குதாரர்களுக்குள்ளே ஏதாவது கருத்து வேறுபாடுகள் வருகிறபோது, சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுமே தவிர, திட்டத்திலே கோளாறு இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான பிரச்சினை. 2004 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில், பக்கம் 43, பத்தி 52-லே சொல்லப்பட்டிருப்பது. "தமிழ்மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை மேம்படுத்துதல், நமது மாநிலத்தின் வளஞ்செறிந்த பண்பாட்டு மரபுகளைப் பாதுகாத்தல் ஆகிய பண்புகள் இந்த அரசின் உயர்ந்த பணியாக அமைந்திருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிக்க மகிழ்ச்சி. இதை வரவேற்கிறோம். எல்லோரும் வரவேற்கிறோம். அதற்காக அரசுக்கு நாங்கள் நன்றி சொல்கிறோம், பாராட்டுகிறோம். அதேநேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆளுநர் உரையிலே விவாதம் வந்த நேரத்திலே 'சிட்டிசன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பெண்பால் என்று சொன்னால் அது 'குடிமகள்' என்று பொருள்படும் என்ற ஒரு புதுமையைச் சொன்னார்கள். அதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம், வரவேற்கிறோம். ஆக, அப்படிச் சொன்ன அதேநேரத்தில் அந்த ஆண்டு ஒரு படம் வந்தது. அந்தப் படத்திற்குப் பெயர் 'சிட்டிசன்'. அதுவேகூட நம்முடைய மாநிலத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி 'குடிமகன்' அல்லது



'குடிமகள்' என்ற பெயரில் வந்திருக்குமானால் இந்த அரசுக்கும் பெருமை சேர்த்திருக்கும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படங்களின் பெயர்களை நிர்ணயிக்கும், தீர்மானிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. திரைப்படங்களைத் தணிக்கை செய்து, அவற்றில் எந்தெந்த காட்சிகள் இடம் பெறலாம், அவற்றில் எந்தெந்த காட்சிகள் நீக்கப்பட வேண்டும், என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டும், திரைப்படத்திற்கு வைக்கப்பட்ட பெயர் இருக்கலாமா, கூடாதா, இவற்றையெல்லாம் முடிவு செய்வது மத்திய அரசால் அமைக்கப்படுகின்ற தணிக்கைக் குழு, Censor Board. ஆகவே, இதில் மாநில அரசுக்கு எந்தவிதமான பங்கும் கிடையாது; அதிகாரமும் கிடையாது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். ஒரு படத்தில் வன்முறை காட்சிகள் அதிகமாக இருக்கின்றன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, 'சிட்டிசன்' என்பது தமிழ்நாடு அரசு தயாரித்த படம் அல்ல.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின்மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்ற நோக்கம் இல்லை. நான் முன்பே சொன்னேன். ஆக்கபூர்வமான ஆலோசனைகள்தான். நாம் எல்லாம் தமிழர்கள். நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், UNESCO நிறுவனம் சொல்லியிருக்கிறது; மொழி ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னவென்று சொன்னால் இன்னும் 50 ஆண்டுகளில் தமிழ் சிதைந்துவிடும்...*(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் சொல்வது தவறான கருத்து. UNESCO அப்படிச் சொல்லவேயில்லை. UNESCO நிறுவனம் அப்படிக் குறிப்பிடவில்லை. கணினிக்குப் பயன்படாத மொழிகள் 50 ஆண்டுகளில் அழிந்துவிடும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் கணினிக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. UNESCO நிறுவனம் அப்படிக் குறிப்பிட்டதாகப் பலபேர் மேடைகளிலே பேசிக்

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [2005 பிப்ரவரி 4

கொண்டிருந்தார்கள். அந்தக் கருத்தே தவறு. அப்படிச் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் வராத பல்வேறு விஷயங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். முதலில் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருவதைப் பற்றி இங்கே பேசினார். அந்த அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்று எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருந்தார்.

இப்போது, திரைப்படங்களைப் பற்றிச் சொல்கிறார். நான் மீண்டும் சொல்கிறேன், திரைப்படங்களில் என்ன இருக்கலாம், என்ன இருக்கக் கூடாது, என்ன பெயர் வைக்கலாம், என்ன பெயர் வைக்கக் கூடாது, இதையெல்லாம் முடிவு செய்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காம் தமிழாம் அறிவியல் தமிழைக் கண்ட நமது அன்னை அவர்களுடைய உத்தரவினபேரில், கணினியில்கூட தமிழைப் புகுத்த வேண்டுமென்கின்ற மனப்பான்மையோடு, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த தமிழ்க் குடிக்கு என்றைக்குமே அழிவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்குத் தேவை என்றால் கணினியில் எந்த அளவிற்குத் தமிழ் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது; எந்த அளவிற்கு தமிழ் உயர்வடைந்திருக்கின்றது என்பதை நான் அவருக்குக் கொடுக்க இருக்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டும் அல்ல, தமிழைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும், பரப்புவதிலும் இதுவரை இருந்த வேறு எந்த அரசும் காட்டாத முனைப்பை இந்த அரசு காட்டி வருகிறது (மேசையை தட்டும் பலத்த ஒலி) என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். நர்சரி வகுப்பு முதல் +2 வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் அறிவியல் தமிழ் என்னும் பாடத்தைக் கட்டாயப் பாடமாக்கி இருக்கிறது இந்த அரசு என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2005 பிப்ரவரி 4]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆசையும் அதுவேதான். முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். கார் என்பது ஆங்கில வார்த்தை. அவர் காரை எடுக்கப் போகும்போது ஓட்டுநரைப் பார்த்து என்ன வார்த்தையைப் பயன்படுத்தி காரை எடுங்கள் என்று சொல்வார் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, டீ கடைக்குப் போகிறார். தேனீர் என்பது சுத்தமான தமிழ். அங்கே போய், டீ கொடுப்பா என்றுதான் கேட்பார். என்ன வார்த்தையைப் பயன்படுத்துவார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் இங்கே விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, சைக்கிள் இருக்கிறது. அதுவும் ஆங்கில வார்த்தைதான். அன்றாடம் பயன்படுத்தக்கூடிய சில வார்த்தைகள், ஆங்கில வார்த்தைகளை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். என்ன சொல்லி இன்றைக்கும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். என்ன சொல்லி இன்றைக்கும் உறுப்பினர் அழைப்பார் என்பதை இங்கே விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, சைக்கிள் என்பது எல்லா பாகங்களும் சேர்ந்த ஓர் அமைப்பு. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சைக்கிளில் உள்ள உதிரி பாகங்களைத் தமிழில் சொல்லிவிடுவது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பெயருக்கு முன்னால்கூட ஜி.கே. மணி என்கின்ற ஆங்கில எழுத்துகள்தான் போடப்பட்டிருக்கின்றன. அதற்கான தமிழ் எழுத்துகளை அவர் குறிப்பிட்டு நடைமுறையில் செயல்படுத்தினால் நன்றாக இருக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சார்ந்துள்ள கட்சித் தலைவர்கூட, டாக்டர் என்றுதான் முன்னால் போட்டுக்கொள்கிறாரேயொழிய, மருத்துவர் என்று போட்டுக்கொள்வதில்லை.

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் மணியை விட்டுவிடுங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எதிர்பார்த்தோ என்னவோ நேற்று அவர் கட்சியின் சார்பில் திரு. ஜி.கே. மணி அவர்கள் 5 இலட்சம் ரூபாயை சுனாமி நிவாரண நிதிக்கு அளித்து, அதில் மருத்துவர் அய்யா சார்பில் என்று குறிப்பிட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சுனாமி என்பதே தமிழ் கிடையாது. அதை, 'கடல்கோள்' என்றுதான் குறிப்பிட வேண்டும் அல்லது 'கடல் நடுக்கம்' என்றுதான் குறிப்பிட வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** நன்றி, தலைவர் அவர்களே. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர்கள் எல்லாம் சொன்னார்கள். டீ என்று சொல்வதற்கு, நான் இதை ஏதோ தமாசாக சொல்வதாக நினைக்கவில்லை. எங்களுடன் பணியாற்றக்கூடியவர்கள், எங்கள் கட்சிக்காரர்கள் எல்லோரிடமும் முடிந்தவரைக்கும் தமிழிலேயே பேசுங்கள் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இப்போது எங்களுடைய பையன்கள் எல்லாம்கூட, டீ கடைக்குப் போனால் தேனீர் கொடுங்கள் என்றுதான் கேட்கிறார்கள். இன்னொன்று, குளம்பி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்கள் இப்போது ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல சைக்கிளிலுள்ள பாகங்களையெல்லாம் தமிழிலே சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்களும் தெரிந்துகொள்கிறோம். Cycle, handle bar, brake, chain, pedal (சிரிப்பு) இவற்றையெல்லாம் தமிழில் தயவுகூர்ந்து சொல்லவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு நன்றி. இதற்கு, ...



2005 பிப்ரவரி 4]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தங்கள் மூலமாக நான் ஒரு விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே கேட்க விரும்புகிறேன். அவர் வீட்டிற்குச் சென்றவுடன் மனைவியிடத்திலே, 'மனைவி, இங்கே வா, அரிசி உணவு சமைத்துவிட்டாயா? வட்டிலிலே எடுத்துப் போடு, நான் உணவருந்தப் போகிறேன்' என்று தமிழிலா பேசப் போகிறார். இல்லை. (சிரிப்பு) ஆகவே, அவர் உண்மையான தமிழை பச்சைத் தமிழை எப்போது அவர் பயன்படுத்தப் போகிறார் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைத் தமிழர்கள் பச்சைத் தமிழிலே பேச வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சி. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கேட்ட மாதிரி, மிதிவண்டியினுடைய எல்லா உதிரி பாகங்களுக்கும், பல்வேறு சொற்கள் தமிழிலேயே இருப்பதற்கு, நடைமுறை வழக்கத்திலே பின்பற்ற வேண்டும் என்று சொல்லி, இரண்டு மூன்று புத்தகங்களை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொரு பேருந்து நிலையங்களிலே, பொதுமக்கள் எல்லாம் கூடுகின்ற இடங்களிலே அதை விளம்பரப் பலகையாக எழுதிவைக்க வேண்டுமென்றுகூட நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். உங்களுக்கு வேண்டும் என்று சொன்னால், அந்தப் புத்தகத்தை இன்று மாலையே நாங்கள் கொடுக்கிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகத்தை அவர் பிறகு அனுப்பட்டும். முதலில் இப்போது சைக்கிளின் உதிரி பாகங்களின் பெயர்களைத் தமிழில் சொல்லட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் புத்தகம் போட்டு எல்லோருக்கும் கொடுத்து, நாங்களும் படித்துக்கொள்கிறோம். நீங்களும் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வெளியிட்ட புத்தகத்தை திரு. ஜி.கே. மணி அவர்களே படிக்கவில்லை என்பது இப்போது புரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் படித்துக் கொண்டிருக்கிறோம். எல்லோரும் படிக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நான் சொல்லிவிடுகிறேன். சைக்கிளிலே 200 உதிரி பாகங்கள் இருக்கின்றன. எதற்கும் தமிழ் இல்லை. அதுதான் உண்மையான நிலைமை. ஆகவேதான், அறிவியல் தமிழ் வளர வேண்டும் என்கின்ற நோக்கத்தில் இப்போது அறிவியல் தமிழை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த பெருமக்கள் அந்த அறிவியல் தமிழ்ப் புத்தகங்களைக் கொஞ்சம் ஆரம்பத்திலேயிருந்தே வாங்கி நீங்களும் படித்து அதற்குரிய தமிழ்ச் சொற்களை நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்கின்ற என்னுடைய விழைவினைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் ஜி.கே. மணி என்பதில், 'ஜி.கே.' என்பதை கொஞ்சம் மாற்றிவிடுங்கள். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதையெல்லாம் மாற்றி...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்ட ஒரு serious-ஆன பிரச்சினைக்கு இப்போது வருகிறேன். 16-9-2004 அன்று டெல்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் சந்தித்து, அவர்களிடம் விரிவான ஒரு Memorandum, ஒரு கோரிக்கை மனுவைக் கொடுத்தேன். அதில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் இணைத்துக் கொடுத்தேன். Therefore, Article 243-C of the Constitution needs to be amended to make provision for direct election to the post of Chairperson of a Block Panchayat என்று குறிப்பிட்டு a D.O. Letter from the Hon'ble Chief Minister to the Hon'ble Prime Minister dated 11-9-2001 has been sent to the Government of India on 12-9-2001 என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே, 2001-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை





ஏற்றவுடனேயே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இதுகுறித்து நான் கடிதம் அனுப்பியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு வேதனையான அம்சம்கூட என்னவென்றால், நான் குறை சொல்வதற்காக அல்ல. தொடர்ந்து இருக்கின்ற பிரச்சினை. தமிழ்நாட்டிலே உள்ள பள்ளிக்கூடங்களிலே தமிழ்ப் பாடம் இல்லாத பள்ளிக்கூடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, மெட்ரிக்குலேஷன் பள்ளிகளைப் பற்றிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இந்த அரசு அதை மாற்றியமைத்து விட்டது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே தமிழ்ப் பாடமே நடைபெறாத பள்ளிக்கூடங்கள் பல இருந்தன. மைனாரிட்டிகள் நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள், ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள். ஆனால், இப்போது எவ்வகையான பள்ளிக்கூடமாக இருந்தாலும் எல்லா வகுப்புகளிலேயும் தமிழ், அறிவியல் தமிழ்ப் பாடத்தை கட்டாயமாக்கி இருக்கிறோம். அது அமல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு இப்போது கிராமங்களிலே மதுக்கடைகளைத் திறந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இன்னும் 10 மணித் துளிகளுக்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, நிறைய குறுக்கீடுகள் இருந்தன. கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, 12-¼ மணிக்கே முடிக்க வேண்டும். இப்பொழுது நீங்கள் தமிழுக்காகப் பிரச்சினையை ஒதுக்கியதனாலே என்னுடைய தயவிலே 10 நிமிடங்கள் அதிகமாகத் தருகிறேன். 10 நிமிடங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ரொம்ப நன்றி. நீங்கள்தான் தமிழ் ஆய்ந்த தலைமகன் இல்லையா? பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்கள்தோறும் இப்போது

மதுக்கடை திறக்கப்பட்டிருக்கிறது. இந்த மதுக்கடை திறந்ததற்கு அரசுத் தரப்பிலே அரசுக்கு வருமானம் என்று ஒருபக்கமும், அதே நேரத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கை என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நம்முடைய மதுவிலக்கு காவல் படை இருக்கிறது. அவர்களை வைத்து, இன்னும் கூடுதலாக நியமனம் செய்து, கள்ளச் சாராயத்தை ஒழிக்கலாம். அரசுக்கு வருமானம் என்று சொல்லுகின்ற அதேவேளையில், அரசுக்கு வருகின்ற வருவாயைவிட தற்போது கூடுதலான வருவாய் தனியார் ஆலை அதிபர்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. நாங்கள் பூரண மதுவிலக்கு வேண்டும் என்று சொல்லுகிறோம். அதேநேரத்திலே, அரசினுடைய நடவடிக்கை என்று வருகின்ற நேரத்திலே இப்பொழுது கொள்முதல் விலையை கூடுதலாக அரசு உயர்த்திக் கொடுக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருவாயைவிட தனியார் ஆலை அதிபர்களுக்குக் கூடுதலான வருவாய், பல மடங்கு, ஆயிரக்கணக்கான கோடி, கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலையில் இப்பொழுது கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில்...

*பிற்பகல் 12-15*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அரசுக்குக் கிடைக்கின்ற வருவாயைக் காட்டிலும், ஆலை அதிபர்களுக்கு வருவாய் கூடுதல் என்று இங்கே வலுவாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதில் சிறிதளவும் உண்மை இல்லை. மற்ற மாநிலங்களில் ஆலை அதிபர்களுக்குக் கிடைக்கின்ற வருவாயைக் காட்டிலும், தமிழக அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய்தான் இங்கு அனைத்து வகையிலும் கூடுதலாக இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது விற்பனை வரியாக இருந்தாலும் சரி, ஆயத்தீர்வை வரியாக இருந்தாலும் சரி, டாஸ்மாக்கிற்குக் கிடைக்கப்பெறுகின்ற வருவாயாக இருந்தாலும் சரி, அது மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இங்கே தமிழக அரசுக்கு அதிகப்படியான வருவாய் ஈட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, கடந்த ஒரு வருட காலமாக நாடு முழுவதும் இருக்கின்ற ஸ்பிரிட்டினுடைய விலை உயர்த்தப்பட்ட நிலையிலும், சாதாரணமாக 1 லிட்டர் 10, 15 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஸ்பிரிட் இன்றைக்கு லிட்டர் 32 ரூபாய் என்ற அளவிற்கு விற்றுக் கொண்டிருந்த நிலையில் ஆலை அதிபர்கள் மிகுந்த





சிரமப்பட்டுத்தான் தங்களது தொழிலை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இங்கே எங்களுக்கு வருவாய் மிகக் குறைவு. வருவாயை உயர்த்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையினை அவர்கள் தொடர்ந்து இந்த ஆறு மாத காலமாக அரசுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள், அதுதான் உண்மை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு இருக்கிறது. உயர்த்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அந்தத் தொகை யாருக்கு போகிறது? விற்பனை வரியிலே அரசாங்கத்திற்கு கொஞ்சம்தான் வரும். கொள்முதல் விலையினாலே அதிகமான தொகை ஆலை அதிபர்களுக்குத்தான் போகும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் உயர்த்தப்பட்ட அந்த மிகச் சிறிய உயர்வு, அளவு கடந்து உயர்ந்து விட்ட ஸ்பிரிட் விலைக்கு ஓரளவுக்கு ஈடுகட்டச் செல்லும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்பிரிட் விலை உயர்வினால் இங்கு உற்பத்திச் செலவு அதிகமாக ஆகின்ற நிலைதான் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே அப்படிப்பட்ட நிலை வராமல் ஏழைகளைப் பாதுகாப்பதற்கும், குடிப்பழக்கத்தினாலே ஏராளமான குடும்பங்கள் சீரழிந்து வருவதையும் மனதிலே கொண்டு, டாஸ்மாக் கடைகளை எல்லாம் மூடி விடுவது பொருத்தமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். அப்படி நீங்கள் தனியார் ஆலைக்குக் கொடுப்பதாக வைத்துக்கொண்டால் அவர்களுக்குக் குறைவான வருவாய் என்று சொன்னாலும்கூட, இப்பொழுது கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நலிந்துகொண்டிருக்கிறது. அது தனியாருக்கு விற்கப்படும் என்ற நிலையெல்லாம் உருவாகிக்கொண்டு இருக்கிறது, பேசப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை புத்துணர்வு ....

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச் சார்ந்தவர்கள்தான் தமிழகத்தில் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுவதிலும், விற்பதிலும் மன்னர்கள் என்பது இந்த அரசு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், டாஸ்மாக் கடைகளை இந்த அரசு மூடவேண்டும் என்று கூறுகிறாரா என்பது தெரியவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட இயக்கம் என்று சொன்னால் யார் என்று வெளிப்படையாக சொல்லலாம். ஆகவே, இந்த நாட்டிலே கள்ளச் சாராய அதிபர்கள் யார்? இது நாட்டுக்கு தெரியும், அரசாங்கத்திற்குத் தெரியும், மக்களுக்கும் தெரியும். இப்பொழுது அரசாங்கம் இவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்து வந்தாலும் இந்த நிலையிலும்கூட இங்கே கள்ளச் சாராய அதிபர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் எல்லாம் உணர்ந்துகொண்டு இருக்கிறார்கள். உணராமல் இல்லை. ஆகவே, எங்களுடைய வேண்டுகோள் எல்லாம் மக்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட வேண்டும். சாதாரண ஏழை எளியவர்கள், அன்றாடங்காய்ச்சிகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வருமானத்தை அந்தக் கடைக்குக் கொடுத்துவிட்டு குடும்பத்தை வீணாக்கி விடுகிறார்கள். குழந்தைகள் படிப்பு எல்லாம் பாழாகிவிடுகிறது. இன்னும் படித்த இளைஞர்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கிறவன் அங்கே போய் நிற்கிறான். வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதையெல்லாம் கவனத்திலே எடுத்துக்கொண்டு, அந்தக் கடையை மூட வேண்டுமே தவிர, இந்த அன்பான, பணிவான கோரிக்கையை வைப்பதற்கு முதலமைச்சர் அவர்களும் கொச்சைப்படுத்தக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினராக அவரது கட்சியைச் சேர்ந்தவர் பாண்டிச்சேரியில் இருக்கிறார். முதலிலே அங்கே போய் போராட்டம் நடத்தி இவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்கிற கடைகளையெல்லாம் மூடச்செய்துவிட்டு அதற்குப் பிறகு தமிழ்நாட்டிற்கு வந்து இந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 பிப்ரவரி 4]

*பிற்பகல் 12-20*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியிலும் சொல்லிக் கொண்டிருக்கிறோம், பாண்டிச்சேரியிலும் சொல்லாமல் இல்லை. எல்லா இடங்களிலும் இது வேண்டுமென்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தியா முழுவதும் பூரண மதுவிலக்கு வேண்டுமென்கின்ற கொள்கையை ஆதரித்து மத்தியிலே இருக்கின்ற அரசாங்கத்திற்கு அவர்கள் அளித்துவரும் ஆதரவைத் திரும்பப் பெறுவதற்கு தயாராக இருக்கிறாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள், தமிழ்நாட்டு மக்கள் ஏழையெளியவர்கள் காக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், அதில் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்கள் என்று சொன்னால், நாங்கள் ஒன்றும் பேச முடியாது. நாங்கள் வேண்டுகோள் வைக்கிறோம், கேட்கிறோம். அதற்கு நீங்கள் இல்லாத காரணங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தீர்கள் என்றால் அதைப் பற்றிப் பேசிப் பயனில்லை. எனவே, கோரிக்கையை வைக்கவும் நான் விரும்பவில்லை. வேண்டுமென்றால் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சமூகப் பிரச்சினை. திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. அதைப்போல, குடிக்கிறவனாக பார்த்து திருந்தாவிட்டால் குடியை ஒழிக்க முடியாது. எனவே, அம்மா அவர்களின் அரசு சார்பில் குடிப்பதனால் எந்த அளவுக்கு உடலுக்கு கேடு விளையும் என்று ஒரு பக்கம் விழிப்புணர்வும் நடத்தப்படுகின்றது. அதேபோல, உங்கள் இயக்கத்தின் சார்பில் நீங்கள் நடத்துங்கள். மாறுபட்ட கருத்து இல்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் பேசுகிறபோது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அதிலே குறுக்கிட்டுப் பதில் சொல்வதிலே தப்பில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பணியை correct-ஆகச் செய்கிறார்கள்.

[திரு. துரைமுருகன்] [2005 பிப்ரவரி 4

correct-ஆகப் பண்ணுகிறார்கள். ஆனால், அதையே active voice-இலே சொன்னதை passive voice-ஆக எல்லா Ministers-ம் எழுந்து சொன்னால், கடைசியிலே பேசுகிறவர்களுக்கு நிலை தடுமாறிப் போய்விடும். அமைச்சர்கள் குறுக்கிடுவதிலே தப்பே இல்லை. ஆனால், correct time-ல் பண்ண வேண்டும். என்னவோ அதைச் சொல்ல வேண்டும். அந்த point-க்கு மட்டும் சொல்ல வேண்டும். ஆனால் என்ன செய்கிறார்கள் என்று கேட்டீர்கள் என்றால், 5x5=25 என்று சொல்ல வேண்டும். 5x5 என்ன என்று கேட்டால், 5x1=5, 5x2=10 என்று correct-ஆகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அதற்காக அல்ல. அருள்கூர்ந்து அமைச்சர் பெருமக்கள் அடிக்கடி குறுக்கிடுவதை தாங்கள் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் சகோதரி வளர்மதி ஜெபராஜ் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது தி.மு.க. தரப்பிலிருந்து கிட்டத்தட்ட அனைத்து உறுப்பினர்களும் எழுந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆகவே, அமைச்சர்களுக்கும் இந்த அவையில் பேசுகின்ற உரிமை இருக்கின்றது. அதை யாரும் தடுக்க முடியாது.

**திரு. துரைமுருகன்:** நேற்றைக்கு நான் குறுக்கிட்டு ஒரு கருத்தைச் சொல்ல விரும்பினேன். இப்போதுகூட நான் சொல்கிறேன். அமைச்சர்கள் குறுக்கிடுவதற்கு உரிமை உண்டு. காரணம் நான் அமைச்சராக இருந்தேன். ஆனால், ஒரே சமயத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** எல்லோரும் கபகப என்று 'ஜன கண மன அதி' பாடும் போது எழுந்திருக்கிற மாதிரி எழுந்தால், என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதேபோல, மாண்புமிகு உறுப்பினர், எதிர்க் கட்சியின் சார்பாக, ஏதாவது உங்கள் கட்சியின் சார்பாகப் பிரச்சினை வருகிறபோது, தாங்கள் மட்டும் எழுந்து பேசினால் எவ்வளவு இதமாக அவையை நடத்திச் செல்லலாம் என்பதையும் தாங்கள் நினைத்துப் பார்த்து ஒத்துழைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அமைச்சர்களுக்கு 5x5=25 என்பது நிச்சயமாகத் தெரியும். அவர்களுக்குத் தெரியாது.



2005 பிப்ரவரி 4]

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் சொல்லுகிறேன். அவர்கள் correct-ஆக 5x5=25 என்று சொல்கிறார்கள். ஆனால், நீங்கள் 5x1=5, 5x2=10 என்று எல்லா மந்திரிகளும் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதைத்தான் சொல்கிறேன். I am not blaming Chief Minister. அவர் correct-ஆகச் சொல்கிறார். (குறுக்கீடு) No, I am watching everything. அதனால், மாண்புமிகு தலைவரே, நாங்கள் கேட்கும்போது ஒரு நிமிடம் கொடுத்துவிட்டீர்கள் என்றால், அந்த ஒரு நிமிடத்தில் கருத்தைச் சொல்லிவிடுகிறோம். தப்பாக இருந்தால் எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. துரைமுருகன்:** இல்லாததால்தான் பிரச்சினை வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5x5=25 என்கிறது correct-தான். 12-25-க்கு எஸ்.ஆர்.பி. யை நான் பேச அழைக்க வேண்டும். ஆகவே, திரு. ஜி.கே. மணி, இரண்டு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் லாட்டரி சீட்டை ஒழித்திருக்கிறார்கள். இதெல்லாம் மிக முக்கியமான பிரச்சினை. இதனால், சாதாரண ஏழையெளிய குடும்பங்கள் எல்லாம் சீரழிந்து கொண்டிருந்தன. இதை எடுத்த முயற்சியை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால், அதே நேரத்திலே மீண்டும் லாட்டரி சீட்டைக் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. அதைக் கொண்டு வராமல் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான தடை உறுதியாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே நான் வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, தனியார் பேருந்து உரிமையாளர்களிடத்திலேயிருந்து இப்போது விளம்பரமாக வந்து கொண்டிருக்கிறது. அரசுக்கு வேண்டுகோள் வருகிறது. அதேநேரத்திலே கட்டணத்தை உயர்த்தி வழங்கவில்லை என்று சொன்னால், நாங்கள் இயக்குவதை நிறுத்திக்கொள்வோம் என்று அச்சுறுத்தக்கூடிய வகையிலேயும் விளம்பரம் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழக அரசு இதையெல்லாம் கவனத்திலே கொள்ள வேண்டும். கடந்த காலங்களிலே வறட்சி. இப்போது சுனாமி. இன்னும் ஒரு பக்கம் வெள்ளச் சேதம், வறட்சி. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஒரு நல்ல பொருளாதாரச் சூழ்நிலை இல்லை. இந்த நேரத்திலே இங்கே பேருந்துக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. அவர்கள் அப்படி கோரிக்கை

விடுத்தாலும்கூட, அதற்கு செவிசாய்க்காமல், எல்லாப் பேருந்துகளையும் நாட்டுடைமையாக்கி சாதனை படைக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, இன்று மிக முக்கியமான பிரச்சினை. சாலைப் பணியாளர்கள் பிரச்சினை. சாலைப் பணியாளர்கள் பிரச்சினையில் நீங்கள் தயவுசெய்து, கௌரவம் பார்க்காதீர்கள். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை ஏற்று, நீங்கள் உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்திருந்தாலும்கூட, அவர்கள் ஏறக்குறைய 50 பேர் உயிர் இழந்திருக்கிறார்கள். 3, 4 பேர் மன நிலை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் கவனத்திலே கொண்டு மீண்டும் அவர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய வகையிலே வேலைவாய்ப்பு நியமனத்தை நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதைப்போல மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவரே, இன்னும் ஐந்து மணித் துளிகளில் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம். பேச்சை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுங்கள்.

*பிற்பகல் 12-25*

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, இன்னும் 1 1/2 வரை இருக்கிறது. நிறைய குறுக்கீடுகள் 1 1/2 வரை இருக்கிறது. 12-20 தான் ஆகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதேபோல, மக்கள் நலப் பணியாளர்கள்; ஊட்டச் சத்துப் பணியாளர்கள்; இவர்களையும் நீங்கள் நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டு, அதேபோல இன்றைக்கு கல்வித் துறை பிரச்சினை என்று பார்த்தீர்கள் என்றால், வரலாறு காணாத குளறுபடி உயர் கல்வியிலே. இப்போது அரசுக்குச் சொந்தமானது அல்லாத சுயநிதி தனியார் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள்



எல்லாம் இன்று அவர்கள் விருப்பத்திற்கு இடங்களை ஏலம் கூவி விற்கின்ற நிலைக்கு போய்க் கொண்டிருக்கின்றன. எல்லோரும் நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் அங்கே இன்று வரைக்கும் குறைந்தபட்சம் சமூக நோக்கத்தோடு, ஏழையெளியவர்களுக்கு கல்விச் சேவை வழங்க வேண்டுமென்ற அறக்கட்டளை நோக்கம் இல்லாமல், தர்ம சிந்தனை இல்லாமல் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். தடையாணை பெறுகிறார்கள். தங்கள் விருப்பத்திற்கு நிறுவனங்களை நடத்துகிறார்கள் என்ற நிலைமையை மாற்றிட, அரசு இதிலே அதிகக் கவனம் செலுத்தி, ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து பாதுகாக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், இந்தக் குளறுபடி விரிந்து பரந்து ஏழையெளிய மக்களுக்கு, அதிலும் குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, சிறுபான்மையினர்களுக்கு வாய்ப்பே இல்லாமல் பணக்காரர்கள் மட்டும் படிக்கக்கூடிய நிலை உருவாகிவிடும். ஆகவே, இதற்கு அவசரச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று சொல்லி நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பார்த்தீர்கள் என்றால், எல்லாம் தனியார் மயம், தாராள மயம் என்று சொல்கிறார்கள். இப்போது அரசாங்கத்திலே வேலைவாய்ப்பு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றாலொழிய இங்கு சாதாரண உழைக்கிற மக்களுக்கு, கிராமப்புறத்திலே இருக்கிற ஏழையெளிய குழந்தைகள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் போன்ற இவர்களுக்கு வேலைவாய்ப்பே கிடைக்காது. இப்போது மராட்டிய மாநிலத்திலேகூட அங்கே தனியார் துறையில் இட ஒதுக்கீட்டை அமலாக்கியிருக்கிறார்கள். மத்திய அரசும், இப்போது பேசிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதிலே நம்முடைய தமிழக அரசு முன்மாதிரியாக இருக்கக்கூடிய வகையில் நீங்கள் தனியார் நிறுவனங்களிலே இட ஒதுக்கீட்டை உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், சத்துணவுப் பணியாளர்கள் இவர்களுக்கான சலுகைகளை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். இல்லையென்று சொன்னாலும்கூட, மத்திய அரசு சமீபத்தில் அறிவித்திருக்கிறது, அவர்களுடைய அகவிலைப் படியில் 50 சதவிகிதத்தை அடிப்படை ஊதியத்தோடு இணைத்து வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய சூழ்நிலையில் ஒரு பக்கம் தமிழ்நாட்டிலே குறைந்த அளவு மழை பெய்தாலும்கூட, இன்றைக்கு வறட்சியான மாவட்டம் தருமபுரி மாவட்டம். தொடர்ந்து வறட்சி மிகுந்த மாவட்டம். தொழில் வளம் இல்லாத மாவட்டம். வானம் பார்த்த பூமியாக இருக்கக்கூடிய மாவட்டம். என்னுடைய பெண்ணாகரம் தொகுதி, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தினுடைய ஒரு பகுதி. வறண்டு கிடக்கிறது. குடிப்பதற்கே தண்ணீர் இல்லை. இன்னும் போர்க்கால அடிப்படையில் அந்த மாவட்டத்திற்கு குடிநீர் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் கூட, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து தவறானது. குடிப்பதற்குத் தேவைப்படுகிற தண்ணீரை மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது சிறந்த முறையிலே அந்த பகுதியிலே வழங்கிக் கொண்டிருக்கிறது. வறட்சியான பகுதி என்று கூறுகிறார். அதை ஏற்றுக்கொள்ளலாம். குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டைச் சொன்னேன். நிறைய கிராமங்களிலே கிணறு இருக்கிறது. இன்றைக்கு வறண்டுபோய் இருக்கிலே ஆழ்துளைக் ஆழ்துளைக் கிணறு மீண்டும் போட்டால்கூட இருக்கிறது. இன்னமும் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. தண்ணீர் கிடைக்காது. நான் யதார்த்த நிலையைச் சொல்கிறேன். அதற்கு அமைச்சர் ஏதோ எதிர்மறையாகப் பேசுகின்ற நோக்கத்தோடு பேசக்கூடாது. ஆகவே, இருக்கிற நிலைமையை அறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கேயிருந்து தனியாக ஒரு அமைச்சரையோ அல்லது அதிகாரிகளையோ அனுப்பி சோதனையிட்டால் உண்மை நிலைமை தெரியும். ஆகவே, இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி, அதை தருமபுரி





மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், வேலூர் மாவட்டம், சென்னை வரையிலே கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த மகத்தான திட்டத்தை இந்த ஆட்சி நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னும் ஒரு மணித் துளியில் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் கேட்ட 5 மணித் **துளிகள் முடிந்து விட்டன.**

**திரு. ஜி.கே. மணி:** அதேபோல, என்னுடைய தொகுதியிலே ஒரு வாய்க்கால் பிரச்சினை. பஞ்சப்பள்ளி வாய்க்கால், அது கிருஷ்ணகிரி பக்கம் மேலிருந்து வருகிறது. அங்கே மழை பெய்தாலும்கூட உபரி நீர் வீணாகச் செல்கிறது. அந்த உபரி நீரைத் தேக்குவதற்கு இந்த பஞ்சப்பள்ளி வாய்க்காலை என்னுடைய தொகுதியில் இருக்கிற பாப்பாரப்பட்டி ஏரியில் இணைப்பதற்கு திட்டமிட்டு டெண்டர் வரக்கூடிய அளவிலே தயார் நிலையில் இருக்கிறது. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அரசை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சுனாமி பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பாராட்டக் கூடிய வகையிலே, இங்கே நிறைவேற்ற வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை வைத்து, இந்த சுனாமி பிரச்சினையிலே மத்திய அரசு, மாநில அரசு, முதலமைச்சர், எதிர்க் கட்சி வரிசைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிற மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள், எதிர்க் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும், ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் மனிதநேயத்தோடு பணியாற்றினார்கள். அத்தனை பேருக்கும் இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதைப்போலவே, செங்கல்பட்டு தொகுதியிலே புதுப்பட்டினம், உய்யாளிக்குப்பம் போன்ற 8 மீனவக் கிராமங்களிலே பாதிக்கப்பட்டவர்களில் சில பேருக்கு உரிய நிவாரண உதவிகள் முறையாக வழங்கப்படாமல் இருக்கிறது. நான் தவறாகச் சொல்லவில்லை. யார் யாரெல்லாம் விடுபட்டிருக்கிறார்களோ

[திரு. ஜி.கே. மணி] [2005 பிப்ரவரி 4

அவர்களை முறையாகத் தேர்வு செய்து நீங்கள் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே, கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, ஒட்டுமொத்தமாக இந்த ஆளுநர் உரையைப் படித்துப் பார்க்கின்ற நேரத்திலே, இது எல்லோருக்கும் எதிர்பார்த்த அளவிலே ஏமாற்றம் அளிக்க, பயன்படாத ஒரு அறிக்கை என்பதைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு அரசாக இருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் திட்டங்களைத் தீட்டி, அவற்றுக்குத் தேவையான நிதியினை ஒதுக்க சட்டமன்றத்தில் வைத்து, அதற்குரிய அனுமதியைப் பெறுகிறது. ஆண்டுதோறும் வைக்கப்படும் நிதிநிலை அறிக்கை எனப்படும் பட்ஜெட் நிதியமைச்சரால் தாக்கல் செய்யப்படுகிறது. ஆனால், அதற்கு முன்னரே ஒவ்வொரு துறையைப் பற்றியும் அரசாங்கத்தின் கொள்கை நிலை என்ன என்பதை அமைச்சரவை முடிவு செய்து ஆளுநர் வாயிலாக சட்டமன்றத்தில் அறிவிக்கிறது. அதற்காகவே ஆண்டின் முதல் கூட்டத்தை ஆளுநர் கூட்டுகிறார். அதில் அவர் உரை நிகழ்த்தியதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆளும் கட்சியின் சார்பில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின்மீதுதான் இப்போது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆளுநருடைய உரைக்கும், ஆண்டின் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து நிதியமைச்சர் ஆற்றும் உரைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு இருக்கிறது. ஆளுநரின் உரை அரசின் கொள்கையை விளக்கும் ஆவணம். ஆனால், நிதியமைச்சருடைய அறிக்கை அந்தக் கொள்கையைச் செயல்படுத்துவதற்காக அமைச்சரவையால் தீட்டப்பட்ட திட்டங்களையும், அவற்றை நிறைவேற்றுவதற்கான செலவின் அளவுகளையும் கொண்டதாக அமைந்திருக்கும்.

தற்போதைய ஆளுநர் உரை, இந்த அடிப்படையிலேயிருந்து மாறுபட்டதாகவே அமைந்திருக்கிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிப்பது போலவும், two in one என்பதைப் போலவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை சிக்கனம் கருதி இப்படி தயாரிக்கப்பட்டிருக்கலாம். ஒரு பக்கத்தைப் பார்க்கும்போது ஆளுநர் உரையாகவும், இன்னொரு பக்கத்தைப் பார்க்கும்போது நிதிநிலை அறிக்கையாகவும் தோன்றும் வகையில் இந்த உரை அமைந்திருக்கிறது.



2005 பிப்ரவரி 4] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

எனவே, இதனை அர்த்தநாரீஸ்வரர் போன்று தோற்றம் அளிக்கும் உரை என்று உயர்த்திக் கூறினாலும் கூறலாம்; தவறாகாது.

உரை முழுவதுமே அரசைப் பற்றிக் குறிப்பிடும்போது இந்த அரசு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில ஆளுநர்கள் அரசைப் பற்றிக் குறிப்பிடும்போது என்னுடைய அரசு என்று குறிப்பிடுவார்கள். ஆனால், நம்முடைய ஆளுநரைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு என்று மிகுந்த அடக்கத்தோடும், அரசமைப்புச் சட்ட விதிகளுக்கும், மரபுகளுக்கும் உட்பட்டும் குறிப்பிடுகிறார்.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 163 (1)-ன்படி ஆளுநருக்கு உரிய அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்கு உரிய ஆலோசனைகளைக் கூறுவதற்கும், உதவுவதற்கும் முதலமைச்சர் தலைமையிலான ஒரு அமைச்சரவை இருக்கவேண்டும். அந்த அமைச்சரவை வழங்கும் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டுதான் ஆளுநரே நேரடியாகவோ, அவருக்குக் கீழே உள்ள அதிகாரிகள் மூலமாகவோ ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. அரசின் எந்த ஆணையாக இருந்தாலும் ஆளுநரின் பெயரிலோ அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளின் பெயரிலோ அமைந்திருக்கும். அமைச்சர்கள் பெயரில் எந்த ஆணையும் இருக்க முடியாது. அதேபோன்று, தனிப்பட்ட அமைச்சர்கள் யாரும் ஆளுநருக்கு ஆலோசனை கூறவும் முடியாது. அமைச்சரவையே கூடி எடுக்கும் முடிவுகள்தான் தலைமைச் செயலாளர் மூலமாக ஆளுநருக்குத் தெரிவிக்கப்படுகிறது. அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆளுநரால் ஆணைகள் வெளியிடப்படுகின்றன. சில விஷயங்களில் ஆளுநருக்கு என்று பிரத்தியேக அதிகாரங்களும் இருக்கின்றன. அவற்றில் அமைச்சரவையின் ஆலோசனை இல்லாமலே முடிவு எடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஓர் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ள ஆளுநரைக் கொண்டுதான் அரசாங்கத்தின் கொள்கைகள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால், தற்போதைய ஆளுநர் உரையில் கொள்கை அறிவிப்புகளைக் காட்டிலும், திட்ட அறிவிப்புகளும், அதற்குரிய செலவுகளுமே அதிகமாக இடம் பெற்றிருக்கின்றன. தொழில்கள், வேளாண்மை, கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற முக்கியத் துறைகளைப் பற்றிய கொள்கை அறிவிப்புகள்கூட இடம் பெறாமல் இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது.

மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறப்பதைப் பற்றியோ, புதிய தொழில்களைத் தொடங்குவது பற்றியோ, அன்னிய முதலீடுகளை ஈர்ப்பது பற்றியோ எதுவும் கூறப்படவில்லை. முன்னறிவிப்பு எதுவும் இல்லாமலே பல தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. தொழிற்சாலைகளைக் கதவடைப்புச் செய்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்காவிட்டாலும், சட்டவிரோதமாக சில நிர்வாகங்கள் மூடிவிடுகின்றன. ஆனால், அவற்றுக்கு எதிராக ஏன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தபிறகு, 2001-க்குப் பிறகு, தமிழ்நாட்டில் எந்தவொரு தொழிற்சாலையும் மூடப்படவில்லை. மாறாக, அம்மா அவர்களுடைய அரசு வந்த பிறகுதான் புதிய தொழில் கொள்கை மே 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு, தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்குவதற்கும், அன்னிய முதலீட்டாளர்கள் தமிழகத்திற்கு வருவதற்கும் ஒரு பாலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Simpson Group நிறுவனங்களில் ஒன்றான Addison Paints & Chemicals, lay-off பண்ணுவதற்கு அனுமதி கேட்டது. அரசு அதை ஏற்க மறுத்துவிட்டது. வேறு வழியில் lay-off விடப்பட்டது. போரூர் S & S நிறுவனம் முன்னறிவிப்போ, அனுமதியோயின்றி மூடப்பட்டது. பின்னர், மூடுவதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டது. அதையும் அரசு நிராகரித்துவிட்டது. ஆயினும், நிறுவனம் மூடியே கிடக்கிறது, அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. (குறுக்கீடு) பதில் சொல்கிறீர்களா? சரி முடித்துவிடுகிறேன்.

அதேபோன்று, தொழிலாளர்களுக்காக பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆயினும், அவற்றின் அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுப்பதில்லை. தொழிலாளர்களை, வேண்டுமென்றால் வேலைக்கு வைத்துக்கொள்வதும், வேண்டாமென்றால்





நீக்கிவிடுவதும் வழக்கமாகிவிட்டது. எவ்வளவு நாட்கள் பணிபுரிந்தாலும், யாரையும் நிரந்தரம் செய்வதில்லை. Apprentice என்றும், Contract labour என்றும், Casual labour என்றும் வைத்துக்கொண்டுதான் வேலை வாங்குகிறார்கள். ஜவுளி ஆலைகளில் இது சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது. மற்ற பெரிய இன்ஜினியரிங் தொழிற்சாலைகளில் இதுதான் நடந்துவருகிறது. இந்தத் தொழிலாளர்களின் சட்டப்படியான பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்பதே விளங்கவில்லை. என்றாலும், சட்டத்தின் ஆட்சியைப் பற்றியும், மாட்சியைப் பற்றியும் ஆளுநர் உரையில் பெருமையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று யாரும் இல்லை என்றும், சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்றும் பெருமையாகப் பேசுகிறோம். அரசியலமைப்புச் சட்டத்தின் சமத்துவக் கோட்பாடும் அதைத்தான் குறிப்பிடுகிறது. முதல் தகவல் அறிக்கை தாக்கல் ஆகிவிட்டாலே, எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும், கைது செய்து காவலில் வைக்கிறோம். பாதிக்கப்பட்ட குடும்பத்ினருக்கு நிவாரணமாக நிதியுதவி வழங்குகின்றோம்." (குறுக்கீடு) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆதாரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிட்டு அனுமதி பெற்று, பிறகுதான் பேசவேண்டும் என்பதுதான் விதிமுறை. விதியை அவர் கடைப்பிடிக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. **என்று சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு அதை ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் வாயிலாக முன்பே கொண்டு வந்திருக்கிறேன். அதுவேதான் என் கையிலே இருக்கிறது. ஏற்கெனவே F.I.R தாக்கலாகி இருக்கிறது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. இன்றுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைத்தான் நான் சொல்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

(குறுக்கீடு) Copy வேண்டுமா? (குறுக்கீடு) நூற்றுக்கணக்கான என்ற வார்த்தையை நான் பயன்படுத்தவில்லை (குறுக்கீடு) இதை நான் ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன்.

*(உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஒரு குறிப்பினைக் கொடுத்தார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒரு குறிப்பிட்ட நிகழ்வைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள். அது சம்பந்தமான ஆதாரங்களைக் கொடுங்கள், உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இப்போது கொடுத்திருக்கிறேன். சென்னைக்கு அருகிலே இத்தகைய கொடுமைகள் அரங்கேறி வருகின்றன. இந்த நிலையில் சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்றும், சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் யாரும் இல்லை என்றும் உரக்கக் கூறினாலும், அது உண்மை ஆகிவிட முடியாது. D.G.P. அலுவலக வளாகம் கட்ட 30 கோடி ரூபாய் ஒதுக்குவதாலோ, புதிய காவல் பயிற்சி நிலையம் அமைக்க 48 கோடி ரூபாய் ஒதுக்குவதாலோ சட்டத்தின் ஆட்சி நடப்பதாக ஆகிவிடாது. அமைச்சர்களாக இருந்தவர்கள் மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பெண்களுக்கு எதிரான பாலியல் பலாத்காரங்களும், கொலைகளும் பெருகி வருகின்றன. வேலைக்குச் செல்லும் பெண்கள் கடத்தப்பட்டு, கற்பைப் பறிகொடுத்து படுகொலை செய்யப்படும் நிலைக்கு ஆளாகிறார்கள். அம்பத்தூரில் இரண்டு பெண்களும், நந்தனத்தில் ஒருவரும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி குறிப்பிட்ட நிகழ்வுகளை அடுக்கிக்கொண்டே போகலாம். ஒரு மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று கூறும்போது. ஒரு மாநிலத்தின் சட்டத்தின் ஆட்சிதான் நடைபெறுகிறது என்று கூறும்போது, அந்த மாநிலத்தில் கொலையே நடக்கவில்லை, திருட்டே நடக்கவில்லை என்று யாரும் சொல்லவில்லை. கற்பழிப்பே நடக்கவில்லை, அப்படிப்பட்ட ஒரு நாடு உலகத்திலேயே இருக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு மாநிலம் எந்த நாட்டிலேயும் இருக்க முடியாது. சட்டம்-ஒழுங்கு நல்லமுறையில் பராமரிக்கப்படுகிறது, சட்டத்தின் ஆட்சி ஒரு மாநிலத்தில் நிலைநாட்டப்படுகிறது என்று சொல்லும்போது, அதற்குப் பயன்படுத்தப்படும் அளவுகோல் ஒன்று இருக்கிறது. என்ன அந்த அளவுகோல்? குற்றங்களின் விகிதாச்சாரம். இப்படித்தான்





நிர்ணயிக்கிறோம். எந்த நாடானாலும், எந்த மாநிலமானாலும், எந்த ஊரானாலும், இங்கே கொலையே நடைபெறவில்லை, திருட்டே நடைபெறவில்லை, குற்றமே நடைபெறவில்லை என்று எந்தக் காலத்திலும், யாரும் சொல்லமுடியாது. காரணம், குற்றம் புரிவது மனித இயல்பு. ஆகவே, குற்றங்கள் புரிகின்ற மனிதர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தத்தான் காவல் துறை இருக்கிறது. குற்றங்கள் புரிந்துவிட்டால் நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் காவல் துறை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இந்தியாவிலேயே சட்டம்-ஒழுங்கு மிக நன்றாகப் பராமரிக்கப்படுவது தமிழ்நாட்டில்தான் என்று அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-40*

இதற்கு நாம் பயன்படுத்துகின்ற ஒரே அளவுகோல் குற்றங்களின் விகிதாச்சாரம் தான். ஒரு மாநிலத்தை எடுத்துக்கொண்டால், ஒட்டுமொத்தமாக அந்த மாநிலத்தில் எத்தனை கொலைகள், எத்தனை திருட்டுகள், எத்தனை Dacoit-கள், எத்தனை கற்பழிப்புகள் என்று கணக்கிடலாம். நகரங்களை எடுத்துக்கொண்டால் டெல்லியில் எத்தனைக் குற்றங்கள், எத்தனைக் கொலைகள் நிகழ்ந்தன, மும்பையில் எத்தனைக் கொலைகள் நிகழ்ந்தன, கொல்கத்தாவில் எத்தனைக் கொலைகள் நிகழ்ந்தன, சென்னையில் எத்தனைக் கொலைகள் நிகழ்ந்தன என்பதைப் பார்த்து, அந்த விகிதாச்சாரத்தை வைத்துத்தான் நாம் சொல்லுகிறோமே தவிர, குற்றமே நடைபெறவில்லை என்று யாரும் சொல்லவில்லை ஆகவே, இங்கே இந்தக் கொலை நடந்தது, அங்கே அந்தத் திருட்டு நடந்தது என்று சொன்னால் குறிப்பிட்ட நிகழ்வுகள் நிகழத்தான் செய்யும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் ஒரு செய்தி வந்திருக்கிறது. Sexual harassment on the rise. There has been a 2.7 per cent increase in crimes against women in Tamil Nadu in 2004 என்று வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதிபதி மோகன் அவர்கள்கூட இதைப பற்றிக் குறிப்பாக நேற்றையதினம் பேசியிருக்கிறார். நான் அதில் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அதேபோல, உயர் நீதிமன்றத்திலே இதேபோல் ஒரு வழக்கு வந்தது. காணாமல்போன ஒரு பெண்ணைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்ற

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 பிப்ரவரி 4

ஆட்கொணர்வு மனு — Habeas Corpus Writ — "9 months have passed. She was 5 months pregnant when she went missing and by now she would have delivered the baby and you are not able to trace her. It is very unfortunate to see this kind of investigation despite our expressing concern to the DGP himself" என்று உயர் நீதிமன்றத்தினுடைய பென்ச் சொல்லியிருக்கிறது. அதோடு நிறுத்தவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றமானாலும், எந்த நீதிமன்றமானாலும், நீதிபதிகள் மனிதர்கள்தான். அவர்களுக்கும் விருப்பு வெறுப்புகள் உள்ளன. சில சமயங்களில் பேசக்கூடாதவற்றையெல்லாம் நீதிமன்றங்களில் பேசுகிறார்கள். இதையே நாங்கள் பேசினால் எங்கள்மீது Contempt of Court வழக்குப் போடுவார்கள். ஆனால், நீதிபதிகள் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அல்லது அதற்குக் கண்டனம் தெரிவித்து நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால், எங்கள்மீது Contempt of Court வழக்கு வரும். ஆனால், நீதிபதிகள் என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆகவே, குறிப்பிட்ட இந்த நீதிபதி இதைச் சொன்னார், அதைச் சொன்னார் என்பதையெல்லாம் இந்த அவையில் தெரிவித்து, அதனால் அவர்கள் சொல்வதெல்லாம் உண்மை, நிலைமை சீரழிந்துவிட்டது என்று கூறுவது அபத்தமான கூற்று.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் எது வேண்டுமானாலும் கூறலாம் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். நீதிபதிகள் தவறாகக் கூறினால் அல்லது நம்மைக் காயப்படுத்தும்வகையில் ஏதாவது அவர்களுடைய சொற்றொடர்கள் இருக்குமேயானால், அவற்றை அந்த Order-லிருந்து, உத்தரவிலிருந்து, அந்தத் தீர்ப்பிலிருந்து நீக்கிவிடுமாறு நாம் மேல்முறையீடு செய்யலாம், அதற்கு இடமிருக்கிறது. அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். We have such worthless police, such worthless law officers என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் குறிப்பிடுகிறேனே தவிர, நானாக எதையும் சொல்லவில்லை. காவல் துறை தலைமை அதிகாரியைக் கொண்டு விசாரணை நடத்தி, அறிக்கை அளிக்குமாறு உத்தரவிடும் நிலை, உயர் நீதிமன்றத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. பெண்களுக்கு எதிரான பாலியல் பலாத்கார குற்றச் செயல்களிலும் காவல் துறை அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாகவும், பல



2005 பிப்ரவரி 4] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. வீரப்பன் தேடுதல் வேட்டையின்போதுகூட, இத்தகைய அத்துமீறல்கள் நடந்ததாக புகார்கள் எழுந்து, அவற்றின் மீது விசாரணை நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய குற்றங்களில் பல்வேறு sections of society-யைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுகிறார்கள். ஏதோ, காவல் துறையினர் மட்டும் குற்றம் புரிவதாக இங்கே குறிப்பிடுவது சரியல்ல. தொடர்ந்து எதிர்க்கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள், காவல் துறையினரை மனச்சோர்வு ஏற்படும்வகையில், அவர்களை demoralize செய்யும்வகையில் பேசுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே காவல் துறையினர்தான் உங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்ல விரும்பவில்லை. எனக்கு பாதிப்பு ஏற்பட்டது. நான் அதை இந்த இடத்திலே சொல்ல விரும்பவில்லை. நான் வேண்டுமானால் தனியாக உங்களிடத்தில் சொல்கிறேன். ஏனென்றால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு பாதுகாப்பு கேட்டார், கொடுக்கப்பட்டது. இப்போது அவருக்குத் தேவையில்லை, அதனால் வழங்கப்படவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்கிறேன். வேறு வகையிலே பாதிக்கப்பட்ட இடத்திலேகூட, அவர்கள் அசையவே இல்லை. அதுதான் உண்மை, அதை நான் இந்த இடத்தில் சொல்ல விரும்பவில்லை. தேவைப்பட்டால், தேவைப்படுகின்ற நேரத்தில் நிச்சயமாக நான் சொல்கிறேன். அதுமட்டுமல்ல, நமது காவல் துறைக்கு அதெல்லாம் பெருமை சேர்க்காது என்பதால்தான் அதை எல்லாம் நான் சொன்னேன். மற்றபடி நான் காவல் துறை செய்த நல்ல காரியங்களைப் பாராட்டாமல் ஒருபோதும் இருந்தது கிடையாது. வீரப்பனையும் அவனது கும்பலையும் ஒழிப்பதில் திறமையாகச் செயல்பட்ட அதிகாரிகளை ஆளுநரே பாராட்டியிருப்பதில் நியாயம் இருக்கிறது. பாராட்டியதை ஒப்புக்கொள்ளலாம் என நினைக்கிறேன். என்றாலும், சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்பதும், சட்டத்தின் ஆட்சியே இங்கு நடைபெறுகிறது என்பதும் இப்போது அதிகமாகவே பேசப்பட்டு வருகிறது. ஆனால், சட்டத்தை கற்பிப்பதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள சட்டப் பல்கலைக்கழகத்திலேகூட சட்டம்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 பிப்ரவரி 4

மதிக்கப்படுவதில்லை என்பது மனவேதனையைத் தருவதாகும். அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவி பல மாதங்களாக நிரப்பப்படாமலே இருந்தது. பின்னர் நிரப்பப்பட்டது. புதிதாகப் பொறுப்புக்கு வந்தவருக்கு என்ன சிறப்புத் தகுதி இருக்கிறது என்று தெரிவிக்கப்படவில்லை. அவருக்கு நெருக்கமான ஒருவரே மூன்று ஆண்டுகள் முடிந்த பிறகும், தேர்வுத் துறை அதிகாரியாக அங்கு நீடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார். துணை வேந்தரின் நெருங்கிய உறவினர் ஒருவரே பொது மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிப்பது மேதகு ஆளுநர் அவர்கள். இதில் மாநில அரசை மாண்புமிகு உறுப்பினர் எப்படி குற்றம் சொல்லுகிறார் என்று புரியவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் தகுதியானவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு Search Committee போடப்பட்டு, அதிலே வந்த panel-ஐ வைத்து, அரசு ஆளுநருக்கு அனுப்புகிறது. ஆளுநர் தேர்வு செய்கின்றார். இதுதான் உண்மை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்ல வருவது, பல்வேறு நியமனங்கள், நான் முழுவதும் சொல்லவில்லை, நிறைய இருக்கின்றன, வரிசையாக வைத்திருக்கிறேன். அதையெல்லாம் சொல்லவில்லை. பல்வேறு பதவிகளிலும் சட்டப் பல்கலைக்கழகத்தின் முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களின் நெருங்கிய உறவினர்களும் குடும்பத்தினரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சட்டத் துறை அமைச்சர் இதில் தலையிடுகிற நிலையிலும் இல்லை. அதையும் சொல்லிவிட்டார். இதில் என்ன பிரச்சினை என்றால், அரசு ஒரு ஆணை பிறப்பித்து இருக்கிறது. புதிய நியமனங்கள் எதுவும் செய்யக் கூடாது என்றும், அரசில் உபரியாக இருக்கின்ற ஊழியர்களைக் கொண்டும், அயல் பணியின்மூலம் நியமிக்கப்படுபவர்களைக் கொண்டும் பணிகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கமே ஆணை பிறப்பித்திருக்கிறது. இப்போது புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள



2005 பிப்ரவரி 4] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில், பல முக்கிய பணிகளுக்கான தேர்வு நடத்தப்பட்டது. ஆனால், இந்த அரசாணை வந்துவிட்ட காரணத்தாலே, நியமனங்களும் நின்றுவிட்டன. தற்போது, தற்காலிகப் பணியாளர்களைக் கொண்டே outsourcing முறையில் குறைந்த ஊதியம் கொடுத்து எல்லாப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஆனால், சட்டப் பல்கலைக்கழகத்தில் மட்டும், எவ்வித வரைமுறையும் இல்லாமல் நினைத்தபடியெல்லாம் நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதை எதிர்த்து பலரும் நீதிமன்றங்களை நாடி வருகிறார்கள். தமிழ்நாடு Bar Council தலைவராக இருப்பவரே பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக் குழுவில் தனது அதிருப்தியை வெளியிட்டிருக்கிறார். இந்த நியமனங்கள் குறித்து (குறுக்கீடு) ஒரே ஒரு வார்த்தை சொல்கிறேன். இந்த நியமனங்கள் குறித்து ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரிகள் தொடங்கப்படும்போது அதற்கான அதற்கான அலுவலர்கள், ஊழியர்கள் பேராசிரியர்கள் மற்றும் அதற்கான அலுவலர்கள், ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும். எனவே, இந்த நியமனங்கள் முறைப்படியாக பத்திரிகைகளில் அறிவிக்கை செய்து, interview conduct செய்யப்பட்டு அதுவும் Syndicate-ஆல் அந்தக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அதன்பின்புதான் தேர்வு செய்யப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதிலே ஒரு பாரபட்சமற்ற விசாரணையைத்தான் நான் கேட்கிறேன். அதில் என்ன தவறு? ஏனென்றால் பலரும் தகுதியற்றவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பது என்னுடைய எண்ணம். அதை அந்த ஆட்சிமன்றக் குழுவிலேயே, Bar Council தலைவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கும்போது ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதிலே என்ன கஷ்டம்?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு அவர்கள் எந்தத் தேர்வில் அப்படிப்பட்ட ஒரு அநீதி நடத்தப்பட்டிருக்கிறது என்ற அந்தக் குறிப்பைச் சொன்னால், அதுகுறித்து விசாரிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் வரிசையாகச் சொன்னேன். இன்னும் சொல்லி இருக்கலாம். வேண்டாமென்றுதான் நான் அதோடு விட்டுவிட்டேன். நிறைய சொல்லலாம். ஒவ்வொன்றும் அப்படித்தான்.

வேண்டியவர்கள், ஏற்கெனவே பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், ஏற்கெனவே வேறு இடத்திலே பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், ஒரு ஆண்டில் நியமிக்கப்பட்டு, மூன்று முறை ஒரே ஆண்டில் பதவி உயர்வு பெற்று ஒரு பொறுப்பான இடத்திற்கு வருதல் போன்ற பலவிதமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதனால், அதில் ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற நிலைமை இங்கே அரசோச்ச அனுமதிக்கக் கூடாது. மறைந்த முதலமைச்சர் பாரத ரத்னா எம்ஜி.ஆர். அவர்களே 'வலிமை உள்ளவன் வச்சது எல்லாம் சட்டமாகாது தம்பி, பிறர் வாழ உழைப்பவர் சொல்லுவது எல்லாம் சட்டமாகணும் தம்பி' என்ற கருத்தைத்தான் வலியுறுத்திவிட்டுச் சென்றார். அவருடைய வழியில் நடைபெறுவதாகக் கூறப்படும் இந்த ஆட்சியில், சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்பது உண்மையிலேயே அமலாக வேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சுனாமி எனப்படும் பேரலையால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, பல்வேறு அமைப்புகளும் நிதி உதவி அளித்து வருகின்றன. உள்ளூரில் தொடங்கி உலகு தழுவிய முறையில் உதவிகள் கிடைத்து வருகின்றன. இந்தியாவில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பொறுத்தவரையில், அவற்றை நாமே சரி செய்துகொள்ள முடியும் என்றும், வெளிநாட்டு உதவிகள் தேவைப்படாது என்றும், பிரதமரே அறிவித்துவிட்டார். வேண்டுமானால், தேவைப்படும் நாடுகளுக்கு நிதி உதவியை வழங்கலாம் என்றும் தெரிவித்துவிட்டார்.

இலங்கை, இந்தோனேஷியா, மாலத் தீவுகள் போன்ற நாடுகளுக்கு இந்தியாவே பலவகையிலும் உதவி வருகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசு மட்டுமல்லாமல், நாட்டின் பிற மாநிலங்களும் நேசக்கரம் நீட்டி வருகின்றன. இன்று காலையிலே அந்த வரிசையிலே இருந்துகூட குறிப்பிட்டார்கள். பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்களிலிருந்து நேரடியாகவே வந்து பல அமைப்புகளும் உதவி வருகின்றன. புகழ்பெற்ற திரைப்பட நடிகர் விவேக் ஓபராய் போன்றவர்களும் கோவையில் இதற்கென ஒரு அமைப்பு 'CORAM' என்ற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். 'CORAM' என்ற அமைப்பு அரும்பணியாற்றி வருகின்றது. தமிழகத்தில் உள்ள



பலதரப்பட்ட மக்களும் நிவாரண நிதிக்காக வாரி, வாரி வழங்கி வருகின்றார்கள். இந்த நிதி முழுவதையும், சிறிய அளவில் வைத்துப் பராமரிக்கப்பட்டுவரும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் சேர்ப்பதற்குப் பதிலாக, முதலமைச்சர் பெயரால் இதற்கென்று தனியாக ஒரு நிதியம் உருவாக்கப்பட வேண்டும். 'முதலமைச்சர் சுனாமி நிவாரண நிதி' என்ற பெயரில் அந்த நிதி இருக்கலாம். தற்போது விபத்தில் மரணம் அடையும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், மருத்துவ உதவி தேவைப்படுபவர்களுக்கும், மாணவர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் நிதியுதவி அளிப்பதற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதி பயன்பட்டு வருகிறது. எனவே, அந்த நிதியுடன் சுனாமி நிவாரண நிதியைச் சேர்ப்பதற்கு...

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிக்காக வழங்கப்பட்ட நன்கொடைகளை வேறு எதற்காகவும் இந்த அரசு பயன்படுத்தவில்லை, பயன்படுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நன்கொடைகளை நான் வேறு எங்கேயும் வைக்கச் சொல்லவில்லை. உங்கள் பெயரிலேயே முதலமைச்சர் சுனாமி நிவாரண நிதி என்று வைத்தால் அது பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால், நாங்கள் சொன்ன வேறு யோசனைகளையும் நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நான் ஏற்கெனவே, நீங்கள் இருக்கும்போது, ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்றவர்களைக் கொண்ட குழுக்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டோம். நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக இதற்கென்று ஒரு நிதி உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அரசு கருதுகிறது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு யார் யார் எவ்வளவு வழங்குகிறார்கள் என்று இந்த அரசு ஒழுங்காகக் கணக்கு வைத்திருக்கிறது.

ஆகவே, இதுவரை சுனாமி நிவாரணப் பணிகளுக்கென்று ஏறக்குறைய 111 கோடி ரூபாய் வந்திருக்கிறது. இந்த 111 கோடி ரூபாயை சுனாமி நிவாரணப் பணிகளுக்காகத்தான் இந்த அரசு பயன்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தற்போது ஐக்கிய நாடுகள் சார்பில், சுனாமி நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் அவர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார். சுனாமி தாக்குதலால் விளை நிலங்கள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உப்பளங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அத்தகைய தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும். விவசாயிகளைப் பொறுத்தவரை, அவர்களுடைய பயிர்களெல்லாம் நாசமாகிவிட்டன. உள்ளே வந்த தண்ணீர்—தண்ணீர் மட்டும் வரவில்லை. அங்கே மணலும் வந்து சேர்ந்திருக்கிறது. மணலை முதலிலே வாரியாக வேண்டும். உள்ளே கடல் தண்ணீர் வந்த காரணத்தாலே, அங்கே உவர்ப்பு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி நேற்றே இந்த அவையில் கோரிக்கை எழுப்பப்பட்டது. நேற்றே இதற்கு விளக்கமாகப் பதில் அளித்தேன். அப்போது மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள், இந்த அவையில் இல்லையோ, என்னவோ, எனக்கு நினைவில்லை. ஏற்கெனவே, பிரதமர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில், memorandum-த்தில், இந்த சுனாமிப் பேரலைகளால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவது குறித்தும், உப்பு நீர், கடல் நீர் புகுந்ததால் பாழாக்கப்பட்ட விவசாய நிலங்களைச் சாகுபடிக்கு உகந்த விளை நிலங்களாக மீண்டும் மாற்றுவதற்கும் தேவையான நிதி, அதைப்போலவே, உப்பள்ங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், அவற்றிற்குத் தேவையான நஷ்ட ஈடு வழங்குவதற்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அமைத்துக் கொடுப்பதற்கும், எல்லாவற்றிற்கும் ஏற்கெனவே தெளிவாக Prime Minister அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட memorandum-த்தில் குறிப்பிட்டு, ஒவ்வொரு தலைப்பின்கீழ் எவ்வளவு நிதி வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். இதற்கான ஆணைகள் பின்னர் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆகவே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதால், மத்திய அரசை





வற்புறுத்தி, சற்று விரைவாக அந்த நிதியை வழங்கி, ஆணையிடச் செய்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாங்கள் உடனடியாகக் கேட்கக்கூடிய இடம், இங்கேதான். சட்டமன்றம் இங்கேதான் இருக்கிறது. பாதிப்பு இங்கேதான்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உடனடியாகக் கேட்கக்கூடிய இடம், அங்கேதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நேரடியான தாக்குதலுக்கும், பாதிப்புக்கும் உள்ளான மீனவ மக்களுக்கு எல்லாவகையிலும் உதவ வேண்டியது, உடனடிக் கடமையாக அமைந்திருக்கிறது. சுனாமியால் தமிழகம் பாதிக்கப்பட்டவுடனே, பாதிக்கப்பட்ட மக்களையும், பகுதிகளையும் பார்ப்பதற்காக சோனியா காந்தி அவர்கள் தமிழகம் வந்தார்கள். அவர்கள் பார்வையிட்டுச் சென்றார்கள். அதனுடைய தொடர்ச்சியாக, பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் இங்கே வந்தார்கள். உள் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். நிதியமைச்சர் அவர்கள் வந்தார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களும், பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மேற்பார்வையிட்டார்கள். அதற்குப் பிறகு, மத்தியக் குழு இங்கே வந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்து, அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. முதலமைச்சரோடு நேரடியாகவும் பாரதப் பிரதமர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில், பாரதப் பிரதமர் அவர்கள் பேசிய அடிப்படையில் நிவாரணத் தொகுப்பு நிதி பற்றி அறிவித்திருக்கிறார்கள். அந்த நிதிக்கு ராஜீவ் காந்தி தொகுப்பு மறு வாழ்வு நிதி என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பின்படி, முழுவதுமாக மானியமாக கொடுக்கப்படும் நிதி அப்படியே மாநில சர்க்கார் மூலமாக வழங்கப்படுகிறது. கட்டுமரம் இழந்தவர்களுக்கு 32 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அதுபோக, கண்ணாடி இழைப் படகுகளை இழந்தவர்களுக்கு, அந்தப் படகுகளுக்காக ஒன்றரை இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. மானியமாகவும், கடனாகவும் கொடுக்கப்படுகிறது. அதிலே 3.5 சதவிகிதம் மானியம். மற்ற தொகையை அவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும். அதுவும் முதல் ஒன்றரை வருடத்திற்குச் செலுத்த வேண்டியதில்லை. பிறகு, அடுத்த ஏழு ஆண்டுகளில் செலுத்தியாக வேண்டும். அதேபோல,

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 பிப்ரவரி 4

இயந்திரப் படகுகளை இழந்தவர்களுக்கு அதிகபட்சமாக 20 இலட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்படுகிறது. மானியமாக, அதிகப்பட்சமாக 5 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்தக் கடனும் அதேபோல முதல் ஒன்றரை வருடத்திற்கு Moratorium செலுத்த வேண்டியதில்லை. அடுத்த ஏழு வருடத்திற்குள்ளாகக் கட்ட வேண்டும். 7 சதவிகித வட்டி என்பதில் 2 சதவிகித மானியம் மத்திய சர்க்கார் வழங்கிவிடுகிறது.

*பிற்பகல் 12-55*

அதேபோல, இயந்திரப் படகுகள் பழுது ஏற்பட்டிருப்பவர்களுக்கு, பழுது பார்ப்பதற்காக நிதி என்ன என்று கேட்டால், அதற்காக 5 இலட்சம் ரூபாய் வரை வழங்கலாம். அவற்றில் 60 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. 3 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இதை ஏற்கெனவே அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆக, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், முழுவதுமாக மானியமாக வழங்கப்படும் நிதி, அப்படியே தமிழக அரசால் வழங்கப்படுகிறது. கடனாகவும், மானியமாகவும், இரண்டும் இருக்கும் நேரத்தில் வழக்கமாக அது மத்திய வங்கிகளாலேதான் வழங்கப்படும். எனவே, வங்கிகள் மூலமாக வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கான பட்டியல் தயாரிப்பதை, தமிழக அரசுதான் தயாரிக்கிறது. மத்திய சர்க்கார் இங்கே வந்து தயாரிக்கவில்லை. இங்கேயிருந்துதான் Fisheries Department, மீன்வள இலாகாதான் அந்தப் பட்டியலைத் தயாரித்து அந்த நிதியை இங்கே வழங்க இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் இங்கே வந்திருந்தபோது, அவர்கள் சொன்னார்கள். அதைச் சொல்கின்ற நேரத்திலே, சொல்வதற்கு முன்பே நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஒரு Master List முழுமையான, நிறைவான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்களைப் பக்கத்திலே வைத்துக்கொண்டுதான் மத்திய நிதியமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். அந்தத் திட்டத்தை வெளியிட்டது, வேறொரு நிகழ்ச்சியிலே மைய அமைச்சர் மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் வெளியிட்டார். VAT மீட்டிங்கில்தான் அவர் என்னுடன் கலந்து கொண்டார். அங்கு இந்தத் திட்டத்தை அவர் வெளியிடவில்லை.



2005 பிப்ரவரி 4]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நிதியமைச்சர் அவர்கள் என்னிடத்திலே பேசும்போது, நீங்கள் உடன் இருக்கும்போதுதான் இதை அறிவித்தேன் என்று தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு முடிந்து போன விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர் இப்போது ஏன் பேசிக் கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. ஏற்கெனவே, மத்திய நிதியமைச்சர் ஒரு அறிவிப்பை வெளியிட்டு, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பி, அந்த முழு விவரத்தையும் இந்த அவையில் தெரிவித்துவிட்டேன். அதற்கு பாரதப் பிரதமர் அவர்களும் பதில் அனுப்பி நடவடிக்கை எடுத்து நிதியமைச்சர் கொடுத்த அறிவிப்பை மாற்றிவிட்டார். ஆகவே, பிரச்சினை முடிந்து விட்டது. இப்போது ஏன் இதைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார் என்று புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அறிந்தவரையில், நிதியமைச்சருடைய அறிவிப்பிற்கும், பாரதப் பிரதமர் உங்களுக்கு எழுதியிருக்கிற கடிதத்திற்கும் எந்தவித வேறுபாடும் கிடையாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி விரிவான ஓர் அறிக்கையை நேற்றுதான் இந்த அவையில் நான் வாசித்தேன். அப்போது மாண்புமிகு எஸ்.ஆர்.பி. இங்கே இல்லையா அல்லது கவனம் செலுத்தவில்லையா என்று தெரியவில்லை. மத்திய நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில், மானியத் தொகையும் வங்கிகள் மூலமாகத்தான் பெறப்பட வேண்டும் என்று அறிவித்தார். கடனும் வங்கிகள் மூலமாகத்தான் பெறப்பட வேண்டும் என்று அறிவித்தார். ஆகவே, மாநில அரசுக்கு இதில் எந்தப் பங்கும் இல்லை என்பது போன்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டார். ஆனால், இப்போது நான் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியபின், மத்திய அரசு இப்போது வெளியிட்டிருக்கின்ற ஆணையில், அந்த மானியத் தொகை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக மத்திய நிதியமைச்சரின் அறிவிப்பிற்கும், இப்போது மத்திய அரசு அனுப்பியிருக்கிற ஆணைக்கும் வேறுபாடு உள்ளது.

[2005 பிப்ரவரி 4

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மத்திய நிதியமைச்சருடைய அறிவிப்பிற்கும் பிரதமர் உங்களுக்கு எழுதியிருக்கிற கடிதத்திற்கும் எந்த வேறுபாடும் கிடையாது. அதிலே ஏதாவது வேறுபாடு இருக்குமேயானால், நீங்கள் அந்தக் கடிதத்தை வெளியிடுங்கள். பிரதமர் உங்களுக்கு 31 ஆம் தேதி எழுதியுள்ள கடிதத்தை நீங்கள் வெளியிடுங்கள்–

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் அவர்கள், எனக்குக் கடிதம் அனுப்பவில்லை. ஆனால், மத்திய அரசின் ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த ஆணைதான் இங்கே அரசுக்கு வந்திருக்கிறது. அதில் தெளிவாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது வங்கிகள் மூலமாக அந்த மானியமும், அந்தக் கடனும் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதம அமைச்சர் அவர்களுக்கு எழுதிய பிறகு, அதற்குள்ள அந்த மானியத் தொகை நேரடியாக மாநில அரசே வழங்கலாம் என்ற அடிப்படையிலே நேற்று முன்தினம் கட்டுமரங்களுக்குள்ள 32 ஆயிரம் ரூபாய், 5 பேருக்கு....

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-1-2005 அன்று மத்திய அரசின் உள் துறை அமைச்சகம் வெளியிட்ட அரசாணை இப்போது என் கையில் இருக்கிறது. இதில் Fishing Sector என்ற தலைப்பின்கீழ் தமிழகத்திற்கு subsidy component, மானியத் தொகை 356.54 கோடி ரூபாய் என்று அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், அதற்குக்கீழ் 'The Ministry of Finance, Department of Expenditure are requested kindly to release the funds in favour of the respective States from N.C.C.F. immediately as per the details below' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம் என்பது மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்குப் புரியாதா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசினார்கள். அப்பொழுது பாரதப் பிரதமர் அவர்கள் தனக்குக்



2005 பிப்ரவரி 4] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கடிதம் எனக்குத் தெரிந்தவரை–

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன் என்றுதான் குறிப்பிட்டேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எழுதிய கடிதத்திற்குப் பதிலும் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த பதில்தான்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எழுதிய கடிதத்திற்குப் பதில்தான் இந்த அரசாணை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது நீங்கள் நேற்றையதினம் சொன்னது. உள் துறை அமைச்சகத்திலிருந்து வந்ததாகச் சொன்னது நேற்று. நேற்றைய முன்தினம் நீங்கள் சொன்னது, நீங்கள் எழுதிய கடிதத்திற்குப் பாரதப் பிரதமர் பதில் எழுதியிருக்கிறார். அந்தப் பதிலில்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், பிரச்சினை அது இல்லை. நிதி அமைச்சர் சொன்ன கருத்துக்கும், பாரதப் பிரதமர் அவர்களுடைய அறிவிப்புக்கும் மாறுபாடு இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாலும்கூட, மத்திய அரசின் அரசாணை வெளியிடப்பட்டால்தான், அதற்குச் செயல்வடிவம் கொடுக்க முடியும். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குறிப்பிட்டதுபோல், இப்பொழுது பிரச்சினை அது அல்ல. மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்சினை, ஏற்கெனவே மத்திய நிதி அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புக்கும், இப்பொழுது மத்திய அரசு அனுப்பியிருக்கும் அரசாணைக்கும் வேறுபாடு இல்லை என்கிறார். அந்த வேறுபாட்டைதான் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன். மத்திய நிதி அமைச்சர் அவர்கள், மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற மானியத் தொகைகூட வங்கிகள் மூலமாகத்தான் பெறப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தார். ஆனால், இப்பொழுது நான் வாசித்துக் காண்பித்த மத்திய அரசாணையில், அந்த மானியத் தொகை மாநில

அரசின் மூலமாகத்தான் வழங்கப்படும் என்று தெளிவாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று முறை இதுபற்றிய விளக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எஸ்.ஆர்.பி. அவர்கள் (குறுக்கீடு) இல்லை, நீங்கள் தயார் பண்ணி வந்த குறிப்புகள் வீணாகிவிடக்கூடாது என்பதற்காகப் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வீணாகிவிடப்போகிறது என்பதற்காகப் பேசவில்லை. நான் சரியாகத்தான் பேசுகிறேன் தெளிவாகச் சொல்கிறேன். இப்பொழுதும் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர் பதில் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கடிதத்தை வெளியிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பாரதப் பிரதமர் அவர்கள் எழுதிய கடிதத்திற்கும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்தான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். நான் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்திற்குப் பதிலளிக்கும் வகையில்தான், மத்திய அரசு தனது முடிவை மாற்றிக்கொண்டு, மத்திய நிதியமைச்சரின் அறிவிப்பை மாற்றி, அதற்கு நேர் மாறாக அரசாணையை வெளியிட்டிருக்கிறது. இதுதான் எனது கோரிக்கைக்கு, கடிதத்திற்குக் கிடைத்த பதில்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) சுனாமி பாதிப்பு, பாலு, உங்களுக்கா? சுனாமி பிரச்சினையில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், நிதியமைச்சரைக் கொஞ்சம் கவனியுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சுனாமி பிரச்சினையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, வேதனையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற மீனவர்களுக்கு, இந்த நேரத்தில் பத்திரத்தில் கையெழுத்து போட்டு கடன்தான் வாங்க வேண்டும்; முழு மானியம் இல்லை என்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி.-யும், காங்கிரஸ் இயக்கமும் சொல்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அதைச் சொல்லவில்லை. வழிப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கலாம், வேண்டாம் என்று சொல்லவில்லை. உங்கள் தேங்காயை உடைத்தால், சரி. கடைக்காரன் தேங்காயை உடைத்தால், அது கடைக்காரன் தேங்காய் என்று ஒத்துக்கொள்ள வேண்டும். அதுதான் நான் சொல்வது. அது மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிப் பிள்ளையாருக்கு யாரும் தேங்காய் உடைக்கவில்லை. இங்கிருந்து போகின்ற வரிப் பணம்தான் மத்திய அரசுக்குப் போய்ச் சேர்கிறது. அந்தப் பணத்தைதான், அவர்கள் தமிழக மக்களுக்காகக் கொடுக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி தெளிவானது. நீங்கள் கடிதம் எழுதினீர்கள். அதற்கு 31 ஆம் தேதியிட்டு பாரதப் பிரதமர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதை நேற்றைய முன்தினம் நீங்கள் பேசினீர்கள். அந்தக் கடிதம் எங்கே? அந்தக் கடிதத்தை இங்கே வெளியிடவேண்டும் என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள். திரு. எஸ்.ஆர்.பி. வேறு பிரச்சினைக்குப் போங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பாரதப் பிரதமர் ஜனவரி 31 ஆம் தேதியிட்ட கடிதம் உங்களுக்கு வந்ததா இல்லையா? (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் வந்ததாக நேற்றைய முன்தினம் இந்த அவையிலே பேசியிருக்கிறீர்கள். இந்த அவையிலே நேற்றைய முன்தினம் நீங்கள் பேசினீர்கள். நீங்கள் பேசியதற்குப் பிறகுதான், நான் இதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரதப் பிரதமருக்கு எழுதியிருப்பதாகச் சொன்னார்கள்.

[2005 பிப்ரவரி 4

பிற்பகல் 1-05

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்குப் பேசுவதற்கு எந்த விஷயமும் கிடைக்கவில்லைபோல் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஆரம்பத்தில் சொன்னது, மத்திய நிதி அமைச்சரின் அறிவிப்புக்கும், மத்திய அரசு வெளியிட்ட அரசாணைக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்றுதான் சொன்னார். வேறுபாடு உண்டு என்பதை மத்திய அரசாணையை வாசித்துவிட்டு நான் நிரூபித்தேன். இப்போது அதை விட்டுவிட்டு, ஏனென்றால் அவர் சொன்னது தவறு என்று நிரூபணமாகிவிட்டது, அதை விட்டுவிட்டு, பிரதமர் எழுதாத கடிதம் எங்கே என்று கேட்டால் எங்கிருந்து கொண்டு வருவது?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது எழுதாத கடிதம் அல்ல, எழுதிய கடிதம். இப்போது ஏனோ அதை மாற்றிச் சொல்கிறீர்கள். நேற்றைய முன்தினம் பிரதமர் கடிதம் எழுதினார் என்று நீங்கள் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., இந்தப் பிரச்சினை முடிந்தது. அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, வேண்டாம். அடுத்தபடியாக, மறைமுகமான பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களையும் அடையாளம் கண்டு, உரிய நிவாரணம் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உயர்ந்த நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் பலவும் தேவையற்ற அமைப்புகளாகத் தற்போது மாறி வருகின்றன. தனியார் சுரண்டலிலிருந்து எளிய மக்களை விடுவிப்பதற்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள், எலிப் பொறிகளாக மாறிவிட்டன. உறுப்பினர்களாக இருப்பவர்கள், பல்வேறு மோசடிகளுக்கும், சுரண்டல்களுக்கும் இரையாகி வருகிறார்கள். 6 சதவிகிதம்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டமிட்டு இங்கே குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர் ஏனோதானோ என்று பேசக்கூடாது. கூட்டுறவு நிறுவனங்களிலே எங்கே, எப்போது, என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்று அவர் திட்டவட்டமாக அறிவிப்பாரேயானால், அதற்குத் தக்க பதில்கள்



2005 பிப்ரவரி 4] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

இங்கே அறிவிக்கப்படும். பொத்தாம்பொதுவாக, அங்கே இங்கே சுரண்டிக்கொண்டு இருக்கிறார்கள்; எலிப் பொறியாக இருக்கிறது என்றெல்லாம் அவர் குறிப்பிடுவதைத் தயவுசெய்து தவிர்க்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 6 சதவிகித வட்டிக்குக் கூட்டுறவு நிறுவனங்கள் பணம் வாங்குகிறார்கள். அதை அதிகமாகக் கொடுத்தால் 8 சதவிகிதத்திற்குக் கொடுக்க வேண்டும், நியாயப்படி. ஆனால், சில இடங்களில் 18 சதவிகிதம் வரை வசூல் செய்கிறார்கள். குறிப்பாக எது என்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்னையில் உள்ள சிம்சன் கூட்டுறவுச் சங்கத்தில், இந்தக் கொடுமை நடைபெறுகிறது. கூட்டு வட்டி, அபராத வட்டி...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இந்தியாவிலேயே கூட்டுறவு நிறுவனங்களிலே குறைந்த அளவு வட்டிக்கு விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிற மாநிலம் தமிழகம் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதற்கு அடுத்தபடியாக, கர்நாடக மாநிலத்திலே காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கிற மாநிலத்திலே, இன்றைக்கு விவசாயிகளுக்கு 10 சதவீத வட்டிக்குக், கூட்டுறவு நிறுவனங்கள், கடன் கொடுக்கின்றன என்பதையும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரள மாநிலத்திலும் அதேபோன்று, விவசாயிகளுக்கு என்று வழங்கப்படுகிற தொகைக்கு அதிகமான வட்டி வசூலிக்கப்படுகிறது. ஆனால், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இதற்கென்று தனியாக கவனம் செலுத்தி, விவசாயிகளுக்குக் குறைந்த அளவு வட்டிக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று அறிவித்ததன் காரணமாக, இந்தியாவிலேயே 9 சதவிகிதம் வட்டிக்கு விவசாயிகளுக்குக் குறைந்த விகிதத்திலே கடன் கொடுப்பது தமிழகம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் சொல்ல வருவது, விவசாயிகளுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கிகள், கூடுதலாக வட்டி வசூலிப்பதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்தவொரு விவசாயிக்கும் இன்றைக்கு வழங்கப்படுகிற நகைக் கடனுக்குக்கூட, விவசாயத்

தேவைக்காக வழங்கப்படுகிற நகைக் கடனுக்குக்கூட, 9 சதவீத வட்டிக்குக் கூடுதலாக வசூல் செய்யக்கூடாது என்பதுதான் அரசினுடைய உத்தரவு என்பதையும், அதைக் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்கான... (குறுக்கீடு) இப்போது நடைமுறையில் வந்திருக்கிற அனைத்தும், இப்போதைய புதிய நடைமுறை என்பதல்ல; கடந்த நான்கு மாத காலமாகவே அதுதான் நடைமுறையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்கள் உற்பத்திச் செய்கின்ற விளைபொருட்களை, விற்பனைக் குழுக்கள்மூலம் விற்பனை செய்ய இயலாத நிலைகளிலே அவர்கள் இருப்பு வைக்கிறபோது, அந்த வேளாண் பொருட்களுக்கு, 9 சதவிகிதம் குறைந்த வட்டியிலே இருப்பு வைக்க வேண்டும் என்பதற்குக் கடன் வழங்குவதற்குண்டான உத்தரவையும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அதனாலே, நம்முடைய மாவட்டத்திற்கே போய்விடலாம், வேறு மாவட்டம் வேண்டாம். அதாவது, மனோகரன் என்ற விவசாயி 1998 ஆம் ஆண்டு சூலூர் நிலவள வங்கியிலிருந்து கடன் வாங்கி இருக்கிறார்.

*(உறுப்பினர் அவர்கள் ஒரு சிறிய புத்தகத்தைக் காண்பித்தார்).*

அவருக்கு ஒரு கடிதம் வருகிறது. இன்னும் உங்களிடத்திலே இருக்கிற நிலுவைத் தொகை 5,900 ரூபாயைக் கட்டிவிடுவீர்களேயானால், முழுவதுமாகக் கடன் கட்டி முடிந்து விடும் என்று கடிதம் வருகிறது.





அதேபடி 5,900 ரூபாய்க்கு, அவர் 3,000 ரூபாய் எடுத்துப்போகிறார். ஏனென்றால், 2,920 ரூபாய் ஏற்கெனவே பங்குத் தொகை அங்கு இருக்கிறது. ஆகவே, அந்த 2,920 ரூபாயைக் கழித்துவிட்டு 3,000 ரூபாய் கட்டினால் முடிந்து போய்விடவேண்டும். 5,709 என்று அங்கே entry இருக்கிறது. அவர் கட்டியதை வாங்கிக் கொண்டுவிட்டார்கள். வாங்கிவிட்டு, கொஞ்சநேரம் கழித்து வந்து சொல்கிறார் அவர், ரொம்ப நேரம் கணக்குப் போட்டுப் பார்த்து...

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. இதுபற்றி நீண்ட விளக்கம் தேவையில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீண்ட விளக்கம் இல்லை. ரொம்ப முக்கியமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஒரு குறிப்பிட்ட பிரச்சினை இருந்தால், அதை அமைச்சர் அவர்களிடம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்ன அந்த மனோகரன் அவர்கள் வாங்கிய கடன் விவசாயத்திற்காகவா அல்லது பண்ணை சாராத் தொழிலுக்காகவா என்பதனையும் அவர் அறிந்துகொண்டு சொல்லவேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், கடன்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டதோ, 2,598 கோடி ரூபாய் கடனை நீண்டகாலக் கடனாக எப்போது மாற்றியமைத்தார்களோ, அந்தத் தேதியிலேயிருந்து அனைத்து விவசாயிகளுக்கும் 9 சதவிகித வட்டிக்குக் கடன் வழங்க வேண்டுமென்கின்ற உத்தரவிட்டிருகிறார்கள் என்பதையும் சொல்லி, அருகிலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே இன்றைய தேதியிலே வட்டி விகிதம் 11 சதவீதம் என்பதையும் இங்கே நான் பதிவு செய்யவேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்னும் பாக்கி 5,000 ரூபாய் இருக்கிறது என்று சொல்லி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி., மாண்புமிகு அமைச்சர் கேட்டார், விவசாயக் கடனுக்கா அல்லது வேறு கடனுக்கா?

[2005 பிப்ரவரி 4

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விவசாயக் கடனுக்குத்தான். விவசாயம் தவிர, வேறு தொழில் அந்த ஆளுக்குக் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிட்ட பிரச்சினை இருந்தால், அதை அமைச்சரிடத்திலே கொடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எங்கள் பக்கத்து ஊர்.....

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடன் 1998 ஆம் ஆண்டு வாங்கப்பட்டபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அதை அமைச்சரிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடன் என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்கள் குறிப்பிட்டார்கள். 1998 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடனுக்கு அப்போதைய தேதியில், அன்றைய நிலவரத்தில் என்ன வட்டி இருந்ததோ அதைக் கணக்கு செய்வார்கள். இப்போதைய நிலவரப்படி அவர் கணக்கைத் தீர்க்கும்போது அதற்குரிய முறையிலே மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உத்தரவுப்படி அவர் கடனைச் சீர்செய்கிற நேரத்தில், அந்தத் தேதியிலிருந்து 9 சதவிகித வட்டி (குறுக்கீடு) தவறு தட்டிக் கேட்கப்பட வேண்டும் என்பதற்காக.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறுகிற அந்த விவசாயி, கடன் வாங்கியிருப்பது விவசாயத்திற்கு அல்ல, மாட்டுப் பண்ணைக்கு. (சிரிப்பு) மாட்டுப் பண்ணைக்கு வாங்கியிருக்கிறார். இந்தக் குறிப்பிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினரவர்கள், 14 சதவீதம் வட்டி, அதிகப்படியான வட்டி கேட்கிறார்கள் என்பதெல்லாம். இந்த வட்டி விகிதத்தை விதித்தது 1998 ஆட்சி; 9 சதவிகிதம் வட்டி விதிப்பது புரட்சித் தலைவியினுடைய தற்போதைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., என்ன இப்படித் துருப்பிடித்த ஆயுதங்களைக் கொண்டு வந்துள்ளீர்கள்?



2005 பிப்ரவரி 4]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, மாடு வளர்ப்பது என்பது விவசாயத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழில்தான். (குறுக்கீடுகள்) விவசாயத் தொழில்தான்- dairy farming.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்டுப் பண்ணை நடத்துவது என்பது விவசாயம் சாராத் தொழில். (குறுக்கீடு) பண்ணை சாராத் தொழில்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது எப்படி இருந்தாலும், (குறுக்கீடுகள்) 5,000 ரூபாய் எப்படி 14 ஆயிரம் ரூபாயாகும்? 5,000 ரூபாய், வங்கி செய்த தவறுக்காக 14 ஆயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே 2,598 கோடி ரூபாய் கடனை 1997 ஆம் ஆண்டு, 1998 ஆம் ஆண்டு, 2000 ஆம் ஆண்டு, 2001 ஆம் ஆண்டு என்று பாராமல், பிரித்துப் பார்க்காமல், 5 ஆண்டுக் காலத்திற்கு முன்பு வாங்கிய கடனுக்குமாகச் சேர்த்து, கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்பட வேண்டுமென்பதற்காக, முதல் மாநிலமாக மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சி செய்கிற தமிழகத்திலேதான் 2,598 கோடி ரூபாயை இரண்டு ஆண்டு காலத்திற்கு வசூல் செய்வதில்லை என்றும், அதற்குப் பிறகு 3 ஆண்டுக் காலத்திலே சம தவணையிலே வசூல் செய்து கொள்ள வேண்டுமென்பதற்கான உத்தரவையும், தமிழகத்திலே அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, ஆணையின்படிதான் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லி, விவசாயிகளுக்கான 9 சதவிகித வட்டி என்பதும் இந்தியாவிலேயே, தமிழகத்திலேதான் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும் சொல்லி, அதற்காக மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்கள் இதய தெய்வம் அம்மா அவர்களையும், தமிழக அரசையும் பாராட்ட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Dairy farming என்பது விவசாயம் சார்ந்த தொழில்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 1998-லே, தி.மு.க. ஆட்சிக் காலம். 1998-லே தி.மு.க.ஆட்சி....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** I am not yielding, Sir. மொத்தம் 5,000 ரூபாய்தான் பாக்கி இருக்கிறது என்று சொல்லிவிட்டு, மொத்தம் 5,900 ரூபாய், இன்னும் 5,000 ரூபாய் சேர்த்தால்கூட 10,000 ஆகும். ஆனால், 14,000 ரூபாய் வசூல் செய்திருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இவர்கள் மேலே குற்றம் சொல்கிறேன் என்று நினைக்கக்கூடாது. தவறு நடைபெறுகிறது, அதைப் பாருங்கள், கவனியுங்கள், கவனம் செலுத்துங்கள் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக, அதையும் சரி என்று சொல்லிவிடாதீர்கள்.

வங்கிகளே நேரடியாக விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் பெருகிவிட்ட நிலையில், இந்தச் சுரண்டல் அமைப்புகளை எல்லாம் விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, விவசாயக் கடன் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெற்றவர்களுடைய சுமையைக் குறைக்கும்வகையில், ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம், 2002 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கியால் நிர்ணயிக்கப்புட்ட தொகையை, 30-6-2002-க்குள் முழுமையாகச் செலுத்தினால் அந்தச் சலுகையைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டது. அந்தச் சலுகையின்படி, சில விவசாயிகள் மொத்தக் கடனில் 25 சதவீதத்தைக் கட்டியுள்ளனர். மீதமுள்ள தொகையைக் கட்டுவதற்கு 30-9-2003 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளாக நிலவி வருகின்ற கடுமையான வறட்சியின் காரணமாக, விவசாயிகள் ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதனால், கூட்டுறவு வங்கிகளில் ஏற்கெனவே நிலுவையிலுள்ள கடன் பாக்கி முழுவதையும் விவசாயிகள் செலுத்தவேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். தமிழகத்தில் நிலவி வருகின்ற கடுமையான வறட்சியைக் கருத்தில்கொண்டு, ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டத்தை மீண்டும் செயலுக்குக் கொண்டு வந்து, விவசாயிகளிடமிருந்து கடனைப் பெறும் அறிவிப்புச் செய்யும்படி, தமிழகக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை, விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சந்தித்து, இங்கே முறையிட்டுள்ளார்கள். விவசாயிகளின் கோரிக்கையிலுள்ள நியாயத்தை உணர்ந்து, கடன் தொகையை முழுமையாகத் தீர்த்துக்கொள்வதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-15*

அடுத்து, வட்டி, அபராத வட்டி என்று இரண்டு வட்டியைத் தயவுசெய்து போடாதீர்கள். அந்த இரண்டு வட்டியை எடுத்துவிட்டு அசலைக் கட்டச் சொல்லுங்கள். கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இனிமேலும் விவசாயிகள்மீது கடன் சுமையை ஏற்றாதீர்கள். வட்டி, அபராத வட்டி என்கின்ற பேச்சே இல்லாமல், நிலுவையில் இருக்கின்ற பாக்கியை நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பஞ்சாயத்துத் தலைவர்கள் பிரச்சினை. ஏற்கெனவே, சபாநாயகருடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். அங்கே கோயம்புத்தூரில் திடீரென்று ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. கலெக்டர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தின்படி மின்கட்டண பாக்கி இருக்குமேயானால், அந்த மின்கட்டணப் பாக்கிக்கு 18% வட்டியை அந்தந்த சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர், தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து கட்ட வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் தேர்தலிலே நிற்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இது எப்படி நியாயமாக இருக்க முடியும்? அவர் மின்சாரம் உபயோகித்தது கிடையாது. கோயம்புத்தூரை இன்றையதினம் எடுத்துக்கொண்டீர்களானால், 1,000 அடி ஒரு bore என்று சொன்னால், கலெக்டர் ஆபீசில் சொல்வது 330 மீட்டர்தான் என்று சொல்கிறார்கள். 1,000 அடிக்குக் கீழே போய்விட்டால், 12 Horse Power மோட்டார். 10 Horse Power மோட்டார் கீழே வைக்க முடியாது. 30 stage தள்ளியாக வேண்டும். பல இடங்களில் நாள் முழுவதும் ஓடினால்கூட தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை. அதனால் மின்கட்டணப் பாக்கி இருக்கிறது. மின்கட்டணப் பாக்கியைக்கூட ஓரளவிற்கு எப்படி வசூலிக்கிறார்கள் என்று சொன்னால், இங்கேயிருந்து செல்கின்ற மானியத்தை பஞ்சாயத்துக்குக் கொடுக்காமல், அதை அப்படியே அங்கேயே எடுத்துக்கொள்கிறார்கள். தண்ணீர் வரி கட்டணமாக இருந்தாலும் சரி, மின்கட்டணப் பாக்கியாக இருந்தாலும் சரி, அதை அப்படியே எடுத்துக்கொள்கிறார்கள். எடுத்ததும் போக, பல பஞ்சாயத்துகளுக்கு, 7 மோட்டார், 8 மோட்டார், 10 மோட்டார் என்று ஓடுகின்ற நேரத்தில், மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் ரூபாய் பில் பட்டியல் வருகிறது. அதை அவர்களால்

செலுத்த முடியவில்லை. அந்த நேரத்தில் நீங்கள் செலுத்திதான் ஆகவேண்டும் ; இல்லையென்றால் நடவடிக்கை வரும் ; அடுத்த முறை தேர்தலில் நிற்க முடியாது என்று சொல்லி மிரட்டுவது எப்படி நியாயமாக இருக்க முடியும்? இதைக் கொஞ்சம் கருத்தில் கொள்ள வேண்டும். அந்த அறிவிப்பைகூட அவர்களாக வெளியிட்டதாகச் சொல்லவில்லை. இங்கேயிருந்து உள்ளாட்சி இயக்குநரிடமிருந்து கடிதம் சென்றதாகவும், அந்தக் கடிதத்தின் அடிப்படையில்தான் அது வெளியிடப்படுகிறது என்றும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரின் வேண்டுகோள்:

'அன்புடையீர்,

பொருள்: ஊராட்சி நிருவாகம் - கோயம்புத்தூர் மாவட்டம் -ஊராட்சி நிதியாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின்கட்டணத்தை மின் வாரியத்திற்கு நிலுவையின்றி செலுத்தக் கோருதல்.

பார்வை: ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை.

அவரின் கடித எண் கொடுத்திருக்கிறார். ஆக, இது எப்படிச் சரியாக இருக்க முடியும்? தாங்கக்கூடியதுதானா? கண்டிப்பாக இந்த அறிவிப்பையும் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும். மீண்டும் இப்படி நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோயம்புத்தூரிலே கடந்த 1998-லே குண்டு வெடிப்பு நடந்தது. (குறுக்கீடு) அமைச்சருக்குக் குறிப்பு வேண்டுமா? தருகிறேன். (சிரிப்பு) இன்னும் வேண்டுமானாலும் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கொடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது இல்லை. வேறு எடுத்துவிட்டேன். கோவை குண்டு வெடிப்புக்குப் போய்விட்டேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே வைத்திருந்ததை நீங்கள் அமைச்சரிடம் கொடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவரிடம் கொடுத்துவிட்டேன். அந்தக் குண்டு வெடிப்பிலே பலபேர் கைது செய்யப்பட்டு, சிறையிலே இருக்கிறார்கள். அத்தனை பேரும் நேரடியாக குண்டு வெடிப்பிலே சம்பந்தப்பட்டவர்கள் அல்லர் குறிப்பாக, Crime Number 197/98 ஒன்று இருக்கிறது. அந்தக் Crime Number-இல் கைது செய்யப்பட்டவர்கள்மீது கொலை முயற்சி வழக்கு 307-ல் வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஏழு ஆண்டுக் காலமாக அவர்கள் சிறையிலே இருக்கிறார்கள். அவர்கள் சார்பில் மனித உரிமைக் கமிஷனுக்கு ஒருவர் எழுதியிருக்கிறார். அவருக்குப் பதில் வந்திருக்கிறது. இங்கிருக்கிற தலைமைச் செயலாளர் அதுபற்றி விசாரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அங்கிருந்து கடிதம் எழுதியிருக்கிறார். தயவுசெய்து, அருள்கூர்ந்து ஒருவேளை அவர்கள்மீது வழக்கே நிரூபிக்கப்பட்டாலும்கூட, அதிகபட்ச தண்டனை 10 ஆண்டுகள்தான் வரும். ஏற்கெனவே 7 ஆண்டுகள் சிறையில் ஜாமீன் இல்லாமல் இருந்துவிட்டார்கள். பலரும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நல்ல முறையில் விசாரித்து, அவர்களை ஜாமீனிலாவது விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பதை மாபெரும் சாதனையாக யாரும் கூறமாட்டார்கள்.

*பிற்பகல் 1-20*

அதேபோன்று, பலரைப் பாதிப்புக்குள்ளாக்கி, சிலரை வாழ வைக்கும் என்றாலும், யாரும் அதனை வரவேற்கமாட்டார்கள். வரி வசூலிப்பதிலே கூட மனிதநேயம் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. "மலருக்குச் சேதம் விளைவிக்காமல் தேனை மட்டும் எடுக்கும் தேனீக்களைப் போன்று அரசுகள் நடந்துகொள்ள வேண்டும்" என்று மகாபாரதக் காலம் முதல் கூறப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு நீர் எடுத்துச் செல்லும்போது சில நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

20 கோடி ரூபாய் செலவில் திட்டப்பட்ட ஒரு திட்டம், புதிய வீராணம் என்ற பெயரில் 720 கோடி ரூபாய் செலவில் மாற்றியமைக்கப்பட்டது. இப்போது கூடுதலாக விரிவாக்கத் திட்டம்

வகுக்கப்பட்டு, 300 கோடி ரூபாய்செலவாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. உள்ளூரில் கடன் பெறமுடியாமல் உலக வங்கி போன்ற அமைப்புகளை அணுக வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. பாலைவனப் பிரதேசங்களாக இருக்கும் பல அரபு நாடுகளிலும், ஜப்பான் போன்ற நாடுகளிலும் கடல் நீரைத்தான் குடிநீராக மாற்றி பயன்படுத்தி வருகிறார்கள். நீண்ட கடல் பரப்பைக் கொண்ட தமிழகத்தில் அதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது. மத்திய அரசும் 1000 கோடி ரூபாய், அளவுக்கு அதற்கான நிதியை ஒதுக்குவதாகவும் அறிவித்திருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்புதான் இதே பிரச்சினையை வேறு ஒரு மாண்புமிகு உறுப்பினர் எழுப்பி, அதற்கு மிகவும் விரிவாக, விளக்கமாக நான் பதில் கூறியபோது, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்த அவையில் இல்லை. அவர் வெளியே அமர்ந்துகொண்டு, இந்த அரசின்மீது என்ன குற்றச்சாட்டுகள் சொல்லலாம் என்று குறிப்புகள் தயார் செய்துகொண்டிருந்தார். ஆகவே, மீண்டும் இந்த விளக்கங்களைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். நான் மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். சென்னை மாநகரத்தின் ஒட்டுமொத்த குடிநீர்த் தேவை ஒரு நாளுக்கு 840 மில்லியன் லிட்டர் million litres per day. ஆகவே, எந்த ஒரு திட்டத்தின் மூலமாகவும் இந்தக் 840 குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. ஏற்கெனவே, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் மூன்று ஏரிகள் இருக்கின்றன. மழை பெய்யும்போது, ஓரளவுக்கு அந்த ஏரிகளில் நீர் கிடைக்கும். கிருஷ்ணா நதி நீர் கிடைக்கும்போது கிடைக்கும். ஆகவே, வேறு ஓர் உறுதியான ஆதாரம் வேண்டும் என்பதற்காகத்தான் புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்தினோம். இந்தப் புதிய வீராணம் திட்டம் முழு வெற்றி அடைந்திருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே இந்தப் புதிய வீராணம் திட்டம் மூலம், நாளுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிதண்ணீர் சப்ளை செய்ய வேண்டும், பெற வேண்டும் என்பதுதான் இந்த அரசின் இலக்கு. அந்த இலக்கை அடைந்துவிட்டோம். ஆனால், அது சென்னையின் குடிநீர்த் தேவையை ஒட்டுமொத்தமாகப் பூர்த்தி செய்வதற்குப் போதாது. ஆகவேதான், கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனால், அங்கே உள்ள விவசாயிகளுக்கோ, மற்றவர்களுக்கோ எந்தவிதத்திலும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று இந்தக் கூட்டத் தொடர் தொடங்கிய நாள்முதல் தினந்தோறும் இந்த அவையில் விளக்கம் கூறிக்கொண்டே இருக்கிறோம்.





அந்தக் கொள்ளிடம் பகுதியில் ஒரு நாளுக்கு 2,300 சொச்சம் million litres per day குடிதண்ணீர் கிடைக்கிறது. ஆகவே, இந்தத் திட்டங்களுக்குத் தேவைப்படுவது 150 million litres per dayதான். ஆகவே, இதனால் அங்குள்ளவர்களுக்கு உபரியாக குடிநீர் இருக்குமே தவிர, அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. நிலத்தடி நீரும் பாதிக்கப்படாது.

மத்திய அரசு 1,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு எஸ்.ஆர்.பி. குறிப்பிட்டார். இதையேதான் இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினரும் குறிப்பிட்டார். மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாய் என்று அறிவித்திருப்பது, ஒட்டுமொத்த இந்தியாவின் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்களுக்காகத்தானே தவிர, தமிழகத்திற்காக மட்டும் அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய் என்று அறிவிக்கவில்லை. ஏற்கெனவே தாக்கல் செய்த பட்ஜெட்டின்போது, சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அறிவித்தாரே தவிர, அது எவ்வாறு செயல்படுத்தப்படும், எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்று எந்த விவரமும் இன்றுவரை மாநில அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை. ஆகவே, மாநில அரசே இப்போது முயற்சி மேற்கொண்டு Global tender விட்டிருக்கிறோம். ஒரு நாளுக்கு 300 million litres per day, 300 M.L.D. சப்ளை செய்வதற்கான, உற்பத்தி செய்வதற்கான, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை இங்கே செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். Global tender விட்டிருக்கிறோம். இதுவரை சில bids வந்திருக்கின்றன. பிப்ரவரி 15 ஆம் தேதியுடன் இந்த டெண்டர் முடிவடையும். அதன் பின்னர் எந்த நிறுவனத்திற்கு இந்த contract-ஐக் கொடுப்பது என்பது முடிவு செய்யப்படும். ஆனால், அதிகபட்சமாக அதன்மூலம் 300 million litres per day-தான் கிடைக்கும். ஆகவே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல் ஒட்டுமொத்தக் குடிநீர்த் தேவை சென்னைக்கு ஒரு நாளுக்கு 840 மில்லியன் லிட்டர். ஆகவே, எந்த ஒரு திட்டத்தின் மூலமாகவும் இதை நிறைவேற்ற முடியாது. எனவேதான், பல்வேறு திட்டங்களைத் தொகுத்து இந்தக் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யப் போகிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** புதிய வீராணம் திட்டம் முழுமையான வெற்றி என்று சொன்னார்கள். உபரித் தண்ணீரைத்தான் எடுத்து வருவதாகச் சொன்னீர்கள். உபரித் தண்ணீரை எடுத்து வருவதாக இருந்தால், மீண்டும் கொள்ளிடத்திலே நீங்கள் ஆழ்குழாய்க்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 பிப்ரவரி 4

கிணறுகளை இப்போது அமைக்க வேண்டிய அவசியம் என்ன? அது முழுமையான வெற்றி அல்ல. அதுதான் உண்மை.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நான் விளக்கமாகத் தெரிவித்தேன். விளக்கமாகச் சொன்னேன். புதிய வீராணம் திட்டம் என்பது வீராணம் ஏரியிலிருந்து 180 million litres per day குடிநீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கான திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடித்துவிட்டோம். அந்தத் திட்டத்தின் வழியாக இப்போது சென்னைக்கு ஒரு நாளுக்கு 180 million litres குடிநீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டம் அதோடு முடிந்துவிட்டது. முழு வெற்றி அடைந்துவிட்டது. அதில் எந்த மாறுபாடும் கிடையாது. ஆனால், இப்போது நாம் அறிவித்திருப்பது ஒரு புதிய திட்டம். அதனுடைய விரிவாக்கத் திட்டம் என்று பெயர் சூட்டியிருக்கிறோம். அது அந்தத் திட்டத்தினுடைய extension அல்ல. இது புதிய திட்டம். அதன்மூலமாகத்தான் கொள்ளிடத்திலிருந்து ஒரு நாளுக்கு 150 million litres கொண்டு வருவதற்கு திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் என்றுதான் அறிவித்திருக்கிறீர்கள். ஆக, அதே திட்டம்தான் இது. வேறு திட்டம் கிடையாது. அது வெற்றி என்று சொன்னால், முன்னாலேயே மறுவாய், வடக்குத்தி, பண்ருட்டி பகுதியிலே 40-க்கும் மேற்பட்ட ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்திருக்கிறீர்கள். இப்போது மீண்டும்..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, extension திட்டம் என்றால் அந்தக் குழாய் வழியாகத்தான் அந்தத் தண்ணீர் வரப் போகிறது என்று அர்த்தம் அல்ல. இதற்குப் புது குழாய்தானே போடுகிறீர்கள்? (குறுக்கீடு) வீராணம் குழாய் மூலமாகவா? (குறுக்கீடு) சரி. அதனால் இந்தத் திட்டத்தைக் குறிப்பிடுவதற்காக, New Veeranam Augmentation Project-ஆ? (குறுக்கீடு) சரி, தமிழிலேயே சொல்லிவிடுகின்றேன். புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் என்று அறிவித்திருக்கிறோம். ஆகவே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், அந்தத் திட்டம்



2005 பிப்ரவரி 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முடிவடைந்துவிட்டது. Original-ஆக ஆரம்பத்தில் திட்டப்பட்ட திட்டம், 180 million litres per day வழங்குவதற்காகத்தான். அதை முடித்துவிட்டோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே அங்கேயிருந்து தண்ணீர் எடுத்தபோது உபரித் தண்ணீரைத்தான் எடுக்கிறோம் என்று சொன்னார்கள். தண்ணீர் விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டது. விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில் (குறுக்கீடுகள்) விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்ட நேரத்தில்..

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீராணம் திட்டத்தின் முதல் பணியாக அந்தக் குழாய்களைப் பொருத்திவிட்டோம். The pipe line was laid from Veeranam to Chennai. அந்த நேரத்தில் அந்தப் பணி முடிவடைந்தபோது, வீராணம் ஏரியில் தண்ணீர் இல்லை. அதனால், அப்போது பண்ருட்டிப் பகுதியில், 45 இராட்சத போர் வெல்களை அங்கே இறக்கி அவற்றின் மூலமாக ஒரு நாளுக்கு 90 million litres per day supply செய்து கொண்டிருந்தோம். அப்போதே தெரிவித்தோம். இந்த 45 போர் வெல்களிலிருந்தும் ஒரே நேரத்தில் தண்ணீர் எடுக்கப்படமாட்டாது; தேவைக்கு ஏற்ப ஒரு சமயத்தில் 25 அல்லது 20 போர் வெல்களிலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படும்; மற்றவற்றை reserve-ஆக வைத்துக்கொள்வோம் என்பது ஏற்கெனவே இந்த அவையில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர், நல்ல மழை பெய்து வீராணம் ஏரி நிரம்பிவிட்டது. அதனால், இப்போது வீராணம் ஏரியில் விவசாயத் தேவைகள் போக, தேவையான நீர் இருப்பதால் அங்கிருந்து ஒரு நாளுக்கு 180 million litres per day எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி இருந்தாலும் மீண்டும் விரிவாக்கம் திட்டம் என்கிற பெயரில் அங்கே 40 இராட்சத போர்கள்--நான் சொல்லவில்லை. முதலமைச்சர் பயன்படுத்திய வார்த்தை--இராட்சத போர்கள் (குறுக்கீடுகள்) அங்கே போகிற இடத்தில் போர் வெல் போட்டால்..

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தபோது இதே அவையில் மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள் இந்த வீராணம் திட்டமானது நிறைவேறாது. இது ஒரு வீணான திட்டம், இதில் 720 கோடி ரூபாய் செலவழித்து இந்த அரசு வீணடிக்கிறது ; இந்தத் திட்டமானது நிறைவேற்றப்பட்டால், அந்தப் புதிய வீராணம் திட்டம் குழாய் மூலமாக தண்ணீர் வராது; அந்தப் பகுதி மக்களுடைய கண்ணீர்தான் வரும் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் அதை முறியடிக்கின்ற வகையிலே நல்ல முறையிலே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், இப்போது அவர் குடித்த தண்ணீர் வீராணம் தண்ணீர்தான்! (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** இன்றைக்கு அந்தத் தண்ணீரைத்தான் குடித்துக் கொண்டிருக்கின்றார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருந்து தண்ணீர் வந்தால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கிறேன்.

இங்கே புதிதாக கொள்ளிடத்திலே Bore Well போட்டீர்களேயானால், புதிய வீராணம் விரிவாக்கச் செயலாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், அரியலூர் நகராட்சி, தஞ்சாவூர் நகராட்சி, திருவையாறு சிறப்பு ஊராட்சி, கும்பகோணம் நகராட்சி, ஜெயங்கொண்டம் நகராட்சி, உடையார்பாளையம் சிறப்பு ஊராட்சி, தா.பழூர் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகள், ஜெயங்கொண்டம் ஒன்றியத்திலுள்ள 13 ஊராட்சிகள், ஆண்டிமடம் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகள், வலங்கைமான் ஒன்றியம் மற்றும் நீடாமங்கலம் ஒன்றியம்–

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுடைய உரை நிறைவுறுகின்றவரை, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மன்னார்குடி நகராட்சி, திருத்துறைப்பூண்டி நகராட்சி, வேதாரண்யம் நகராட்சி, திருவாரூர்





நகராட்சி, நாகப்பட்டினம் நகராட்சி ஆகியவையும் குடிநீருக்காக மிகவும் பாதிக்கப்படும் என்று கூறி, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் அதை எதிர்க்கிறார்கள். முன்பு அங்கே தண்ணீர் என்பது 5 மீட்டர் நிலத்தடி நீர்–

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மீண்டும் மீண்டும் இந்த அவையில் எழுப்பப்படுவதால் இதில் யாருக்கும் எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை, அச்சமும் தேவையில்லை என்பதற்காக நான் ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். இப்பொழுதுதான் குறிப்பிட்டேன். வீராணம் ஏரியிலிருந்து ஒரு நாளைக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் சென்னைக்கு வழங்கப்படுகிறது. கோடைக் காலத்தில் வீராணம் ஏரியில் தண்ணீரின் அளவு குறையும்போது சென்னைக்குக் குடிநீர் supply-யை அப்படியே தொடரவேண்டும் என்பதற்காகத்தான் கொள்ளிடம் ஆற்றுப்படுகையில் இப்பொழுது இந்தப் புதிய விரிவாக்கத் திட்டத்தை நாம் அறிவித்திருக்கிறோம். அங்கே கிணறுகளை அமைத்து, அவற்றின் மூலமாக கோடைக் காலத்தில் தேவை ஏற்படும்போது மட்டும்தான் 150 மில்லியன் லிட்டர் தண்ணீர் ஒரு நாளைக்கு இங்கே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே ஏற்கெனவே நிலத்தடி நீர் மட்டம் என்பது 5 மீட்டர், 15 அடி, 20 அடியாக இருந்தது. இப்பொழுது அங்கே 15 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அறிவிக்கப்பட்ட பிறகு, அமல்படுத்தப்பட்ட பிறகு, collector well-லே 15 அடி போட்டிருக்கிறார்கள். உள்ளபடியே மற்ற இடத்திலே கேட்டால் 60 அடிக்குக் கீழே நிலத்தடி நீர் மட்டம் போய்விட்டது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, அவர்கள் எடுத்துக்கொண்டிருப்பது அதிகம் அல்ல. 162 மில்லியன் லிட்டர்கள்தான் எடுக்கிறார்கள். அதோடு சேர்ந்து இன்னொரு 150-MLD யும் எடுத்தால், எங்களுக்கு விவசாயம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல ; எங்களுடைய வேளாண்மை முழுவதுமாக பாதிக்கப்படும் என்று அந்த 4 மாவட்டங்களிலே இருக்கிற மக்களும் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த பண்ருட்டி Aquifer-ஐயும், கொள்ளிடம் ஆற்றுப்படுகையையும் confuse செய்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன்.

[2005 பிப்ரவரி 4

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. தெளிவாகத் தெரியும். அது அணைக்கரைக்கு அந்தப் பகுதியிலே இருக்கிற பகுதி....

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் நேற்றைக்குப், பேசும்போது, முழு விவரமாக இந்தத் திட்டத்தைப் பற்றி தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெரிவித்தார்கள். அவையிலே, அந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் இல்லையென்று நினைக்கின்றேன். ஆகவே, ஒரே ஒரு கருத்தை மட்டும் அவருக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அந்தக் கொள்ளிடம் பகுதியிலே மாண்புமிகு அம்மா அவர்களால் குழுக்கள் அனுப்பப்பட்டு, அந்த 31 கிராமங்களுக்கும் சென்று பார்வையிட்டு, அந்த மக்களிடம் தெளிவுபடுத்திவிட்டு வந்த பிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலிருக்கின்ற மக்களைத் தூண்டிவிட்டுத்தான் இந்த நிகழ்வுகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தக் கொள்ளிடம் பகுதியிலே 2.5 மீட்டர் அளவிற்கு மணலுடைய ஆழம் இருக்கிறது. அதிலே, அங்கே போடப்படுகின்ற நீர் சேகரிப்புக் கிணறுகள் 6-ம், 20 மீட்டர் ஆழத்திற்குதான் அமைக்கப்படுகின்றன. அந்தப் பகுதியிலே 2360 மில்லியன் லிட்டர் அளவிற்கு ஒரு நாளைக்குத் தண்ணீர் கிடைக்கின்றது. அந்தப் பகுதியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக ஒரு நாளைக்கு 200 மில்லியன் லிட்டர் தண்ணீரானது, எடுக்கப்படுகிறது.

மேலும், புதிய வீராணம் திட்டத்தினுடைய விரிவாக்கத் திட்டத்தின்மூலமாக ஒரு நாளைக்கு அங்கே எடுக்கப்படுவது 1.50 M.L.D தண்ணீர்தான். மொத்த அளவிலே 2,360-லே பார்க்கும்போது 14.8 சதவிகிதத்தை மட்டுந்தான் நாம் தினந்தோறும் பயன்படுத்துகிறோம். மீதி இருக்கின்ற தண்ணீரானது, அந்தப் பகுதியிலே நிலத்தடி நீரானது, அப்படியே இருக்கிறது. ஆகவே, எந்தச் சூழ்நிலையிலுமே அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்களை இது பாதிக்காது. புதிய வீராணம் திட்டத்தின் மூலமாக உபரி நீரை வீராணம் ஏரியிலிருந்து நாம் எடுப்பதுபோக கடுமையான கோடைக் காலத்திலே வறட்சி ஏற்படுகின்ற நேரத்தில் மட்டும் 1.50 M.L.D தண்ணீரைப் புதிய வீராண விரிவாக்கத் திட்டத்தின்மூலமாக எடுத்து, அந்தப் புதிய வீராணம் திட்டத்திற்காக பதிக்கப்பட்ட குழாய் மூலமாகத்தான் சென்னைக்குக் கொண்டு வருகின்றோம்.



2005 பிப்ரவரி 4] [திரு. கே.பி. அன்பழகன்]

மேலும், வீராணம் ஏரியிலே தண்ணீர் இருக்கின்ற நேரத்திலே, பண்ருட்டிப் பகுதியிலே அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றை நாம் எப்போதும் பயன்படுத்துவதில்லை. வீராணம் ஏரி வறண்டுவிட்ட நேரத்திலே, அந்த ஆழ்துளைக் கிணறு மூலமாகவும் சென்னையிலே இருக்கின்ற மக்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்காக, தொலைநோக்குப் பார்வையோடு அடுத்து என்ன நிகழ்வுகள் ஏற்படும் என்பதையெல்லாம் சிந்தித்து—இந்தத் திட்டங்களை விரிவாக்கத் திட்டமாகவும், தொலைநோக்குப் பார்வையிலே சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் கொண்டு வருகின்ற ஒவ்வொரு திட்டத்தையும் எதிர்க்கட்சியினர் இப்படிக் குறை கூறுவதைத் தங்களுடைய கொள்கையாக வைத்துக் கொண்டு பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தினுடைய உண்மை நிலவரம் என்ன என்பதை அறிந்து, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் அமைதியாக இருந்தாலும், இவர்களுடைய தூண்டுதலால்தான் இப்பொழுது அந்தத் திட்டத்திற்குப் பிரச்சினையை உருவாக்குகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கிறேன்.

பிற்பகல் 1-35

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஏனுங்க அவரே சொல்கிறார், 20 மீட்டரில் போடப் போகிறோம் என்று. நான் சொல்கிறேன், 5 மீட்டர் 20 அடி இருந்த நிலத்தடி நீர்மட்டம் இப்போது 60 அடி, நீங்களே 20 மீட்டர் 60 அடி ஆகிவிட்டது என்று சொல்கிறீர்கள். அங்கிருந்து உறிஞ்சிக்கொண்டே இருந்தால் கதி என்ன ஆகும் என்று பாருங்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள், பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கோடைக் காலத்திலே ஏற்கெனவே அவர்களுக்குப் போதுமான தண்ணீர், 2003-2004-ல் அவர்களுக்கு வரவில்லை. அதுதான் உண்மை. அதனால், அங்கே தண்ணீர் எடுக்க முடியும் என்று நினைப்பது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2005 பிப்ரவரி 4

சுனாமியால் இனிமேலும் மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், கடற்கரை நெடுகிலும் அதிகமான பொருட் செலவில் நெடுஞ்சுவர் எழுப்பப்பட வேண்டுமென்றும், அதற்கு உலக வங்கியின் உதவியைக் கோர வேண்டுமென்றும் முதலமைச்சர் கூறியிருக்கிறார். சீனாவில் உள்ள நெடுஞ்சுவரைவிட அதிசயமான சுவராகக்கூட அது அமையலாம். ஆகாயத்தில் கோட்டை கட்டும் அளவிற்கு ஆசைகளை வளர்த்துக்கொள்வதைப் போல, இத்தகைய நெடுஞ்சுவர் எழுப்பப்படும் திட்டமும் மாறிவிடக் கூடாது என்பதை அடக்கத்துடன் எடுத்துக் கூற விரும்புகிறேன். குழந்தைத் தொழிலாளர்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கெடுத்தாலும் கேலியும் கிண்டலும் பேசுவது அல்லது சாபம் இடுவதுபோல் பேசுவது திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு வாடிக்கை. ஏற்கெனவே எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. வீராணம் திட்டத்தைப் பற்றி இங்கே நான் அறிவித்தபோது இந்த வீராணம் திட்டம் நிறைவேறாது, இதன்மூலம் தண்ணீர் வராது என்று இதே அவையில் இதே எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கும் நான் சொன்னேன் வீராணம் திட்டம் நிறைவேறும் ; (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் சென்னைக்குக் குடிநீர் வரும் என்று சொன்னேன். இன்று அந்தத் திட்டம் நிறைவேறிவிட்டது. சென்னைக்குக் குடிநீர் வந்துகொண்டிருக்கிறது.

அதைப் போலவே, இப்போது சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியில், அதாவது 1,076 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரு தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டும் என்று சொன்னேன். இந்தத் திட்டத்தைப் பற்றிப் புரிந்துகொள்ளாதவர்கள் கேலியும், கிண்டலும் பேசுகிறார்கள். The Great Wall of China போல இங்கே ஒரு மாபெரும் சுவரை எழுப்ப வேண்டுமென்று நினைக்கிறாரா, கான்கிரீட் சுவர் எழுப்ப வேண்டுமென்று நினைக்கிறாரா என்று, ஏற்கெனவே சில பத்திரிகைகளில்கூட விமர்சனங்கள் எல்லாம் வந்தன. அதே ரீதியில்தான் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும் பேசிக்கொண்டிருக்கிறார். கான்கிரீட் சுவர்...

(திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் அருகில் இருந்த உறுப்பினரிடம் பேசிக் கொண்டிருந்தார்.)



2005 பிப்ரவரி 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு இதுவும் ஒரு வாடிக்கை. ஒரு பிரச்சினையை எழுப்புகிறார், நானோ, அமைச்சர்களோ பதில் சொல்லும்போது அதைக் கவனிப்பதே இல்லை. பக்கத்தில் இருப்பவர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்காகத்தான் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, தடுப்புச் சுவர் என்றால் கான்கிரிட் சுவர் அல்ல. தேவைப்படுகின்ற இடங்களில் Mangrove Plantations எழுப்பப்படும். தேவைப்படுகின்ற இடங்களில் Groynes அதாவது தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும். தேவைப்படுகின்ற இடங்களில் Sea Walls கட்டப்படும். RMS Wall கட்டப்படும். இந்த RMS Wall என்பது போன்ற Sea Wall பலவிதங்களில் அமைக்கப்படுகின்றன. ஆகவே, ஒட்டுமொத்தமாக 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில், ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். இது ஒன்றும் கனவல்ல. இது நிச்சயமாக நிறைவேறும். (மேசையைத் தட்டும் ஒலி) இதே எஸ்.ஆர்.பி. அவர்கள் அதைப் பார்க்கத்தான் போகிறார். அன்றையதினம் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்து வருங்கால சந்ததிகளை வாழ வைக்கும் நோக்கத்தோடு, அவர்களுக்குக் கல்விப் புகட்ட வேண்டுமென்று பல்வேறு திட்டங்களையும் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருக்கும் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு வந்து அவர்களுக்குக் கல்விப் புகட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்நிலையில் தமிழகத்தைச் சேர்ந்த குழந்தைகள் கேரளாவிற்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படுகிறார்கள் என்ற செய்தி; நம் நெஞ்சைப் பிளப்பதாக இருக்கிறது. கருப்பின மக்களின் அடிமை வாணிபத்தை நினைவூட்டுவதாக இருக்கும் அந்தச் செய்தி, நம்மை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்ன இது? இப்போது எந்த ஆதாரமும் இல்லாமல் நீங்கள் பேசினால் எப்படி?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆதாரம் இருக்கிறது. நீங்கள் கேளுங்கள் ; நான் தருகிறேன். பத்திரிகைச் செய்தி, இதற்கு மேல் என்ன வேண்டும்?

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படிப் பத்திரிகைச் செய்திகளை வைத்துக்கொண்டு சொல்லக் கூடாது. மூத்த உறுப்பினர் நீங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு மாநிலங்களில் கொத்தடிமைகளாகப் பயன்படுத்தப்படும் குழந்தைகளையும், பெரியவர்களையும், எத்தனையோ பேரை இந்த அரசு மீட்டு, திரும்பவும் தமிழகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இப்படிப் பொத்தாம்பொதுவாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லாமல், எங்கே இப்படிக் குழந்தைகள் விற்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்தால், உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தமிழ்நாட்டிலேயிருந்து கேரளாவிற்குக் கொண்டுபோய் விற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம், உங்கள்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைக் குற்றஞ்சாட்டுவதுபோல், காங்கிரஸ் ஆளுகிற கேரள அரசை மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார். கொத்தடிமை அங்கு நடக்கிறதென்றால், கேரள அரசைக் கண்டித்து, கொத்தடிமை அங்கு நீங்க வேண்டுமென்று சொல்லுங்கள். இங்கிருந்து கடத்தப்படுகிறார்கள், கொத்தடிமை அங்கு நடக்கிறதென்று சொல்கிறீர்கள்.

*பிற்பகல் 1-40*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தமிழ்நாட்டிலிருந்து கடத்தப்படுகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று சொன்னால், அங்கே சொல்லலாம்; நீங்கள் இங்கே தடுத்து நிறுத்துங்கள் முதலிலே. இதைத்தான் நான் சொல்கிறேன். அதாவது முன்பெல்லாம் மாடுகளைதான் கேரளாவுக்கு ஓட்டிச் செல்வார்கள். (மணியடிக்கப்பெற்றது)



2005 பிப்ரவரி 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எஸ்.ஆர்.பி. அவர்கள், இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு. இதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆதாரம்தான் கொடுத்தேனே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஆதாரம்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சேலம் மாவட்டத்திலே இருந்து வறுமையின் காரணமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பத்திரிகை?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தினமலர் பத்திரிகை. நேற்றையதினம் இந்தச் செய்தியை வெளியிட்டு இருக்கிறது. தினமலர் பத்திரிகையிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சொல்வதைக் கேளுங்கள். பெயர் இருக்கிறது. என்ன ஆதாரம் வேண்டும் என்கிறீர்கள்? நாங்கள் போய் எடுத்து வரமுடியுமா? இதுதான் ஆதாரம். பத்திரிகைச் செய்தி தவறு என்றால் நடவடிக்கை எடுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. பத்திரிகையில் தெளிவாகச் செய்தி இருக்கிறது, சேலம் மாவட்டத்தில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இப்படி ஒரு பத்திரிகையில் செய்தி வந்து இருக்கிறது. அது உண்மையா, பொய்யா என்று தெரிய வேண்டாமா? உண்மையா, தவறான செய்தியா என்று தெரிய வேண்டாமா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, தவறு என்றால், தவறு என்று சொல்லுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், பேசவேகூடாது என்றால் எப்படி? வந்து இருக்கிற செய்தியைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். குற்றச்சாட்டைச் சொல்கிறபோது எங்கே நடந்தது; இந்தப் பத்திரிகையிலே வந்திருக்கிறது; இது உண்மையான செய்தியா; இதை விசாரித்து அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால் பரவாயில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வந்திருக்கிறது என்றுதான் சொல்லிவிட்டேனே? அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு). அதைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடிமை வியாபாரம் நடக்கிறது என்று சொல்வது போல, நீங்களே சொல்லிக்கொண்டு இருப்பது முறையல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்தமாதிரி அடிமை வியாபாரம்தான் முன்பு நடந்தது. தாயுள்ளம் கொண்ட அரசு என்று கூறிக்கொள்ளும் இந்த அரசு, இதற்கு என்ன பரிகாரம் காணப்போகிறது என்பதைதான் நான் கேட்க விரும்புகிறேன்.

வேலையிழந்த தொழிலாளிகள் எதை எதையோ செய்து, வயிற்றைக் கழுவிக்கொண்டு இருக்கிறார்கள். வயிற்றைக் கழுவும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அம்பத்தூர் டன்லப் தொழிற்சாலையில் பணியாற்றிய சந்திரசேகரன் என்ற தொழிலாளி, பில்லி, சூனியம் வைப்பது மந்திரங்கள் போன்ற வேலைகளில் ஈடுபட்டு அதிலும் தவறு நேர்ந்ததால் தாக்குதலுக்கு உள்ளான செய்தியும் வந்து இருக்கிறது. மத்திய அரசு, மாநிலங்களுக்கு எந்தெந்த வகையில் நேசக் கரம் நீட்டினாலும், உடுக்கை இழந்தவன் கைபோல ஓடிவந்து உதவினாலும், அவற்றை மதிக்க மனம் இல்லாமல்கூட, இந்த மாநில அரசு இருந்து வருகிறது. சுனாமி நிவாரணப் பணியில் மத்திய அரசு துரிதமாகச் செயல்பட்டது. ஏராளமான நிதியை ஒதுக்கியது. இப்போது மாநிலங்களுக்கு வரிப் பங்கீட்டில் வழங்கப்பட்டு வந்த அளவையும் உயர்த்தி இருக்கிறது. வருமானத்திற்கு மீறி சொத்து சேர்ப்பவர்கள் மத்திய அரசு அதிகாரிகளாக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, தொழிலாளர் வைப்பு நிதிக்கு வழங்கப்பட்டு வந்த வட்டி விகிதத்தை, 8.5 சதவிகிதத்திலிருந்து 9.5 சதவீதமாக உயர்த்தி அறிவித்திருக்கிறது. இதன்மூலம் தொழிலாளர் அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து முன்வைத்த கோரிக்கைக்குச் செவிசாய்த்து மதிப்பு அளித்து இருக்கிறது. கிராமப்புற வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்திவருவதால் விவசாயிகளுக்கு வங்கிகள்மூலம், ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கவும் நிதி ஒதுக்கியிருக்கிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வழங்கவும்...





**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிவித்ததற்கு, நான் ஆதாரத்தோடு நடந்தவற்றை இங்கே நிரூபிக்க விரும்புகிறேன். பாரதப் பிரதமரிடம் இருந்து கடிதம் வந்ததாக நேற்றைய முன்தினம் நான் இந்த அவையில் அறிவித்ததாக அவர் தெரிவித்திருக்கிறார். நேற்று நான் வாசித்த அறிக்கையில், `மாநில அரசு என்று ஒன்று இருப்பதாகவே கருதாமல், அது அறவே புறக்கணிக்கப்படும் வகையில் உள்ள இச்செயல், சரியான அணுகுமுறையாக அமையாது என்று 30-1-2005 அன்று விளக்கமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலமாக எடுத்துரைத்தேன். தற்போது மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தில் இருந்து சுனாமி நிவாரண உதவிகள் பற்றிய தெளிவான அரசாணை 31-1-2005 ஆம் நாளிட்டு வெளியிடப்பட்டுள்ளது' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர, பிரதமரிடம் இருந்து கடிதம் வந்ததாக நான் குறிப்பிடவில்லை. இதைப்பற்றி நேற்றைய முன்தினம் நான் பேசியதாக மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிவித்தார். நேற்றைய முன்தினம்கூட நான் என்ன சொல்லி இருக்கிறேன் என்றால், 'ஆகவே விளக்கம் கேட்டு நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அதன் பின்னர், மாண்புமிகு பாரதப் பிரதமர் நிதி அமைச்சர் அறிவித்ததை மாற்றி நேற்றுதான் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசிற்கு இந்த நிதி வழங்கப்படும். ஏற்கெனவே அறிவித்ததுபோல் வழங்கப்படும் என்று தெரிவித்து மத்திய அரசின் ஆணைகள் நேற்றுதான் பெறப்பட்டன' என்றுதான் கூறியிருக்கிறேன், இது அவைக் குறிப்பு, இதில் பாரதப் பிரதமர் எனக்குக் கடிதம் எழுதினார் என்று நான் எங்கேயும் கூறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் கேட்பது, பாரதப் பிரதமரிடம் இருந்து உங்களுக்குக் கடிதம் வந்ததா? இல்லையா? அந்தக் கடிதம் வந்திருக்குமேயானால் அந்தக் கடிதத்தை வெளியிடுங்கள் என்று நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வழங்கும் வேலைக்கு உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறோம். தற்போது ஊரகப் பகுதிகளில் தங்குதடையற்ற மின்சாரம் வழங்குவதற்கும் ஒரு கோடி வீடுகளுக்குப் புதிய மின் இணைப்பு வழங்குவதற்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது. என்றாலும், மத்திய அரசு தன் கடமையைத்தானே

செய்கிறது, தர்மம் ஒன்றும் செய்யவில்லையே என்று நம்முடைய முதலமைச்சர் போன்றவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். அவரவர்களுக்கு உரிய கடமைகளைச் செய்வதன்மூலம்தான் நாட்டு மக்கள் எல்லா நலமும், வளமும் பெற்று வாழ முடியும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று மேன்மக்களும் கூறிச் சென்றார்கள். அதைச் செய்யத் தவறும்போதுதான் இந்த அரசை இடித்துரைக்க வேண்டிய கட்டாயம் எதிர்த் தரப்பில் இருக்கும் எங்களுக்கு ஏற்படுகிறது. அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவம், ஆளும் தரப்பில் இருப்பவர்களுக்கு இல்லாதபோது, ஆத்திரம் தலை தூக்குகிறது.

*பிற்பகல் 1-45*

சுனாமி நிவாரண நிதிக்காக, சொந்தமாக தன் உழைப்பின்மூலம் ஈட்டிய நிதியிலிருந்து 21 இலட்சம் ரூபாயைக் கொடுத்த ஒரு மூத்த தலைவரை ஏளனம் செய்வதும், எள்ளி நகையாடுவதும் தேவைதானா? அது ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் முறையா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) 21 இலட்சம் ரூபாய் யார் கொடுத்தார்கள் என்று தெரியாதா? கலைஞர்தான் கொடுத்தார். என்ன பெரியது? கலைஞர் தன் உழைப்பில் இருந்துதான் கொடுத்தார். அதேபோல, சன் டி.வி.-யைப்பற்றி ஒரு செய்தி சொல்லியிருந்தீர்கள். அவர்கள் கேட்ட நாளில், நான் ஊரில் இல்லை என்று சொல்லியிருந்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள், இதுவெல்லாம் ஏற்கெனவே பேசப்பட்டது. துரைமுருகன் அவர்கள் ஏற்கெனவே சொல்லி, இதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி, எல்லாம் முடிந்துவிட்டது. ஏற்கெனவே தேவையான விளக்கங்கள் முதலமைச்சர் அவர்களாலும் வழங்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களைவிட அக்கறையாக துரைமுருகனும் கேட்டு, விளக்கம் சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. தலைவர் சார்பில் 21 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க விரும்புவதாக மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே தெரிவித்து, அதை திரு. ஸ்டாலின் அவர்கள் வழங்குவார் என்பதையும் அவர் தெரிவித்ததால், முறையாக அவருக்கு appointment கொடுக்கப்பட்டு, அவரும் வந்து, அதை நான் நல்ல மரியாதையோடு பெற்றுக்கொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதில் ஏளனம் செய்வது எங்கே



வந்தது என்று தெரியவில்லை. மொத்தத்தில் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்று பேசிய பேச்சு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான்கூட 1991-ல் புதிதாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அப்போது எஸ்.ஆர்.பி. அவர்கள்தான் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக எதிரில் அமர்ந்திருந்தார். அப்போதெல்லாம் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேச எழுந்தால், எனக்குக் கொஞ்சம் கவலையாகவே இருக்கும். ஏனென்றால், பயங்கரமான குற்றச்சாட்டுகளைச் சொல்லுவார். ஒவ்வொரு முறையும் அப்படித்தான். அப்போது எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளை எல்லாம் நானும் serious ஆக எடுத்துக்கொண்டு, காவல் துறையை விட்டு விசாரியுங்கள் என்பேன், அதிகாரிகளிடம் விசாரியுங்கள் என்பேன். விசாரித்துப் பார்த்தால் ஒன்றுமே இருக்காது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இன்றையதினம் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கு மேல், ஒன்றேகால் மணி நேரமாக பேசிக் கொண்டிருக்கிறார். 12-30 முதல் 1-48 வரை பேசியிருக்கிறார். ஏதாவது விஷயம் இருக்கிறதா என்றால், எதுவுமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பேச்சுக்கு, உவமைக்குச் சொல்வார்கள், பெருங்காயம் இருந்த டப்பா என்று. இது பெருங்காயம் இருந்த டப்பாவாகக்கூடத் தெரியவில்லை. வெறும் டப்பா. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு மிகவும் நல்ல முறையில் மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறது, தமிழக மக்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் செய்து கொண்டிருக்கிறது, ஆளுநர் உரையும் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கிறது, ஆகவே, இதில் என்ன குற்றம் காணலாம் என்று திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் மூன்று நாட்களாகத் தேடித் தேடி, துருவித் துருவிப் பார்த்து எதுவுமே கிடைக்கவில்லை என்பதைத்தான் அவருடைய உரை இன்று நிரூபித்திருக்கிறது. அவருக்கு என்னுடைய அனுதாபங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பக்கத்தில் இருந்து துரைமுருகன் ஏதாவது கோளாறு பண்ணிவிட்டாரா என்று எனக்குப் பயமாக இருக்கிறது! (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதேபோல, நேற்று சன் டி.வி. பற்றி இங்கே பேசினார்கள். (குறுக்கீடு) நானும் விளக்கம் சொல்லலாம் அல்லவா? (குறுக்கீடு) சொல்லலாம், பரவாயில்லை. கலாநிதி மாறன் அவர்கள் 18 அல்லது 19 ஆம் தேதி சந்திக்க விரும்புவதாக...

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதிகபட்சம் 5, 6 நிமிடங்கள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 19 ஆம் தேதி கேட்டார்கள். ஆனால், அந்தத் தேதியில் வேறு வேலை இருப்பதாக முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார். கலாநிதி மாறன் கேட்ட 18 ஆம் தேதியில் 24 பேர், முதலமைச்சர் நிதி வழங்கியபோது எடுத்த புகைப்படங்கள், அ.தி.மு.க. அதிகாரபூர்வ ஏட்டில் வெளியிடப்பட்டிருக்கின்றன. 19 ஆம் தேதி 34 பேர், முதலமைச்சரிடம் நிதி வழங்கிய புகைப்படமும் வந்துள்ளது. அதுமட்டுமல்ல, ரூபாய் ஐந்தரை கோடி கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதில் ரூபாய் 4 கோடியை தமிழகத்திற்குத் தரவேண்டும் என்று பிரதமரிடம் கூறியிருக்கிறார்.

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறுவதெல்லாம் இன்று காலை 'இந்து' நாளேட்டில் வந்திருக்கிறது. அதைத்தான் அவர் இங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார். அதை நானும் படித்தேன். இதெல்லாம் உண்மையல்ல. ஏற்கெனவே இந்தப் பிரச்சினை இந்த அவையில் எழுப்பப்பட்டு பல முறை அதற்குத் தெளிவாக விளக்கம் அளித்துவிட்டேன். அதற்குள் நான் மீண்டும் போக விரும்பவில்லை. நான் ஏற்கெனவே அளித்த விளக்கம்தான் உண்மையான விளக்கம். இப்போது சன் டி.வி. தரப்பிலிருந்து, இப்படி அவையில் உண்மையைத் தெரிவித்ததால், என்ன சொல்லலாம் என்று யோசித்து, யோசித்துப் புதிய தகவல்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தகவல்கள் எல்லாம் உண்மையில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற உணர்வுடன் செயல்படவேண்டிய ஓர் அரசு, இன்றுடன் எல்லாம் முடிந்தது என்ற முடிவுக்கு வருமானால், அது உயிரற்ற, செயல்படாத அரசாகத்தான் இருக்க முடியும். தேர்தல்மூலம் ஆட்சிப் பொறுப்பிற்கு



2005 பிப்ரவரி 4] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

வந்தவர்களே, தேர்தலில் நம்பிக்கையிழந்தவர்களாக மாறி விடுவது வேதனையாக இருக்கிறது. மக்களால் வழங்கப்பட்டுள்ள மகத்தான தீர்ப்பையே மதிக்க மனமில்லாமல், அதைக் கொச்சைப்படுத்தும் நிலைக்கு முதலமைச்சர் சென்றிருக்கிறார். மாநில அரசு ஊழியர்கள் அனைவரும் தனக்கெதிராக மாறிவிட்டதாகவும் குற்றம் சாட்டுகிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலில் நாங்கள் நம்பிக்கை இழக்கவில்லை. என்றைக்கும் நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயாராகவே இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்தத் தேர்தல் உண்மையாக நடத்தப்பட வேண்டும். முறையாக நடத்தப்பட வேண்டுமென்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் தேர்தல் முடிவுகள் வந்தவுடனே, எனக்கு எதிரான தீர்ப்பு அல்ல; இந்தத் தீர்ப்புக்கு நான் தலை வணங்குகிறேன் என்று அறிக்கை விட்டார்கள், இது தேர்தல் முடிவுகள் வந்தவுடனே. தேர்தல் முடிவு வந்து 9 மாதங்கள் கழித்துச் சொல்கிறார், மோசடி நடைபெற்றுவிட்டது; அதுவும் அதிகாரிகள் செய்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். நியாயந்தானா? அதிகாரிகள் மேலே குறை சொல்லலாமா? அது உண்மை என்று சொன்னால், நீங்கள் நியமித்த அதே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றும் பல மாவட்டங்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏன், நீங்கள் நியமித்த ஆட்சித் தலைவர்கள்தானே? அதுமட்டும் அல்ல, தேர்தல் கமிஷனே ஒரு ஆட்சித் தலைவர்மீது நடவடிக்கை எடுத்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மட்டுமே தவறு செய்தார்கள் என்று இங்கே யாரும் சொல்லவில்லை. இன்னும் எத்தனையோ தவறுகள் நிகழ்ந்திருக்கின்றன. வாக்காளர் பட்டியல்களில் முறைகேடுகள் நிகழ்த்தப்பட்டதுடன், இன்னும் எத்தனையோ வாக்குச் சாவடிகளில், கிட்டத்தட்ட அனைத்து வாக்குச் சாவடிகளிலும், தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அரசு அதிகாரிகள் அவர்களாகவே 200 வாக்குகள், 300 வாக்குகள் என்று தாங்களாகவே அந்த எலெக்ட்ரானிக் வோட்டிங் மெஷினில் பொத்தானை அழுத்திப் போட்டிருக்கிறார்கள் என்பதும் உண்மைதான்.

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம், உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உரையை முடித்துவிடுகிறேன். தேர்தல் கமிஷன் ஓரிரு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மீது குற்றம் சுமத்தி, அவர்கள் சரியாகப் பணியில் ஈடுபடவில்லை என்று சொல்லி, அவர்கள் இரண்டு பேரையும் மாற்ற வேண்டுமென்று சொன்னது. அதிலே,—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் முறைகேடுகளுக்கும், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாற்றத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் ஏற்கெனவே, நேற்றே இந்த அவையில் தெரிவித்தேன். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றப்பட்டதற்கு, அவரது உடல்நிலைதான் காரணம். மத்தியிலிருந்து தேர்தல் ஆணையத்திலேயிருந்து தேர்தல் அதிகாரி இங்கே வந்து பல கூட்டங்கள் போட்டபோது, அவரால் அந்தக் கூட்டங்களில்கூட கலந்துகொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு அவர் உடல்நலம் குன்றியிருந்தது. அதனால் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றப்பட்டார். இன்னொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வாக்குப்பதிவு நாளன்று வாக்குச் சாவடிகளில் தேர்தல் பணியில் ஈடுபடவேண்டிய அதிகாரிகளுக்கு ஒரு 'Training Camp' நடத்த வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருந்தது. ஆனால் மத்திய, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரி வந்து அங்கே பார்த்தபோது, அந்த 'Training Camp'-ற்கு எந்தவிதமான ஏற்பாடுகளையும் அவர் செய்யவில்லை. ஆகவேதான், அவர் மாற்றப்பட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இப்போது, மாற்றப்பட்ட ஒருவரை மீண்டும் அதே இடத்திலேயே கொண்டுவந்து மாவட்ட ஆட்சித் தலைவராக நியமித்திருக்கிறீர்கள். அதுமட்டும் அல்ல, ஒரு தேர்தலை நீங்கள் எதிர்த்து வழக்குத் தொடுக்க வேண்டும் என்றால், அரசியல் சட்டம் தெளிவாகக் கூறியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இன்னும் ஒரு மணித் துளியிலே உரையை முடியுங்கள். நிறைவுப் பகுதிக்கு வாருங்கள்.



2005 பிப்ரவரி 4]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அரசியல் சட்டம் ஒரு தேர்தலுக்கு எதிராக வழக்குத் தொடுக்க வேண்டுமென்றால் எப்படி வழக்குத் தொடுக்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. அதுமட்டும் அல்ல, இந்திய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி வழக்குத் தொடுக்க வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும். அதுகுறித்து மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே பாடம் நடத்தத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பாடம் நடத்தாவிட்டாலும் கூட, இது காலம் கடந்த ஞானோதயம் என்று சொல்ல வருகிறேன். அவ்வளவுதான். மக்களாலும், அரசு ஊழியர்களாலும் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்டுவிட்ட ஒரு கட்சியினர், யாருக்காக ஆட்சியில் தொடருகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு, வீண் பழி சுமத்துவதும், புலம்புவதும் யாருக்கும் பெருமை சேர்க்காது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-55

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்த கட்சி என்று சொன்னார்கள். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு திருமங்கலம், இராமநாதபுரம் நகர்மன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியினால் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தன் உயிரைக் கொடுத்து நீதியை நிலைநாட்டிய பாண்டிய நெடுஞ்செழியனும், பெற்ற மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்று பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழனும் ஆண்ட இந்தப் புண்ணிய பூமியில், ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டதற்கு நன்றி செலுத்தவும், பின்னர் மக்களால் நிராகரிக்கப்பட்டதை மதித்து நடக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஆட்சியை விட்டு விலகி நிற்பதுதான் அதற்குரிய ஒரே பரிகாரமாக அமைய முடியும் என்பதைத் தோழமையுடன் எடுத்துக்கூற விரும்புகிறேன். வணக்கம்.

[2005 பிப்ரவரி 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை *(7-2-2005)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-55* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*12. 2003-2004* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. (*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*12. 2003-2004* ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

*13.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. *(2003-2005)*

*14.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. *(2003-2005)*

*15.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து நான்காவது அறிக்கை. *(2003-2005)*

*16.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2003-2005)*

*17.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபதாவது அறிக்கை. *(2003-2005)*

*18.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து ஒன்றாவது அறிக்கை. *(2003-2005)*



2005 பிப்ரவரி 4]

*19.* பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்து இரண்டாவது அறிக்கை. *(2003-2005)*

*20.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. *(2003-2005)*

*21.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. *(2003-2005)*

*22.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. *(2003-2005)*

*23.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. *(2003-2005)*

*24.* மனுக்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. *(2003-2005)*

*25.* மனுக்கள் குழுவின் நூறாவது அறிக்கை. *(2003-2005)*

*26.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *50* வரை)

D
V24,31'005
P05.68.1
226628
600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Commissioner of
Stationery and Printing,
Chennai-600 002.